

கல்கி
KALKI 11-1-81 90 காசு



Pongal


ஐந்தாம்
உலகத் தமிழ்
மாநாடு
மதுரை
1981 சனவரி 4-10
என்னுயிர்த் தமிழே
இன்னுயிர்த் தாயே
பொன்னே மணியே
புதுப்புனல் அலையே
மன்னவன் மதுரையிலே
மகுடம் சூட்டி
உன்னை வணங்கவே
உயிர் படைத்தோமே!
அனைவரும் வருக!
வெளியீடு
தமிழ்நாடு அரசு

காதலிக்கு வழி சொல்லுங்கள்



மேலேயுள்ள 100 கட்டங்களையும் நூறு அறைகளாகவும், கரும்புள்ளிகளைக் கதவுகளாக வும் கற்பனை செய்து கொள்ளுங்கள். இமேயுள்ள காதலி 10ம் எண் அறையினுள் அமர்ந் திருக்கும் அவன் காதலியைச் சென்றடைய ஏங்கிக் கொண்டிருக்கிறான். அவன் எவ்வாறு செல்வது? ப்ளீஸ்... கொஞ்சம் வழி காட்டுங்கள்!


எஸ். பாலகிருஷ்ணன்


விடை: 91, 92, 82, 83, 73, 74, 64, 54, 44, 43, 42, 32, 22, 23, 33, 34, 35, 25, 15, 16, 17, 27, 37, 38, 28, 18, 19, 9, 10

மணமகள் தேர்வு!

சமீபத்தில் பெங்களூரில் பாரத் எலெக்ட்ரானிக்ஸ் பிராமண சங்கம் பிஜாவர் மட சுவாமிஜி ஆசீர்வாதத்தோடு புதுமையான முறையில் திருமண ஒப்பந்த முறையை அறிமுகப் படுத்தியது. திருமண எண்ணம் கொண்ட பெண்களும், ஆண்களும் ஒரு திருமண மண்டபத்தைப் பொது இடமாக அமைத்துக் கொண்டு இரு பகுதியாக எதிர் எதிரே அமர்ந்திருந்தனர். பிள்ளையைப் பற்றி வேலை, படிப்பு, பிரிவு முதலிய விவரங்கள் அறிவிக்கப்பட்டதும் அவர் எழுந்து நின்று எதிர் பகுதியில் உள்ள பெண்களில் தமக்குப் பிடித்தமான பெண்ணை (அவரவர் பிரிவைச் சார்ந்தவர்கள் என்பதற்கு அடையாள மாகப் பெண்களுக்கு வண்ண பேட்ஜ்கள் கொடுக்கப்பட்டிருந்தன) குறிப்பிட்டார். உடனே வந்திருக்கும் பெண்களின் பெற்றோர்களும், பிள்ளைகளின் பெற்றோர்களும் தனித் துப் பேச வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இக் கூட்டத்துக்கு வந்திருந்த பெண்கள் தொகை 300 ஆண்கள் 100. வரதட்சணை முறையைத் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத் தில் உருவான ஏற்பாடு.

— அ. குமார்






ஹோட்டல் பேலா
ஃபைவ் ஸ்டார்
அரிவாள்.. கத்திக்கு எக்ஸ்ட்ரா அஞ்சு ரூபா!
பொங்கலோ பொங்கல்!
தும்பை விட்டுட்டு வாலைப் புடிச்சேன்.. உன் பொங்கலுக்கு மாடு இப்படியா மெரளும்! பாவம் வாயில்லா ஜீவன் வாலில்லா ஜீவனை பயந்து ஓடுதே!
போதும் போதும் சிலம்பாட்டம் ஆடறவங்களெய்யா ஒட்டடை அடிக்கக் கொண்டாரணும்?
ஹோம் சயன்ஸ் ஸ்டூடண்ட்ஸ் பொங்கல் சமைச்சா அதை எடுக்க இஞ்ஜினியரிங் ஸ்டூடண்ட்ஸ் தான் வரணும் போலிருக்கு! பொங்கல்னு மண் பானையிலேதான் சமைக்கணும்னு தலையிலே அடிச்சண்டேன்! மண்பானையா இருந்தா உடைச்சுப் பொங்கலை எடுத்துடலாமே!

Kalki Shopping Page





EBE

Dealers for

Ganesh Fan, Allwyn TV, Fridges, Standard TV, Telerama TV, etc., Empire Radio, Transistor and Two-in-one, Cookers, Master Clocks, Ruby Wet Grinder, Moulimex, Steel Furnitures etc.

EVER BRIGHT ENTERPRISES


19, Perambur
Barracks Road,
Madras – 600012
Phone: 663416

நாடெங்கும் புகழ் பெற்ற **சாலிடெர்** டெலிவிஷனுக்கு

தமிழகத்தின் தனிப்புகழ் பெற்ற

சூப்பர் டீலர்

ஏஜென்ஸீஸ் &
ஏஜென்ஸீஸ் A/C



18, தெற்கு உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17.
போன்: 440004/440725

Solidaire

SOLID STATE TV - that seldom fails!

"சாலிடெர்" டிவிக்குரிய அனைத்து துணை சாதனங்களையும், மிக நியாயமான விலையில் தருகிறோம். இவைகளின் உற்பத்தியாளர்களாகவோ அல்லது டீலர்களாகவோ நாங்களே இருப்பதால் இவை தரத்தில் மிக உயர்ந்தவை.

புள்ளிகள் செய்திகள்

இட்டிலி வடைக்கு ஆட்டுக்கல்லில் மாவு அரைத்து, தினசரி
ஊதியம் ஐந்தணா பெற்று, ஓட்டலின் வாசலிலேயே இரவுப் படுக்கையை
விரித்து நாட்களை ஓட்டியவர்.
பின்னர் மவுண்ட் ரோட் ஓட்டலில் சிப்பந்தியாகி, படிப்படியாக வளர்ந்து, அதே மவுண்ட்
ரோடில் 'உடுப்பி கிருஷ்ண விலாஸ்' என்ற சிறிய ஓட்டலை நடத்த ஆரம்பித்தார்.
முதன் முதலாக 'உடுப்பி' என்ற பெயரைக் கடைப் பெயருடன்
சென்னையில் இணைத்தவர் இன்று இந்தியாவின் பல நகரங்களில் மட்டுமின்றி
நியூயார்க்கிலும் தமது ஓட்டல் கிளையைத் திறந்து விட்டவர்...
யார் அவர்?
உட்லண்ட்ஸ் ஓட்டல் அதிபர்

கே. கிருஷ்ண ராவ்

சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்த மாணவர்,
தம் சக நண்பனுடன் ரேடியோ நிலையம் சென்று வரத் தொடங்கினார்.
நாளடைவில்—
ரேடியோ நாடகங்களில் நடிக்கவும் தொடங்கிவிட்டார்.
திரைப்படம் ஒன்றுக்கு கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பு தேடி வந்தும், தந்தையார்
அனுமதியளிக்க மறுத்த காரணத்தால் மீண்டும் சட்டப் படிப்பில் ஈடுபட்டுப்
படித்துப் பட்டம் பெற்றார்.
காவல் துறை அதிகாரியாக மாறினார்... உத்தியோகத்திலிருந்தவாறே குறுநாவல்கள்,
ரேடியோ நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், எழுதிக்கொண்டிருக்கும்
அவர் பெயர்?

பொன். பரமகுரு

நெல்லை மாவட்டத்தில், தென்னங்கீற்று முடைந்து விற்பனைக்குச் சுமந்து செல்லும் பையனாக
முதல் முதல் நாலணா ஊதியம் கண்டவர்...
சென்னையில் அரிசிக் கடை, மளிகைக் கடைகளில் மாதம் எட்டு ரூபாய்
சம்பாதித்தவர்
குறுக்கெழுத்துப் போட்டிக்கு டெப்போ ஏஜண்டாக மாறியவர்...
இன்று...
இந்தியாவின் பல நகரங்களில் தவணை முறைகளில் பொருட்களை அதிகம் விற்பனை செய்யும்
நிறுவன அதிபர் ஆகிவிட்டார்
அவர்தான்

வி. ஜி. பன்னீர்தாஸ்

1955ம் ஆண்டு நவம்பர் மாதம்.
கேரளாவில் உள்ள பெரிந்தலம் மன்னா எனும் ஊரில், உயர்நிலைப் பள்ளி
மாணவர் கழகக் கூட்டம்.
கல்வி இயக்குனர் வந்திருந்தார்
மாணவர் இருவர் கூட்டம் ஆரம்பமான சிறிது நேரத்துக்குள் மயங்கி விழுந்தனர்.
கல்வி இயக்குனர் காரணம் விசாரித்தார்.
''பசி மயக்கம் — ஏழை மாணவர்கள்...'' என்று பதில் கிடைத்தது.
மனம் கலங்கி வருந்தி சிந்தனையில் ஆழ்ந்தார்.
அடுத்து நெல்லையில் ஒரு மகாநாட்டில் மலைபோல மாலைகள் விழுந்ததைக் கண்ட கல்வி
இயக்குனரின் மகன் வள்ளுவன், ''இப்படி மாலைகளுக்குப் பணம் செலவிடுவதை
உபயோகமாக ஏழை மாணவர்களுக்கு உதவலாமே'' என்றான்.
அதே பந்தலில் தோன்றிய கருத்துத்தான் மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டம்!
பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் அடைந்தார்கள்.
பின்னால் சென்னைப் பல்கலை கழகத்தின் துணைவேந்தரான அவர்

நெ. து. சுந்தரவடிவேலு

—தொகுப்பு: ஏ. சுவாமிநாதன்

கே. கிருஷ்ணராவ்



பொன். பரமகுரு



வி. ஜி. பன்னீர்தாஸ்



நெ. து. சுந்தரவடிவேலு




அச்சுறுத்தல்!
ஈரான்
பணயக் கைதிகள்


அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தான் வரமுடியும் என்று தாங்கள் செப்பியிருந்தால் தான் என்ன!... அந்நாள் வரை உலகத் தமிழ் மகாநாட்டை யாம் நீடித்திருப்போம்!
நாராயணசாமி நாயுடு விடுதலை பெறும் வரை விவசாயிகளைத் தி.மு.க. தத்து எடுத்துக் கொண்டிருக்கிறது!
விவசாயிகள் கிளர்ச்சி

பாரதீய ஜனதா

பாரதிய ஜனதா கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வாஜ்பாய் நமது முதல் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பெறுகிறார். கட்சியைச் சேர்ந்த அனைவராலும் தலைவராக அவர் அங்கீகரிக்கப்பட்ட கையோடு கட்சியின் முதல் தேசிய மகாநாடும் பம்பாயில் விமரிசையாக நடந்தது.

எதிர்பார்த்ததைவிட மிக அதிகமாகப் பல்வேறு மாநிலங்களிலிருந்து 55,000 பிரதிநிதிகளுக்கு மேல் திரண்டு நிர்வாகப் பொறுப்பு ஏற்றிருந்தவர்களைத் திணற அடித்ததானது கட்சி, மக்களிடையே அடைந்து வரும் செல்வாக்கை உணர்த்தியது என்றால் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் 40 வயதுக்கும் குறைந்தவர்கள் என்பது எதிர்கால இந்தியா இக் கட்சியின்பால் ஈர்க்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியது. இவ்வளவு கூட்டத்தை எதிர்பாராததால் பிரதிநிதிகளுக்கு வசதிகள் குறைவாகவே இருந்திருக்கும் எனினும் எந்த விதமான அசம்பாவிதமும் இன்றி மாநாடு நடந்து முடிந்ததானது கட்டுக் கோப்பை எடுத்துக் காட்டுகிறது.

மகாநாட்டில் ஜனநாயக மரபுக்கு ஏற்ப, விவாதங்கள் கருத்துப் பரிமாற்றங்கள் தாராளமாக இடம் பெற்றன. வாஜ்பாயையே எதிர்த்துக் காரசாரமாகப் பலர் பேசினர். ஆயின் தீர்மானங்கள் வோட்டுக்கு விடப்பட்டு முடிவு எடுத்த பின் கட்சியில் உள்ள அனைவரும் அந்த முடிவுக்குக் கட்டுப்படுவது சிறப்பு.

நடைபெறுகின்ற இந்திரா காங்கிரஸ் ஆட்சி அதிகமான விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் உள்ளானதில் வியப்பில்லை. ஆனால் அந்த விமர்சனங்களில் விவேகமும் கண்டனங்களில் கண்ணியமும் இருந்தன என்பது மனநிறைவைத் தருகிறது. ஆப்கானிஸ்தானத்தில் சோவியத் ஆக்கிரமிப்பை நமது அரசு வன்மையாகக் கண்டிக்காததால் அண்டை நாடுகளிலும் உலக அரங்கிலும் நமது மதிப்பு குறைந்து போயிருப்பதை விளக்கினார் வாஜ்பாய். ''‘அயல் நாடுகளிலிருந்து நமக்கு ஆபத்து ஏற்படும்’ என்று பிரதமர் அடிக்கடி கூறி வருவதும், நாட்டில் சட்ட ஒழுங்குப் பிரச்னைகளைத் தலைவிரித்து ஆட அனுமதிப்பதும், பொருளாதார சீர் குலைவைச் சரிப்படுத்தாமல் மெத்தனம் காட்டுவதும், ஜனாதிபதி ஆட்சி முறை பற்றி விவாதம் நடத்தக் கோருவதும் எல்லாம் சேர்ந்து எங்கே கொண்டு விடும்?'' என்று வினா எழுப்பிய வாஜ்பாய், ''சர்வாதிகாரத்துக்கு அடிகோலும் ஆபத்து உள்ளது'' என்று பதிலும் அளித்து மக்களை எச்சரித்திருக்கிறார்.

பல அம்சங்களில் இன்றைய ஆட்சியைக் குறை கூறுவதுடன் நில்லாது ஆக்கபூர்வமான யோசனைகளும் கூறப்பட்டுள்ளன, கொள்கைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. பொருளாதார மேம்பாட்டுக்கு காந்திய சோஷலிஸம் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஷுமோஹர் போன்ற நவீன பொருளாதார மேதைகளும் கூட போற்றி ஆதரவு தரும் காந்திய பொருளாதாரத்தைப் பத்தாம் பசலித் தனமானது என்று ஒதுக்கி விட்டால் நஷ்டம் நமக்குத்தான். இதனை விரிவாக விளக்கிய மாநாடு, மதச் சார்பின்மை என்பது மதங்களைப் புறக்கணிப்பதல்ல, அனைத்து மதங்களுக்கும் சம வாய்ப்பளித்து மக்களிடையே இறையுணர்வையும் பய பக்தியையும் வளர்ப்பதுதான் என்று அத்யாவசியமான ஒரு கருத்தையும் வெளியிட்டிருக்கிறது. மேலும், சிறுபான்மை வோட்டுக்களைப் பெற்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இடங்களை அடைய வழிவகுக்கும் இன்றைய தேர்தல் முறையை மாற்றி அமைக்கக் கட்சி உறுதி பூண்டிருப்பதானது வரவேற்கத்தக்கது.

இப்படி பல அரிய நல்ல கருத்துக்களை மக்கள் முன் வைத்த பாரதிய ஜனதா மாநாட்டின் வெற்றி, பிரதமர் இந்திராவை ஒரு கலக்குக் கலக்கியிருக்க வேண்டும். இல்லையெனில் ''அன்று காந்தியைக் குறை கூறியவர்கள் இன்று காந்திய சோஷலிஸம் பேசுகிறார்களே!'' என்று அவர் அங்கலாய்த்திருக்க மாட்டார்.

இந்திரா காந்தி கூறுவதை உண்மை என்றே கொண்டாலும், அன்றே காந்தியின் சீடர்கள் என்று கூறிக்கொண்டு இன்று காந்தீயத்தை மறப்பதைவிட, அன்று காந்தியை எதிர்த்த போதிலும் இன்று காந்தீயத்தை மதிப்பது ரொம்ப ரொம்ப மேலல்லவா?

1981 ஜனவரி 11

ரௌத்திரி மார்கழி 27

மலர் 39 : இதழ் : 24



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

(சென்ற வாரம்: வஸந்த் காதலித்து ஏறக்குறையக் கல்யாணம் செய்துகொள்கிற நிலையில் இருப்பதைக் கணேஷிடம் சொல்கிறான். அவள் பெயர் இனியா. அப்பா சரித்திரப் பேராசிரியர் அப்பாதுரை. அவரை வசீகரிக்க வஸந்த் சரித்திரம் படிக்கிறான். ''உருப்பட மாட்டே நீ'' — கணேஷ். இனியாவின் அப்பாவைச் சந்தித்து அவள் கழுத்தைக் கேட்கத் தலையைக் கலைத்துக்கொண்டு ஓடுகிறான் வஸந்த். அங்கே இனியா கண்ணீருடன் அப்பாவைக் காணோம் என்கிறாள். டெலிபோன் வருகிறது. அப்பாதுரை இனியாவிடம் தான் எழுதின 'ராஜ ராஜன் இனைறு' என்கிற கட்டுரையுடன் பல்லாவரம் வரும்படி கூறுகிறார். புரியவில்லையல்லவா? வஸந்துக்கும் புரியவில்லை. படியுங்கள்.)

2

ஸ்டியரிங்கில் உட்கார்ந்து ஸ்டார்ட்டரை கிர்ர்ர்ரக்கி காரை விரட்டிய வஸந்த், ''இனியா, என் நெத்திலே கவலை ரேகைகள் படிந்திருக்கே கவனிச்சியோ'' என்றான்.

''வஸந்த், எனக்கும் கவலையாத்தான் இருக்குது.''

''மெட்ராஸ்ல நடு சென்டர்ல இருந்த ஆளுக்குப் பல்லாவரத்தில் என்ன வேலை? அங்க கல்லை உடைப்பாங்களே தவிர கல்வெட்டு ஏதும் கிடையாதே!''

''புரியலையே!''

''அப்புறம் இது என்ன கட்டுரை? ராஜ ராஜன் இனைறு? கொஞ்சம் சாம்பிள் படி!''

இனியா சற்றுத் தடுமாற்றத்துடன் கையிலிருந்த கட்டுரையைப் படித்தாள்.

''ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொள காந்தளூர்ச் சாலையும் கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நாளம்பாடியும் தடிகைபாடியும்....''

''நாயுடு ஹால் பாடியும்... ஹோல்டான் நிறுத்து. கார் உதறுது. கட்டுரை பூரா பாடியா?''

''ஆராய்ச்சிக் குறிப்புக்கள் இருக்கு. South Indian Inscriptions Vol III. No 44 on....''



சுஜாதா

வஸந்த்! வஸந்த்!

''ஆமா, எனக்கு ஒரு சின்னச் சந்தேகம். உங்கப்பா நினைப்படி இப்படித்தான் எழுதிக்கிட்டிருப்பாரா?''

''ஆமாம்!''

''நான் ஆடறேன்! ஐ ஸ்வே! இதெல்லாம் யார் படிக்கிறாங்க! அவரைத் தவிர!''

''ஏன், நிறைய ஸ்காலர்ஸ் இருக்காங்க!''

''அப்ப உன்னைக் கல்யாணம் பண்ணிட்டா நினைப்படி இந்த மாதிரி ஸ்வஸ்தி ஸ்ரீயா?''

''முதல்லே அப்பாவைச் சந்திக்கலாம்.''

''அதானே!'' என்று வஸந்த் காரை மிதித்தான். ஒரு அனகாபுத்தூர் பஸ்ஸைச் சாப்பிட்டுவிட்டு 'நாறு' என்றது முன்.

''என் ஜாதகராசி! இடது பக்கம் காதலி. கார்! ஏகாந்தமா மவுண்ட் ரோடு! பேச்சென்னவோ ராஜராஜன் கிணறு! பல்லாவரத்திலே எங்கே?''

''ஸ்டேஷனுக்குப் பக்கத்திலே வரச் சொல்லி இருக்கார் வஸந்த்! அப்பா குரல்ல பதற்றம் இருந்தது. பக்கத்திலே யாரோ இருந்து சொல்லிக்கொடுக்கிறாப்பல பேசினார். ஒருவேளை கிட்நாப் பண்ணியிருக்காங்களோ!''

''கிட்நாப்பா! ஒரு பாட்டம் 'ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ திருமகள் போல பெருநிலச் செல்வத்தை அளந்து விட்டார்'னு கேள்வி கேட்காம பார்ட்டி விட்டில கொண்டு அவரைச் சேர்த்துடும்!''

''வஸந்த்! ராத்திரிக்குள்ள அப்பா திரும்பச் சேரலேன்னா?''

''ம்ஹூம். ராத்திரி நீயும் நானும் தனியா இருக்கக் கூடாது. விளக்கு அணையும் மழை பெய்யும்... அப்புறம் ஐ.வி. சசி படம் மாதிரி ஏதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு மேலன்னு ஆய்டும்... என் கற்பு என்ன ஆறது? பேசாம உன் உறவுக் காரங்க வீட்ல கொண்டு விட்டுடறேன்!''

''வஸந்த்! நீங்க எப்ப சீரியஸாப் பேசுவீங்க சொல்லுங்க.''

''கவலைப்படாதே கண்ணே! வாழ்க்கைல எதையுமே சீரியஸா எடுத்துக்காதே. நேத்திக்கு இருக்கறவன் இன்னைக்கு இல்லே! நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகுன்னு வள்ளுவர் சும்மாவா சொன்னார்! பல்லாவரம் வந்துருச்சு பாரு!''



வஸந்த் பல்லாவரம் ரயில் நிலையத்தின் வாசலில் நிறுத்தி ''நீ அப்பா வராரா பாரு நான் குட்டியா ஒரு தம் அடிச்கட்டு வரேன்!'' என்று காருக்கு வெளியே வந்தான்.

மின் ரயில் ஒன்று வந்து நிற்க ஸ்டேஷன் வாசல் ஜன உயிர் பெற்றது. இருட்டி விட்டது. சைக்கிள் ஸ்டாண்டில் வண்டிகளை விடுவித்துக் கொண்டு மனைவிகளை நோக்கி டிபன் பாக்ஸுடன் பவர் சென்றார்கள். இரண்டு இந்தியப் பிரஜைகள் (வயசு 4, 6.) பிச்சைக்கு ஆயத்தமானார்கள். மண்ணெண்ணெய் விளக்கில் பலாச் சுளைகள் கூப்பிட்டன.

வஸந்த் சற்று அவசரமாக சிகரெட்டை இழுத்தான். கடையில் தொங்கிய 'காமத் தீ' என்று பின் குத்தின புத்தகத்தைச் சற்றுப் பிரித்தான். ''ஜெயஹேமா தன்மா'' வரைதான் படிக்க முடிந்தது. ''வஸந்த் வஸந்த்!'' என்று குரல் கேட்டுத் திரும்பினான்.



அருள் வாக்கு

எழுத்தாளர் கடமை

● அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படும் வரையில் எல்லாக் கல்வியையும் வாய்மொழியாகச் சொல்லிக் காது வழியாகக் கேட்டே வழி வழியாக வளர்ந்து வந்திருக்கிறது. அந்தக் காலத்தில் பனை ஓலையில் எழுதுகிற தேர்ச்சி பெற்றவர்கள் சிலரே இருந்தார்கள். மற்றபடி, பெரிய வேதாந்தம் தெரிந்தவர்கள் கூட எல்லாம் செவி வழியேதான் கேட்டறிந்தார்கள். அச்சு இயந்திரம் வந்தது. அப்புறம் நிறையப் புத்தகங்கள், நியூஸ் பேப்பர்கள் ஏற்பட்டுவிட்டன. பௌராணிகர்களின் இடத்தை இவை பிடித்துக் கொண்டன.

எனவே பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும்தான் இன்றைய பௌராணிகர்கள். சூதரும் மற்ற பௌராணிகர்களும் எப்படி தர்மங்களை ரசமான கதைகள் மூலம் பொதுஜனங்களிடையே பிரசாரம் செய்தார்களோ, அவ்விதமே செய்ய வேண்டியது இன்றைய பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களின் கடமை. ஜனங்களுக்குப் பிடித்ததை மட்டுமே சொல்வது என்று வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களின் அறிவை, மனத்தை – உயர்த்துகிற விஷயங்களையே எழுத வேண்டும் – இதைச் சுவாரசியமாகச் செய்ய வேண்டும். உத்தமமான விஷயங்களைப் புதுப் புது விதங்களில் உணர்த்த வேண்டும். பத்திரிகையாளர்கள் வாழ்நாள் முழுவதும் மாணாக்கர்களாகவே இருந்தால்தான் தாங்களும் புதுப் புது விஷயங்களை அறிந்து, மற்றவர்களுக்குப் பிரசாரம் செய்ய முடியும்.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

இனியா காருக்கு வெளியே படபடப்புடன் நின்று கொண்டு கையை உதறிக் கொண்டிருந்தாள். வஸந்த் அவள் அருகே வந்தான்.

''என்ன இனி?''

''புடிங்க அந்த ஆளைப் புடிங்க!''

''எந்த ஆளை?''

''அதோ ஓடறான் பாருங்க! கட்டுரையை வெடக்குன்னு என்கிட்ட இருந்து புடுங்கிகிட்டு ஓடறான்!''

வஸந்த் அவள் காட்டிய திசையில் பார்த்தான். ஸ்டேஷனை விட்டு விலகின பாதையில் ஒருவன் ஓடுவது தெரிந்தது. வஸந்த் துரத்தினான்.

சரசரவென்று நடக்கும், நிற்கும், பேரம் பேசும், சைக்கிள் தள்ளும் ஜனங்களின் ஊடே திறமையாக ஓடினான். அவன் திரும்பிப் பார்க்காமல் ஓடுவது தெரிந்தது. அவன் மேல் கண்கள் பதித்து ஓடினான். ராஜராஜன் இனைறு பல்லாவரம்... அந்தக் கட்டுரை யாருக்கோ முக்கியம். சே! சிகரெட் குடிக்க இறங்கியிருக்கக் கூடாது...

வஸந்த் சாலையின் முனைக்கு வந்து ப்ரேக் போட்டாற் போல நிறுத்தினான். எதிரே சினிமாத் தியேட்டர். இடது பக்க முனையில் உடுப்பி ஹோட்டல். கோலாகலமாக சாயங்கால வியாபாரக் கடைத் தெரு. வெளிச்சம். லாரிகள், பஸ்கள்.

ஆசாமி உடுப்பிக்குள் துடிப்பாக நுழைவதைப் பார்த்து வஸந்த் நேராக அங்கே சென்றான். வாசலில் கல்லா மேஜையில் முதலாளி சில்லறையைச் சீய்ச்சிக்கொண்டிருக்க ஹால் பூரா டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். காற்றில் வினித பாரதியும், ஊதுபத்தி மணமும் கலந்திருந்தது. மெர்க்குரி விளக்கின் மேல்தட்டு இனிப்புகள் காத்திருந்தன. வஸந்த் அந்த வட்டாரத்தைப் பான் செய்தான். ஓடி வந்தவன் புதிதாக நுழைந்திருக்கிறவன். இன்னும் சாப்பிட ஆரம்பித்திருக்க மாட்டான். (அம்மாதிரி பத்துப் பதினைந்து பேர் இருந்தார்கள்) வெள்ளைச்சட்டை அணிந்திருந்தானே (பாதிக்கு மேல் வெள்ளைச் சட்டை!) அதோ தண்ணீர் குடிக்கிறானே! ம்ஹூம். பக்கத்தில் மனைவி.

ஒரு உடுப்பி ஹோட்டலில் மறைவது எவ்வளவு சுலபம்! போதாக் குறைக்கு மாடி மேலே மீல்ஸ் ரெடி என்று வரவேற்றது.

''உக்காருங்க ஸார். என்ன வேணும்?''

''ஒண்ணுமில்லே. உள்ள ஒரு ஆள் வந்திருக்கான். பாக்கறேன்.''

''அப்ப ஓரமா நில்லுங்க. பீக் டயம் பாருங்க!'' வஸந்த் சற்று நேரம் புரியாமல் நின்றுவிட்டுத் தோல்வியுடன் திரும்பிவிட்டான். இனியா! அவளைத் தனியாக விட்டு வந்திருக்கிறேன். ஓ! என்ன அபத்தமான துரத்தல்! மடத்தனம்.

வஸந்த் விரைவில் ரயில் நிலைய வாசலுக்குத் திரும்பினான். கார் அங்கேயே இருந்தது. கதவு திறந்தே இருந்தது. இனியாவைக் காணவில்லை. திடுக்கிட்டான். எங்கே அவள்! ஸ்டேஷன் வாயிலுக்கு ஓடினான். மாடிப் படி ஏறி நின்று இருப்புப் பாதையையும் பிளாட்பாரத்தையும் பார்த்தான். இறங்கி வந்து கடையில் விசாரித்தான்.

''ஏம்பா இங்க ஒரு பொண்ணு நின்னுகிட்டிருந்ததே பாத்தியா?''

''பொண்ணு? என்ன வாத்தியாரே!'' கடைக்காரன் அவனைப் பார்த்த பார்வை 'காமலோலா' என்றது. சே! கேட்ட விதம் தப்பு. கேஸ் என்று நினைத்துக் கொள்வான். வஸந்துக்கு அன்று மாலை நிகழ்ச்சிகள் அனைத்தும் புரியவில்லை. ஒன்றுடன் ஒன்று தொடர்பே இல்லை. கடைசியில் எல்லாவற்றையும் கோட்டை விட்டு நிற்கிறான். போலீஸ் ஸ்டேஷன்? ம்ஹூம். முதலில் கணேஷ்.



லக்ஷ்மி

எழுதும்

புதிய தொடர் கதை

கழுத்தில் விழுந்த மாலை......

ஜனவரி 25உ இதழில் ஆரம்பம்

''பாஸ்! வஸந்த்!''

''ஏய்! எங்கேடா காரு! நீ பாட்டுக்கு என்னைத் திராட்டிலே விட்டுட்டு எடுத்துட்டுப் போயிட்டே! எங்கே இருந்து பேசறே?''

''பல்லாவரத்திலே ஒரு ஹோட்டல்லே இருந்து.''

''என்ன ஆச்சு உன் காரியம்?''

''ஊத்திக்கிச்சு!''

''பல்லாவரத்திலே என்ன செய்யறே?''

''நாலு விரல் நகத்தை இதுவரைக்கும் மொண்ணையாக் கடிச்சு முடிச்சிருக்கேன். இனியாவைக் காணோம்.''

''ஹூ இஸ் திஸ் இனியா?''

''என்ன பாஸ் இப்படிக் கேக்கறிங்க? என் கர்ல் ஃபிரெண்டு சரித்திரப் பேராசிரியர் மகள்.''

''அவளா? சொல்லு.''

''ரெண்டு பேரும் ராஜ ராஜன் கிணத்தை எடுத்துக்கிட்டுப் பல்லாவரம் வந்தமா? ஒரு ஆள் கட்டுரையை அவ கிட்ட இருந்து பிடுங்கிட்டு ஓட, அவனை நான் துரத்த. அவனும் ஆப்படலே. இனியாவையும் காணோம்!''

''ஏய் வஸந்த்! என்ன ஏதாவது 'பாட்' கிட் போட்டிருக்கியா?''

''சேச்சே அதெல்லாம் நிறுத்தியாச்சே.''

''பின்ன ஏன் என்னவோ உளர்றே?''

''விவகாரம் முழுக்கவே உளறல்தான் பாஸ். பரம உளறல்.''

''அப்ப அந்தப் பொண்ணைக் காணமா? அவ்வளவுதானே! நீ அடிக்கிற ஜோக்கைத் தாங்க முடியாம புறப்பட்டுப் போயிருப்பா. பேசாமத் திரும்பி வா. பார் அஸோஸியேஷன் மீட்டிங் இருக்கு எனக்கு.''

''போலீஸ்ல புகார் கொடுக்கலாமான்னு யோசிக்கிறேன்.''

''அவசரப்படாதே. திரும்பி வா முதல்ல.''

''எனக்கு அழுகை வரும் போல இருக்கு பாஸ்!''

''வீட்டுக்கு வந்தப்புறம் அழு. ஒரு பொண்ணைத் துரத்தின இந்தக் கதிதான். வந்து தொலை. விசாரிக்கலாம்.''

'''100 பாம்புகளுடன் கண்ணாடிப் பெட்டிக்குள் 100 நாள் ஒருத்தர் இருக்கப் போகிறாராம்' என்று நான் சொன்னதற்கு, 'பூ! இது என்ன பிரமாதம்?' என்றீர்களே, அத்தை! ஒரே ஒரு நாள் உங்க பெட் ரூமில் ஒரே ஒரு பாம்புடன் இருந்து காட்டுங்க போதும்...''



வஸந்த் வெறுப்புடன் கார் ஓட்டினான். வஸந்த்! டேய், உன் ஜாதகம்டா! இதோ இதே சீட்லேதான் உட்கார்ந்திருந்தா. இன்னும் கசங்கல் கூடக் கலையலே. பவுடர் வாசனை இன்னும் பாக்கி இருக்கு. இனி! நீ எங்கே இருக்கே? ஒருவேளை போர் அடிச்சுட்டேனு? தாங்கமுடியாமத்தான் கிளம்பிட்டாளா? இல்லை வேற யாராவது பார்ட்டி அவளைப் பலவந்தமா இழுத்துக்கிட்டுப் போயிருப்பாங்களோ! இருக்காது. அப்படி ஏதாவது நடந்திருந்தா சத்தம் போட்டிருக்க மாட்டாளோ? கடைக்காரன் கவனிச்சிருக்க மாட்டான்? சோம்பேறிக் கூட்டம் சேர்ந்திருக்காது?

''பின்ன எங்கே பாஸ் போயிருப்பா?''

''எங்கேயும் போயிருக்க மாட்டா. நீ போயிருந்த சமயத்தில யாரையாவது சிநேகிதியைப் பார்த்திருப்பா. அவ கூடப் போயிருப்பா.''

''எங்கிட்டச் சொல்லாமயா?''

''இத பார், உன் கவலைகளை நான் பட விரும்பலே. நான் போறேன். திரும்பி வர ஒன்பதரை ஆகும். ராமகிருஷ்ணன் ப்ரீஃபை எழுதி வை. சும்மா ஸல்க் பண்ணிட்டிருக்காதே. எங்க போயிடுவா? வந்த உடனே டெலிபோன் செய்வா!''

''பாஸ்! உங்களுக்கு நடந்ததில எதுவுமே மர்மமாப் படலியா?''

''நடந்ததே புரியலே. மோசமா எடிட் பண்ண ஃபிலிம் மாதிரி இருக்கு. ஒரே ஜம்ப் கட். ராத்திரி நிதானமா சிந்திக்கலாம். வரேன்.''

அவன் சென்றதும், ''உங்களுக்கு என்ன புரியும் ஒரு காதல் மனம் படற பாடு'' என்று முணு முணுத்துக் கொண்டு, இனியாவுக்கு டெலிபோன் செய்தான். மறுமுனை கிர்ரிங் கிர்ரிங்கை பதிமூணு முறை எண்ணி விட்டு வைத்தான்.

இன்னும் வீட்டுக்கு வந்து சேரலே!'

ஒரு சிந்தனை. சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு சி. ஆர். பி.ஸி.யைப் பிரித்தான்.

Section 51(2) Provides that when even it is necessary to cause a woman to he searched the search shall be made by another woman with strict regard to decency.

இனியா! உன்னை யாராவது ஸர்ச் பண்ணுகிறார்களோ? யார்? நிச்சயம் தந்தைக்கும் மகளுக்கும் ஏதோ நிகழ்ந்திருக்கிறது. அடுத்தது ஒருவேளை எனக்காக வருவார்களோ?

வஸந்துக்குத் திக்கென்றது. வாயிற் கதவு தாளிட்டிருந்தது. ஜன்னலுக்கு வெளியே தம்புச் செட்டி தெருவின் சந்து தெரிந்தது. அதிக ஜனநடமாட்டம் இல்லை.

அந்த ராஜ ராஜன் கிணற்றில் இருக்கிறது சூட்சுமம். 'வேங்கை நாடும் கங்கபாடியும் நானம்பாடியும்...' என்ன அர்த்தம் இதற்கெல்லாம்?

முதலில் அப்பா அப்புறம் பெண். எப்படியோ நானும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறேன். என்னை நோக்கியும் அவர்கள் வரலாம்.

அறை வாசல் கதவு லேசாகத் தட்டப்படும் சப்தம் கேட்டது. (தொடரும்)



வட்ட மேஜை



● தலையங்கம் கண்டேன் — என்ன இது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு என்று யோசித்தேன் — கடைசிப் பாராவில் விளங்கியது. பட்டை தீட்டிய வைரம்தான் போங்கள்.

திருச்சி வேதஹாலாஸ்யம்

● அரசுடைமை வங்கிகளில் ஓவர்டைம் செலவு அதிகரித்திருப்பது பற்றித் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள்.

ஓவர் டைம் கணக்கிடப்படுவது அந்தந்த மாத மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில்தான். விலைவாசியின் கட்டுக்கடங்கா உயர்வும், அதன் விளைவான விலைக் குறியீட்டெண் உயர்வும் சேர்ந்து ஏற்பட்ட மொத்த ஊதிய அடிப்படையில் கணக்கிடும் பொழுது ஓவர் டைம் ஊதியமும் அதிகரிக்கவே செய்யும்.

மேலும் 1977க்கும் 1980க்கும் இடையில் வங்கிகளின் பெருமளவிலான கிளைப் பெருக்கமும் அதன் விளைவான ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை அதிகரிப்பையும் கணக்கில் கொண்டு பார்த்தால் ஓவர் டைம் ஊதியம் அதிகரித்ததில் வியப்பில்லை என விளங்கும்.

கள்ளக்குறிச்சி ஆர். ராமானுஜம்

[நாம் விமர்சிப்பது ஓவர்டைம் தொகை அதிகரிப்பதை மட்டுமல்ல, ஓவர்டைம் மனப்பான்மையையும் கூட. —ஆர்.]

● மாண்புமிகு சுகாதார அமைச்சர் ஹண்டே இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி அட்மிஷன் காலந் தாழ்ந்து நடப்பதற்குக் கூறியுள்ள காரணம், ஒரு நொண்டிச் சாக்காகவே படுகிறது. வகுப்புக்களைச் சரியான நேரத்திலேயே துவக்கி பரீட்சையை மட்டும் தள்ளி வைத்திருக்கலாம். இதன் மூலம் பாடங்களை நடத்துவதற்கு (இப்போதுள்ளதைப் போலல்லாமல்) அதிக நேரம் கிடைத்திருக்கும். அவர் குறிப்பிட்டுள்ள அனடமி வகுப்புக்கான உடல் பரிசோதனைகளுக்கும் அவகாசம் கிடைத்திருக்கும். நிச்சயமாக 30 மாணவர்கள் ஒரு உடலைச் சுற்றி நின்று கற்க நேர்ந்திருக்காது. இதை விட்டு அட்மிஷன் தாமதமாகச் செய்ததால் பல மாணவர்கள் அட்மிஷன் கிடைக்காதோ என்ற பயத்தில் பி.எஸ்.சி., விவசாயம் போன்ற வகுப்புக்களில் சேர்ந்து படித்து, புத்தகங்களும் வாங்கி (சிலர்) செமஸ்டர் பரீட்சையும் எழுதி விட்டனர். இதனால் அட்மிஷன் கிடைத்த மாணவர்கள் ஏராளமான மனக் கஷ்டத்துக்கும், பண நஷ்டத்துக்கும் ஆளாயினர்.

இந்தக் கால தாமதம் பல ஊழல்களுக்கு இடமளித்தது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

டாக்டர் படிப்பு விஷயம் இருக்கட்டும், பி.டி.எஸ், பி..பார்மஸி ஆகிய வகுப்புக்களின் அனுமதியில் கால தாமதம் ஏன்?

தொன்றுதொட்டு இருந்து வரும் ஊழல்களை ஒரே நாளில் ஒழிக்க முடியாதுதான். ஆனால், அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் காக்க முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பது அமைச்சருக்கு அழகல்ல.

திருவாரூர் ரங்கமணி

● சங்கராபரணத்தின் வெற்றிக்குப் பிறகு தரமான இசைப் படங்கள் வெளியாகாததற்குக் குமார் கூறும் காரணங்கள் சரியல்ல. பலன்களைக் கருதாமல் தனது ஆத்ம திருப்திக்காக 'சங்கராபரணம்' எடுத்த விஸ்வநாத் போன்றவர்களுக்கு இருந்த மனத் துணிவு நிச்சயம் நம் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்களுக்கு இல்லை. அப்படி தைரியமுள்ள சிலரையும் புறம் பேசியே கெடுத்துவிடும் கலையில் நம் பட உலகில் திறமைசாலிகள் பலருண்டு. கேள்விக்கு உருப்படியான பதிலைச் சொல்லாமல், மழுப்பி நழுவியிருக்கிறார் குமார்.

வேலாயுதம்பாளையம் எம். சம்பத்

● நளினி சாஸ்திரி செய்த சினிமா விமர்சனம் பற்றி ஒரு விமர்சனம்: துணிவே தோழன் — அபாரம்; சாவித்திரி — புதுமை; தூரத்து இடி முழக்கம் — அருமை; நெஞ்சத்தைக் கிள்ளாதே — அருமை!

மதுரை-1 இரா. சேகரன்

● படம் முழுவதும் வன்முறையை — அதன் வெற்றிகளை, வெறியாட்டங்களைச் சிறும்சிறப்புமாகக் காண்பித்து விட்டு இறுதிக் காட்சியில் வில்லனைத் தண்டனை பெறுவதாகக் காட்டினாலும் மக்களின் மனத்தில் நிற்பது வன்முறை அம்சமே. இது பொது விதி.

படம் முழுதும் ஊர் மேய மனத்தைப் பறிகொடுத்து — பேதலித்து — கற்பைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு இறுதிக் காட்சியில் கதாநாயகி இறந்து போவதாகக் காட்டினாலும் நினைவில் நிற்பது அவளது அருவருப்பான வக்ரமான விகாரமே. சாவித்திரி படத்தை எந்த நடுநிலைத் தராசு கொண்டு கல்கி விமர்சனத்துக்கு ஏற்றுக் கொண்டது? புரியாமல் குழம்புகிறேன்.

திருச்சி-18 என். பானு

● சாவித்திரி பட விமர்சனம் கல்கியில் என்று வெளிவரும் என்று நெஞ்சில் நிறைந்த பயத்தோடு காத்திருந்தோம். நல்லவேளை எங்கள் நெஞ்சில் பாலை வார்த்தீர்கள். கவிதையாக சாவித்திரியை உயர்த்திக் காட்டியிருக்கிற கல்கியின் கருத்துக்களே எங்கள் கருத்துக்கள் என்று பெருமையுடன் கூறிக் கொள்கிறோம்.

திருச்சி ச. விக்டர் ஆல்பர்ட்

“பின் வழியா ஏறு.பின் வழியா ஏறு..” —கண்டக்டரின் குரலை அவன் சட்டை செய்யவே இல்லை.

அந்தப் பஸ்ஸின் முன்புறமாய் படிகளில் முட்டி நெறித்துக் கொண்டு நிற்கும் கும்பலை உடம்பால் திருகிக் கொண்டு ஏறி பஸ்ஸினுள் நுழைந்தான் அவன். பார்வை விறுவிறுக்கப் பெண்கள் பகுதிக்கு ஓடிக் குறிப்பிட்ட இருக்கை ஒன்றின் மேல் போய்ப் பதிந்தது.

அதுவரைக்கும் இயல்பாக அமர்ந்திருந்த அவள் அவனைப் பார்த்துவிட்ட மாத்திரத்தில் மனசுக்குள் படபடக்க ஆரம்பித்தாள்.

மெல்ல அசைந்து நெளிந்து கொஞ்சம் கொஞ்சமாய் நகர்ந்து அவள் அமர்ந்து கொண்டிருக்கும் இருக்கைக்குப் பக்கமாய் அவன் போய் நின்றபோது பஸ் விளை கார்னரில் ஒரு வட்டம் போட்டுத் திரும்பியது.

எல்லோரும் கொஞ்சம் சரிந்து நிமிர்ந்தார்கள்.

அவன் இந்தச் சாக்கில் அவள் மேல் தன் பாரம் முழுவதையும் போட்டு மெல்ல நிமிர்ந்தான்.

பின்னர்.அந்தச் சாக்கில் அவளது இருக்கை முதுகில் இரும்பு உருளை வளைவைப் பிடித்துக் கொண்டான்.

அவள் கூந்தலில் கனகாம்பரத்தைச் செருகியிருந்தாள்.



அதை அவன் அவள் மட்டுமே உணரும் படி விரல்களால் பிய்த்தான்.

வண்டி ஒவ்வொரு ஸ்டாப்பிங்கிலும் பத்து பேரை ஏற்றிக் கொண்டால் இரண்டு பேரை மட்டுமே இறக்கி விட்டுக் கொண்டு வளரும் தேசிய ஜனத் தொகை மாதிரி நிறைந் நிறைந் ஓடிக் கொண்டிருந்தது.

அவன் கையை மெல்ல அவளது தோளுக்கு இறக்கினான்.

அவள் உடம்பை உதப்பி வழக்கம் போல் எச்சரித்தாள்.

சில விநாடிகள் இயல்பாய்க் கழிந்தது.

மறுபடியும் ஒரு வளைவை பஸ் சந்தித்த போது அவன் வலிந்து சரிந்தான்.

இம்முறை அவன் விரல்கள் அவள் மார்பை எப்படியோ தொட்டுவிட்டிருந்தன. அவ்வளவையும் சாமர்த்தியமாய், யாரும் பார்த்திராத விதத்தில் செயல்படுத்திவிட்டு ஒன்றும் தெரியாத மாதிரி நின்றான்.

அவளுக்கு நாணத்தால், கோபத்தால் முகம் சிவந்து விட்டிருந்தது.

கடந்த பத்து நாளாய் அந்த ரூட்டில் குறிப்பிட்ட அந்த நேரத்தில் டவுனில் பெரிய ஆஸ்பத்திரியில் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் இருக்கும் அவளது தகப்பனாரைக் கண்டு வர அவள் சென்று வரும் போதெல்லாம் அவனால் அவளது வாலிபத் தொல்லையைச் சகிக்க முடியவில்லை. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவள் தவியாய்த் தவித்தாள்.

அவளுக்குத் தனது தர்மசங்கடத்தை எப்படித் தவிர்ப்பது என்றே புரியவில்லை. அவளது பயந்த மௌனம் அவனுக்குள்ளும் நாளுக்கு நாள் துணிச்சலைப் பெருக்கிக் கொண்டே வந்தது.

'இன்றைக்கு அவனது சேட்டைக்கு, கொழுப்பெடுத்த போக்குக்கு அல்லது செய்கைக்கு ஒரு முடிவு கட்டியே ஆகவேண்டும், கட்டியே தீர வேண்டும்' — அவள் தனக்குள் தீவிரமாய்ப் பேசிக் கொண்டாள்.



'ஏன் தாடி வளர்க்கிறோம்?'

'Changeக்காக!'

நாலணாவை அவனிடம் கொடுத்துவிட்டுப் போனான் கேட்டவன்.

- பிரியா பாலு

எப்படி முடிவு கட்டுவது?

வாய் விட்டுக் கத்துவோமா? — அதுதான் முடியாததாயிற்றே! அவள் தனக்குள் பேசிக் கொண்டிருந்தபோது அவன் தனது கால் விரலால் அவளது காலை உரசிக் கொண்டிருந்தான். அதே வேளையில் தோள்களில் பழைய படி விரல்களை மேயவிட்டிருந்தான். அவள் இந்த முறை உடம்பைக் குலுக்கி விட்டு அவனை எச்சரிக்கை செய்யவில்லை. அவனது விரல்கள் சுதந்திரமாய் மார்புக்குச் சரிந்து இறங்கியபோது காத்திருந்தவளைப் போல் அவள் தனது கழுத்து ரோல்டு கோல்டு சங்கிலியைக் கழுத்தைச் சொரிந்து கொள்ளும் சாக்கில் கத்தரித்து விட்டாள். சங்கிலி அறுந்து அவனது விரல்களின் மேல் விழுந்தது.!


—''பே, பே, ஆங்், ஆங்ங்ங்......''— அவள் கத்தலைத் தொடர்ந்து அவன் சடாரென்று கைகளைப் பின்னுக்கு எடுத்தான். அவனது கையோடு சங்கிலி போனது.

பக்கமாய்ச் சிலர் அவள் கத்தியதைத் தொடர்ந்து அவனைப்பார்த்துப் பின் அவளைப் பார்த்து அவன் கையில் உள்ள சங்கிலியைப் பார்த்து விஷயத்தை விறுடியில் புரிந்து கொண்டு வேகமாயினர். ஓடும் பஸ் நடு வழியில் கிரீச்சிட்டு நின்றது. ''பொறுக்கிப் பயலே, ஊமைப் பொண்ணுப் பார்த்து உன் வேலையைக் காட்றியா? பின்னிப்பிடுவோம் பின்னி....'' ஒருவர் இரைந்தார். இன்னொருவர் செயலால் இறங்கினர்.

''டிரைவர், வண்டியை போலீஸ் ஸ்டேஷனுக்கு விடுங்க. இவனுங்களைப் பாவ புண்ணியம் பார்த்து விட்டா நாளைக்கு ஒரு பொண்ணு பஸ்ஸால சுதந்திரமாப் பயணம் பண்ண முடியாது....''

அந்த பஸ் இறுதியில் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடியது. ஆடை கிழிந்த அலங்கோலமான நிலையில் அவன் மயங்கிக் கொண்டிருந்தான். அவள் நிம்மதியாய்ப் பெருமூச்சு விட்டாள்.

வம்பன் வெங்கு — ஜெயந்தி





மங்கையின் மதிநலம்

திருமுருக கிருபானந்தவாரியார்

மங்கையர்க்கரசி மாலை நேரத்தில் வீட்டுக்கு முன் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டு இருந்தாள். வீட்டுக்கு முன் மாலையில் கோலம் இட்டால் இரவில் உலவும் பேய் பிசாசகள் அதைத் தாண்டி வீட்டுக்குள் வராது. இதற்காகத்தான் முன்னோர்கள் மாலையில் அரிசி மாவினால் கோலம் இடுவார்கள். அந்த அரிசி மாவை எறும்புகள் தின்னும். எறும்புக்குக் கண் கிடையாது. கண் தெரியாத எறும்புகளுக்கு உணவு கொடுத்த புண்ணியத்தால் நமக்குக் கண் தெரியும். ''எறும்பு தின்றால் கண் தெரியும்'' என்ற பழமொழி இதனால் உண்டாயிற்று.

இவ்வாறு வீட்டுக்கு முன் கோலம் போட்டுக்கொண்டிருந்த மங்கையர்க்கரசி மாலை வெயில் பட்டுத் தங்க விக்கிரகம் போல் காட்சி. அளித்தாள். வீதி வழியே சென்ற ஓர் அமைச்சன் அவள் அழகில் மதி மயங்கினான். அவள் தனது அலுவலகத்தில் வேலை பார்க்கும் எழுத்தர் இளங்கோவன் மனைவி என அறிந்தான். அதனால் அவளை எளிதில் அடையலாம் என எண்ணினான்.

எழுத்தர் இளங்கோவனை வெளியூருக்கு மாறுதல் செய்தான். விலை உயர்ந்த ஆடைகளையும் அணிகலன்களையும் மங்கையர்க்கரசிக்குப் பரிசாக அனுப்பி ஒரு கடிதமும் எழுதி அனுப்பினான்.

மங்கையர்க்கரசி கற்பினில் கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போன்றவள். அமைச்சனுடைய இந்த அடாத செயலுக்கு மிகவும் வருந்தி அவைகளைத் திருப்பி அனுப்பி விட்டாள்.

இதனால் ஏமாற்றமடைந்த அமைச்சன் ஆற்றங்கரையில் கிடந்த ஓர் அநாதைப் பிணத்தின் வாயில் சலவைத் தொழிலாளி வீட்டிலிருந்த இளங்கோவனுடைய துணியை அடைத்து, துப்பறிகின்றவர்களை வைத்து இக்கொலை இளங்கோவன் செய்ததென வழக்கை ஜோடனை செய்து இளங்கோவனுக்கு மரண தண்டனை விதிக்குமாறு செய்து விட்டான்.

ஒரு குற்றமும் அறியாத இளங்கோவன் பெரிதும் வருந்தினான். கணவனுக்கு நேர்ந்த இந்தக் கொடுமையை எண்ணி மங்கையர்க்கரசி நெருப்பில் விழுந்த புழுவைப் போல் துடித்தாள். இறைவனை நினைந்து அழுதாள். நாளை நம்முடைய கணவனுக்கு உயிர் பிரியுமே என்று எண்ணி எண்ணி ஏங்கினாள்.

அந்த நகரத்தை ஆளும் அரசர் பெருமானுடைய அரண்மனைக்குச் சென்று அரசனுடைய . அடிமலர் மேல் வீழ்ந்து அழுது. ''கருணைநிறைந்த தந்தையே, என் கணவனார் நிரபராதி. அவரைக் காப்பாற்ற வேண்டும்''. என்று முறையிட்டாள்.

அரசர், ''அம்மா! அழாதே. மரண தண்டனை விதிப்பதற்கு முன் என்றால் கருணை காட்டியிருப்பேன். தீர்மானம் செய்ததை எவ்வாறு நான் மாற்றுவேன்? இது தரும சங்கடமாக இருக்கிறது'' என்று கூறிச் சிறிது நேரம் சிந்தனை செய்தார்.

''அம்மா, உனக்காக ஒன்று செய்கிறேன். நாளை திருவுளச் சீட்டுப் போடுவேன். அதில் உன் கணவன் குற்றவாளி என்று வந்தால் மரண தண்டனை உறுதி செய்வேன். குற்றவாளி அல்ல என்று வந்தால் விடுதலை செய்வேன். உனக்காக நான் இதனைச் செய்கிறேன்'' என்றார்.

மங்கையர்க்கரசி இதற்கு இசைந்து தன் வீட்டை அடைந்தாள். பூஜை அறையில் அமர்ந்து. ''முருகா! என் கணவர் அணுவளவும் குற்றம் செய்யாதவர். அவரைக் காப்பாற்றுவது உன் கடன். கருணைக் கடலே நீ இந்திராணியின் திருமாங்கல்யத்தைக் காப்பாற்றிய கருணாமூர்த்தி. இந்த ஏழையின்

மாங்கல்யத்தையும் காப்பாற்ற வேண்டும்'' என்று முறையிட்டாள்.

அமைச்சன் திருவுளச் சீட்டு எழுதுகின்ற எழுத்தனுக்குப் பணம் கொடுத்து இரண்டு சீட்டுகளையும் குற்றவாளி என்றே எழுதுமாறு ஏற்பாடு செய்து விட்டான். அந்த எழுத்தன் பணத்துக்கு ஆசைப்பட்டு இரண்டு சீட்டுக்களையும் குற்றவாளி என்றே எழுதிவிட்டான்.

எழுத்தனுடைய மனைவி, மங்கையர்க்கரசியின் உயிர்த்தோழி. அதனால் சூழ்ச்சியை அவள் இவளுக்கு அறிவித்தாள். இதைக் கேட்ட மங்கையர்க்கரசி இடிபெறுண்ட நாகம் போல் கலங்கினாள்.

அடுத்த நாள் காலை இந்த வழக்கை அறியும்பொருட்டுப் பெருந் திரளாக மக்கள் கூடியிருந்தார்கள். அரியணையில் அரசர் பெருமான் வீற்றிருந்தார். அருகில் கொடுமையே வடிவாகிய அமைச்சன் அமர்ந்திருந்தான். கையில் சங்கிலி இட்டுக் காவல் துறையினருக்கு நடுவில் மங்கையர்க்கரசியின் கணவன் வாடிய முகத்துடன் நின்று கொண்டிருந்தான்.

சீட்டுக்கள் ஒரு தட்டில் இருந்தன. அங்கு மங்கையர்க்கரசி வந்து, அரசனைத் தொழுது ''அருள் வடிவாகிய அரசர் பெருமானே! இந்தச் சீட்டைக் குலுக்கி அதை எடுக்கும் பணியை எனக்குத் தரவேண்டும்'' என்றாள். மன்னவன் ''அவ்வாறே செய்க'' என்று சொன்னார். மந்திரியும் சரி என்று கூறி மிடுக்குடன் நிமிர்ந்திருந்தான்.

மங்கையர்க்கரசி, ''எங்கும் நிறைந்த எம்பெருமானே! என் கணவனைக் காப்பாற்று'' என்று சீட்டுக்களைக் குலுக்கி ஒரு சீட்டை எடுத்து வாயில் போட்டு மென்று தின்றுவிட்டாள். இதைக் கண்ட அனைவரும் திடுக்கிட்டார்கள்.

மன்னவர், ''அம்மா சீட்டை ஏன் தின்று விட்டாய்?'' என்று கேட்டார். ''அரசர் பெருமானே! நான் எடுத்த சீட்டு குற்றவாளி என்று இருக்குமானால் என் வாயால், என் கணவனைக் குற்றவாளி என்று பழிக்கலாமா? ஒரு சீட்டு குற்றவாளி என்று இருக்க வேண்டும்; மற்றொரு சீட்டு குற்றவாளி அல்ல என்று இருக்க வேண்டும். இப்பொழுது நான் தின்ற சீட்டுக்கு எதிர்மறையாக இந்தச் சீட்டு இருக்க வேண்டும்தானே. இதை எடுத்து நீங்கள் படியுங்கள். அப்பொழுது நான் தின்ற சீட்டு இன்னது என்று விளங்கும்'' என்றாள்.

அரசர், மற்றொரு சீட்டை எடுத்துப் படித்தார். குற்றவாளி என்று அதில் எழுதியிருந்தது. அதனால் அவள் எடுத்த சீட்டு குற்றவாளி அல்ல என்பது விளங்கியது. மங்கையர்க்கரசியின் கணவனை விடுதலை செய்து விட்டார். அமைச்சன் திகைத்து நின்றான். மங்கையர்க்கரசி தன் மதி நலத்தால் மணவாளனைக் காப்பாற்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தாள்

உலகத் திரைப்பட விழா '81 ஒரு முன்னுரை

எட்டாவது சர்வதேசத் திரைப்பட விழா புதுடில்லியில் ஜனவரி மாதம் மூன்றும் தேதி தொடங்குகிறது. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை புது டில்லியில் நடக்கும் இந்த உலகத் திரைப்பட விழாதான் போட்டி அரங்கம் உள்ள திரைப் பட விழா. மற்ற மாநிலத் தலைநகரங்களில் நடக்கும் திரைப் பட விழாக்கள் எல்லாமே போட்டி அரங்கம் இல்லாத திரைப்பட உற்சவங்கள்தான்.

இந்த வருடம் 'தங்க மயில்' பரிசைத் தட்டிச் செல்ல 24 படங்கள் போட்டி போடுகின்றன. இந்தப் படங்களை இந்தியா உள்பட 20 நாடுகள் அனுப்பியுள்ளன.

இந்தியாவில் எவ்வளவோ பட விழாக்கள் நடைபெற்றும் இதுவரை பங்கு பெறாத நாடு கானா. ஆனால் இந்த முறை 'Love Brewed in the African Pot' என்ற படத்தின் மூலம் இந்தச் சர்வ தேசப் பட விழாவில் நுழைவது மட்டுமல்லாமல், போட்டி அரங்கிலும் பங்கு கொள்கிறது.

பல்வேறு நாடுகளில் நடைபெற்ற சர்வ தேசத் திரைப் பட விழாக்களில் பரிசைத் தட்டிச் சென்ற எட்டு தலைசிறந்த படங்கள் இந்தப் பட விழாவில் காட்டப் படுகின்றன.

62 வெளி நாடுகள் பங்கு கொள்ளும் இந்தப் பட விழாவில் 120க்கும் மேலான படங்கள் காட்டப்படும். 21 இந்திய மொழிப் படங்கள் இந்திய மொழி அரங்கில் காட்டப்படும். பாரதி ராஜாவின் 'நிழல்கள்', விஜயனின் 'தூரத்து இடி முழக்கம்' ஆகியவையும் இடம் பெறுகின்றன.

போட்டி அரங்கம் படங்களை ஒன்பது பேர் கொண்ட நிபுணர் குழு பரிசீலிக்கும். இந்த நீதிபதிகள் எட்டு நாடுகளைச் சேர்ந்தவர்கள். இந்தியாவிலிருந்து சியாம் பெனகல், அரவிந்தன் ஆகிய இருவரும் நீதிபதிகள். இனி அடுத்த வாரம் டெல்லியிலிருந்து எழுதுகிறேன்.

—சல்ன


பாதுகாப்பு, சிக்கனம், இரண்டிற்கும்—
ஸ்டேன்ஸ் டயர் ரீடிரெட்
சாலைப்பிடிப்பு, நீடித்த உழைப்பு, தோற்றம்,
கணிசமான சிக்கனம் எல்லாம் சேர்ந்து
அமைய—ஸ்டேன்ஸ் டயர் ரீடிரெட்.
ஸ்டேன்ஸ்டயர்
அண்டு ரப்பர் பிராடக்ட்ஸ் லிமிடெட்
திருச்சி ரோடு, கோயம்புத்தூர் 641018.
தொழிற்சாலைகள் :
கோயமுத்தூர் ● கோட்டயம் ● விஜயவாடா
● திருச்சி ● கள்ளிக்கோட்டை ● மங்களூர்
● வேலூர் ● ஹைதராபாத் ● சேலம்
● எர்ணாகுளம் ● தூத்துக்குடி ● திருச்சூர்
● மதுரை ● பெங்களூர் ● பெல்லாரி மற்றும்
காகினாடா.
MAC/ST/002/TAM

பேரடிக் கதை-17

ஏழை ஜென்மங்கள்?



ஜெயகாந்தன்

விருட்டென்று கண் விழித்துக் கொண்டான் தங்கப்பன். அதிக நேரம் தூங்கிவிட்டோமோ என்ற பரபரப்புடன் படுக்கையை விட்டு எழுந்தான். குடிசைக்குள் இருட்டில் விவரம் புரியவில்லை.

தலையணைக்குக் கீழே துழாவி தீப்பெட்டியை எடுத்தான். இடுப்பில் லுங்கிக்குள் சுருட்டி வைத்திருந்த பீடிக் கட்டை எடுத்து ஒரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான். சுருட்டுப் புகை சுகமாய் இருந்தது.

தீக்குச்சி வெளிச்சத்தில் குடிசையை நோட்டம் விட்டான். பக்கத்துப் பாயில் ஆடை கலைந்து, கோணல் மாணலாய்த் தூங்கிக் கொண்டிருந்தாள் முனியம்மா. உழைத்து இறுகிப்போன உடலின் மதர்ப்பு, தீக்குச்சி வெளிச்சத்தில் பார்க்கச் சுகமாய் இருந்தது.

ராத்திரி அவன் குடிசைக்கு வருகிறபோது இரவு வெகு நேரமாகி விட்டது. குடிசை வாசலில் காத்துக் கொண்டிருந்த முனியம்மா இவனைக் கண்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து, ''மச்சான்! தமிளரசிக்கு மேனி காயுது. கஞ்சித் தண்ணி கூடக் குடிக்காமச் சுருண்டு படுத்திருக்கு மச்சான்'' என்றாள். சொல்கிறபோதே அவள் குரல் நடுங்கியதைக் கவனித்தான் தங்கப்பன்.

தேர்தல் கூட்டம் முடிந்து அப்போது தான் சர்வ உற்சாகமாய் வீட்டுக்குள் நுழைந்தான். வேட்பாளர்கள் அறிவிப்புக் கூட்டம். மாலை ஆறு மணிக்கு ஆரம்பமாக வேண்டிய கூட்டம், தலைவர் சிவப்பிரகாசம் தாமதமாய் வந்ததால் எட்டு மணிக்குத்தான் துவங்கியது. அலங்காரக் காரில் ஆர்ப்பாட்டமாய் வந்து இறங்கிய தலைவரைப் பார்த்ததுமே கூட்டத்தில் உற்சாகம் கரை புரண்டு போயிற்று. அவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருந்த அலுப்பெல்லாம் போன இடம் தெரியாமல் போய், புது ரத்தம் 'ஜில்'லென்று பாய, 'தலைவர் சிவப்பிரகாசம் வாழ்க வாழ்க' என்று தொண்டை கிழியக் குரல் கொடுத்துத் தன் உற்சாகத்தைத் தெரிவித்துக் கொண்டான். தலைவர் மிடுக்காய் மேடையில் அலங்கார நாற்காலியில் அமர்ந்துகொண்டார். கடலாய்த் திரண்டிருந்த கூட்டத்தைப் பார்த்துச் சன்னமாய்ப் புன்னகைத்தார். பின்னர் வேட்பாளர்களை அறிமுகப் படுத்திவிட்டு எண்ணி நாலு வார்த்தைகள் தான் பேசினார். ''மாற்றுக் கட்சியினரை ஒவ்வொரு கட்டத்திலும் மிஞ்ச வேண்டும். என் செல்வமே! புறப்படு. பகைவர் சேனையை முதுகொடிக்கப் புறப்படு'' என்று தலைவர் சிங்கநாதம் புரிந்தபோது நரம்புகள் முறுக்கேறி அப்பொழுதே போய் எதிர்க் கட்சிக்காரர்களை அடித்து நொறுக்க வேண்டும் போல ஆவேசம் பொங்கியது.

பதில் பேசாமல் வீட்டுக்குள் நுழைந்த தங்கப்பன், ''சரி சரி... சோத்தைப் போடு! வவுத்துப் பசி உசிரு போவுது'' என்றான். பரிமாறிக் கொண்டே குழந்தையின் உடல் நிலை பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள் முனியம்மாள்.

''இப்போ இன்னாடி பண்ணச் சொல்றே? காலையிலே கார்ப்பரேசன் ஆஸ்பத்திரிக்கு இட்னு போ. எதுனாச்சும் மருந்து மாயம்னு சாப்பிட்டா சரியாப் போவுது... இத்தெப் போய் பெரிசாச் சொல்லிக்கினுகீறியே? நாட்லே எலெக்ஷன் ஆரம்பிச்சாச்சு. தலைவரு 'தேனீ மாதிரிப் பணியாத்தணும்'னு கட்டளை இட்டுட்டாரு. மனுசன் அதெப் பத்தி ரோசிக்கக்கினு வந்தா என்னமோ புள்ளே காச்சல்னு பெருத்திக்கினு கீறியே?'' என்று கூறிப் படுத்து விட்டான்.

''**அ**ண்ணே... தங்கப்பண்ணே....''

குடிசை வாசலில் சின்னக்கருப்பையாவின் குரல் கேட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். குடிசைக் கதவைத் திறந்து குனிந்தவாறே வெளியே வந்தான்.

கையில் ஏணி, வாளி, போஸ்டர் கருண் சகிதம் சின்னக் கருப்பையா நின்றுகொண்டிருந்தான்.

''என்னண்ணே, தூங்கிட்டீங்களா? வருவீங்கன்னு பார்த்தேன். நாளியாச்சு.. சொடலையும் பக்கிரியும் கௌம்பிட்டானுக. மாதா கோயில்லே மூணு மணி அடிச்சிருச்சண்ணே... அதான் ஓடியாந்தேன்...''

சொடலை, பக்கிரி என்ற வார்த்தைகள் மந்திரமாய் வேலை செய்தன. அவன் உள்ளே ஒரு சர்ப்பம் சீறி எழுந்தது.

''கௌம்பிட்டானுகளா?.... அப்பவே சொல்றதுக்கென்ன?'' என்று பரபரத்தவன் குடிசைக்குள் போனான். ஒரு சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான். நினைவாக அரிவாளையும் எடுத்து இடுப்பில் செருகினான்.

வெளியே கிளம்பியதும், கண்ணைத் துடைத்துக் கொண்டே பின்னால் வந்தாள் முனியம்மா.

''மச்சான்.... தமிளுக்கு நெருப்பாக் காயுது... ரொட்டி, டீ வாங்கக் கூடத்



துட்டில்லே மச்சான்... எதுனுச்சும் இருந்தாக் குடு....''

கண்கள் சிவப்பேற அவனை ஆக்ரோஷத்துடன் பார்த்தான். பின் அரிவாளை எடுத்துத் தூக்கிப் பிடித்தான். ''தா பாரு... எதுனுச்சும் பேசினே, வானைத் துண்டு கணக்காச் சீவிடுவேன் ஆமா! பக்கத்து வீட்டில, அங்கினே இங்கினே எதுனுச்சும் வாங்கிக்க... வாடா நாம காரியத்தைக் கவனிப்போம்'' என்றவாறே திரும்பிப் பார்க்காமல் வேக வேகமாய் நடந்தான். ஓட்டமும் நடையுமாய்ப் பின்தொடர்ந்தான் சின்னக்கருப்பையா.

சொடலையும் பக்கிரியும் மருதநாயகத்தின் கட்சியைச் சேர்ந்தவர்கள். சுவரில் போஸ்டர் ஒட்டக் கிளம்பி விட்டார்கள். காம்பவுண்டுச் சுவர்களில் அவர்கள் ஒட்டி விட்டால் இவனுக்கு இடமில்லாமல் போய் விடும்.

'அப்புறம் நம்ம பேட்டையில எங்கே ஒட்டறது? நம்ப பேட்டையில நம்ப கட்சிப் போஸ்டருக்கு இடமில்லேயினு நம்ப தலைவருக்கு இன்னா மதிப்பு? வாடா... டாய்... சொடலே!... பார்த்துறலாம் வா! ஒனக்காச்சு... எனக்காச்சு....''

ஆவேசத்துடன் நடந்து கொண்டிருந்தான் தங்கப்பன்.

சொடலை அவனது சித்தப்பா பிள்ளைதான். சின்ன வயதில் ஒன்றாக ஆடி விளையாடி மண்ணில் புரண்டு உருண்டவர்கள்தாம். மருதநாயகத்தின் கட்சியில் சேர்ந்து, அவர்கள் பேட்டையில் ஒரு மன்றம் திறந்து விட்டான். இவர்கள் கட்சிக் கம்பத்தின் பக்கத்திலேயே ஒரு முழம் உயரமாகப் பெரிய கம்பத்தை ஊன்றி, மருதநாயகத்தைக் கொண்டு கொடி ஏற்றி விட்டான். அவர்கள் பேட்டைக்கு மருதநாயகம் வருவதைக் கண்டு வயிறெரிந்தது தங்கப்பனுக்கு. தங்கப்பன் தன் கட்சிக் கொடியால் தோரணம் கட்டினால் அதற்கு மேலே சொடலை தன் கட்சி பேனரைக் கட்டுவான்.

இந்தச் சொடலைப் பயல் இப்படிக் கிளம்புகிறவரை அந்தப் பேட்டையில் வேறு கட்சிக் கொடிகளே இல்லாமல் இருந்தது. அவன் கட்சி வட்டாரத்தில் தங்கப்பனுக்கு அதனால் தனி கௌரவம்.

''தங்கப்பண்ணே! ஒங்க பேட்டை நம்ம கோட்டை! மருதநாயகம் கொடி ஒண்ணைக் கூடக் காணமே'' என்று கட்சியின் கிளைத் தலைவர் கேட்கிறபோது பெருமை பிடிகொள்ளாது பார்ப்பான் தங்கப்பன்.

''நொளைய விடுவேனா? நம்ப தலைவர் சிவப்பிரகாசத்தைப் பத்தி ஒரு பய எதுனுச்சும் நம்ப பேட்டைக்குள்ளாற வாயைத் தொறந்து சொன்னான்னு, கழுத்தைச் சீவி, நாக்கை ஊறுகா போட்டுற மாட்டேன்?'' என்று ஆவேசத்துடன் சூளுரைப்பதைக் கேட்டுக் கூடியிருக்கிறவர்கள் கைதட்டி, ஆரவாரிக்கும்பொழுது; அவனுக்குத்தான் எவ்வளவு பெருமிதம்! பெருமை!

எப்படிக் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தான்! எல்லாவற்றையும் அடியோடு சிதைத்து விட்டானே இந்தச் சொடலை!

அவர்கள் பேட்டையிலேயே பொதுக்கூட்டம் போட்டு, மீசை கூடச் சரியாக முளைக்காத யாரோ ஒரு மூன்றாம் தர அரசியல் வாதியைக் கொண்டு தலைவர் சிவப்பிரகாசத்தை நாக்கில் நரம்பில்லாமல் பேச வைத்துவிட்டானே!

அடிவயிறு பற்றி எரிந்தது தங்கப்பனுக்கு.

''நம்ம தலைவரைப் பத்தி நம்ம காது கேக்க, ஒரு பய மட்டமாப் பேசுறது: அத்தே நாம வுடறதா? நாக்கை அறுத்துடறதில்லே!''

ஆவேசத்துடன் கூட்டத்தில் பாய்ந்தான்.

''டாய்... சோமாறி... எங்க தலைவரைப் பத்தி நீ இன்னாடா சொல்றது? அவுரு கொள்கைத் தீபம்டா. சிங்கத் தலைவருடா. நீ யாருடா கஸ்மாலம், அவுரு பேரைச் சொல்றதுக்கு?''

கூட்டத்தில் சிலர் பொங்கி எழுந்தார்கள்.

''யார்ராது கயிதே! கூட்டத்துல கலாட்டாப் பண்றது?''



கற்கள் பறந்தன. சோடாப் புட்டிகள் உடைந்தன. ரத்தம் பாய்ந்தது. 'அம்மா' என்றும், 'அப்பா' என்றும் கூக்குரல்கள் கிளம்பின. பெண்கள் ஓடினர். குழந்தைகள் மிதிபட்டன.

தலைவர் மருதநாயகம் எழுந்தார். மைக்கைப் பிடித்துக் கொண்டார்.

''என் சிங்கங்களே!... கூட்டத்தில் குழப்பம் விளைவிக்கச் சிவப்பிரகாசம் செய்யும் சதி இது! நாம் இதற்கெல்லாம் அஞ்ச மாட்டோம் என்பது அந்தக் கோழைக்குத் தெரியாது. இந்த அம்பை ஒன்றும் செய்யாதீர்கள். அடிக்காதீர்கள். எய்தவன் வேறு'' என்று அறைகூவல் விடுத்தார்.

''இவுருல்லடா தலைவரு! பகைவனையும் அடிக்காதேன்னு சொல்றுரு....'' என்று தொண்டர்கள் சீறிக் கிளம்பினர்கள். தங்கப்பன் கூட்டத்தினரைச் சூழ்ந்து கொண்டார்கள். கம்புகள் சுழன்றன. யுத்தம் தொடங்கியது.

புன்சிரிப்புடன் காரில் ஏறி, கோஷங்கள் சூழ, போனுர் மருதநாயகம்.

ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் இருந்துவிட்டு வந்தான் தங்கப்பன். அதன் பிறகு பத்து நாட்களுக்கு ரிக்ஷா இழுக்கத் தென்பில்லாமல் கிடந்தான். பசியும் பட்டினியுமாய் முனியம்மாவும் குழந்தைகளும் தவித்துப் போயினர்.

''டாய்... என் மேலேயாடா கைவச்சே! ஒன்னைச் சுடுகாட்டுக்கு அனுப்பாட்டி என் பேரு தங்கப்பன் இல்லே.'' என்று படுக்கையில் கிடந்தவாறே உறுமிக் கொண்டிருந்தான்.

அப்புறம் பத்து நாட்கள் கழித்து, முனியம்மா வாங்கிய கடன், கஞ்சியாய், சோருய் வயிற்றுக்குள் போய் ரத்தமாய்ப் பாய்ந்தபோது புது முறுக்குடன் எழுந்தான். தன் கட்சிக் கூட்டத்தை நடத்தினன். ஒரு கல்லூரி மாணவனைக் கொண்டு மருதநாயகத்தின் அந்தரங்க வாழ்க்கையை அம்பலப் படுத்தினன். மறுபடியும் அந்த மண்ணில் ரத்தம் ஓடியது.



சோடலை ஆஸ்பத்திரியில் ஒரு மாதம் நினைவில்லாமல் கிடந்தான்.

தங்கப்பனைப் பத்து நாள் ஜெயிலில் போய்ச் சந்தித்துவிட்டு வந்தாள் முனியம்மா. குழந்தைகள் பட்டினியால் வாடின.

சொடலைக்குக் கணுக்காலில் சரியான அடி. நுணுக்கமாய்க் கவனிக்கிறவர்களுக்கு அவன் சாய்ந்துச் சாய்ந்து நடப்பது தெரியும்.

அந்த அதிகாலையிலும் வியர்த்து விட்டிருந்தது, தங்கப்பனுக்கு. வேக வேகமாய் நடந்தான். சில காம்பவுண்ட்டுச் சுவர்களில் மருதநாயகம் படம் உள்ள போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருப்பதைக் கண்டு அதற்கு அருகிலேயே தன் கட்சிப் போஸ்டரை ஒட்டினுன். புன்சிரிப்புடன் தலைவர் சிவப்பிரகாசம் அவனைப் பாராட்டுகிற மாதிரி பார்த்தார். அந்தப் படத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

கோபத்துடன் போஸ்டரை ஒட்டிக் கொண்டு வந்தவன், ஒரு சுவரில் தன் கட்சிச் சின்னத்தின் மீது சொடலை போஸ்டரை ஒட்டியிருப்பதைக் கண்டதும் அடிவயிற்றிலிருந்து அவனுக்கு ஆவேசம் பொங்கியது.

''சிறுக்கி மவனே! எங்கச்சிச் சின்னத்துக்கு மேலேயாடா ஒட்டினே? ஒங் கழுத்தைச் சீவலே....'' என்று உறுமியவாறே ஆவேசத்துடன் ஓடிப்போய்ச் சொடலையின் மீது அரிவாளைப் பாய்ச்சினுன்.

சொடலையின் வலது கை புஜத்துடன் வெட்டப்பட்டு வாழைத் தண்டு மாதிரிக் கீழே தனியாய் விழுந்தது. துள்ளித் துடித்தது. சொடலையின் தொங்கிக்கொண்டிருந்த கையிலிருந்து ரத்தம் குழாயில் நீர் பாய்கிற மாதிரி கீழே கொட்டியது.

சொடலையின் நண்பர்கள் தங்கப்பனைக் கட்டிப் பிடித்து அமுக்கிக் கொண்டிருந்தனர். திமிறிக் கொண்டிருந்தான் தங்கப்பன். அவன் வாயிலிருந்து இன்னதென்று வர்ணிக்க முடியாத வார்த்தைகள், சொடலையின் ரத்தம் மாதிரி தடையின்றிப் பொழிந்து கொண்டிருந்தன.

அன்று காலை போலீஸ் ஸ்டேஷனில் தங்கப்பனை விசாரித்துக் கொண்டிருந்தபோது, அவன் மகள் தமிழரசிக்கு வலிப்பு வந்து மரித்துப் போனுள். முனியம்மா கதறியழுது கொண்டிருந்தாள்.

அரசியல் வானில் சிலமாற்றங்கள் நிகழத் தொடங்கின. சிவப்பிரகாசம், மருதநாயகம் ஆகியோரின் அரசியல் போட்டியும் ஆவேசத் தாக்குதல்களும் மக்கள் மனத்தில் சில அவநம்பிக்கைகளை வளர்க்க ஆரம்பித்தன. அதன் விளைவாக, வெள்ளைச்சாமியின் புதிய கட்சி மக்களிடையே அமோகமான ஆதரவைப் பெற ஆரம்பித்தது. ஊருக்கு ஊர், கிராமத்துக்குக் கிராமம், புதிய கட்சியின் கிளைகள் தோன்றி உப தேர்தல்களில் வெற்றியைக் காண ஆரம்பித்தது. சிவப்பிரகாசத்தின் கட்சியும் மருதநாயகத்தின் கட்சியும் தொடர்ந்து தோல்வியைத் தழுவின.

மருதநாயகம் தூதுவர்களை ரகசியமாகச் சிவப்பிரகாசத்திடம் அனுப்பினர். வெள்ளைச்சாமி ஆட்சிக்கு வந்தால் தங்கள் இருவருக்

குமே ஆபத்துதான் என்பதைச் சூசகமாகத் தெரிவித்தார். நாங்கள் இருவரும் சேர்ந்து விட்டால் வெள்ளைச்சாமியை அரசியலை விட்டே விரட்டி விடலாம். பின்னர் அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்ளலாம் என்று சமிக்ஞைகள் அனுப்பினர்.

தண்ணீரில் தனியாகத் தத்தளித்துக் கொண்டிருப்பவனுக்கு மரப் பலகை கிடைத்தது மாதிரி இருந்தது சிவப்பிரகாசத்துக்கு. மருதநாயகத்தின் இட்டம் அவருக்கும் உடன்பாடாக இருந்தது. அதன் அரசியல் லாபங்கள் புரிந்தன. முதல் எதிரி வெள்ளைச் சாமிதான் என்று கணக்கிட்டார். வெள்ளைச் சாமியை ஒழித்து விட்டால் பிறகு மருதநாயகம்தானே, அவரை எளிதில் கிள்ளி எறிந்து விடலாம் என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டார்.

நாட்டின் நன்மைக்காக, மக்களின் சுபிட்சத்துக்காக வெள்ளைச்சாமி மாதிரியான கொடுங்கோலர்களிடமிருந்து நாட்டை மீட்பதற்காகக் கொள்கை இணைப்புச் செய்வதாக இருவரும் பிரகடனம் செய்து கொண்டார்கள்.

பிரம்மாண்டமான ஊர்வலம் நடத்தினார்கள். லட்சக் கணக்கில் நாலா பக்கத்திலிருந்தும் தொண்டர்கள் வந்து குவிந்தனர். 'சிங்கத் தலைவர் சிவப் பிரகாசம் வாழ்க; மங்காத் தலைவர் மருதநாயகம் வளர்க' என்று கோஷமிட்டபடியே கொளுத்தும் வெய்யிலில் ஊர்வலம் போனார்கள். தலைவர்கள் இருவரும் இணைந்து ஏர் கண்டிஷன் காரில் மேடைக்கு விரைந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஒருவரை யொருவர் அணைத்துக்கொண்டு புகைப்படங்கள் வெளியிட்டனர்.

''வெள்ளைச்சாமியின் கட்சியை'' என்று இருவரும் இணைந்து குரல் கொடுக்க, ''வீழ்த்துவோம் வீழ்த்துவோம்'' என்று லட்சோப லட்சம் தொண்டர்கள் குரல் கொடுத்தார்கள்.

'தலைவர்கள் வாழ்க வளர்க' என்று ஆனந்தக் கூத்தாடினார்கள்.

ஆறு மாதங்கள் ஆஸ்பத்திரியில் கிடந்து முடமாகிய கையுடன் வெளியே வந்தான் சொடலை. கையில்லாததால் வேலை செய்ய முடியவில்லை. 'சம்பாரிக்க வக்கில்லாமெ, பொண்டாட்டி கேக்குதோ' என்று அவன் கட்டிய தாலியை அறுத்து அவன் முகத்தில் எறிந்துவிட்டு, வேலை பார்க்கிற இன்னொருவனுடன் ஓடிப்போனாள் அவன் மனைவி அஞ்சலை.

பஸ் ஸ்டாண்டில், ரயிலடியில் பிச்சை யெடுத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறான் சொடலை. மருதநாயகமும், சிவப்பிரகாசமும் இணைந்து வெளியிடும் அறிக்கைகளை ஆர்வத்துடன் படிக்கிறான்.

தங்கப்பன் வெளியே வந்ததும் அவனைப் பழி வாங்க வேண்டும் என்ற தணல் மட்டும் நெஞ்சில் கனன்று கொண்டிருக்கிறது.

நான்கு வருடங்கள் நீட்டிவிட்டார்கள் தங்கப்பனுக்கு.

அவன் சிறைக்குப் போனதும் சில நாட்கள் இளைத்துப்போனாள் முனியம்மா. குழந்தைகள் பசியால் துடித்து அழுதன. இங்குமங்கும் வேலைக்குப் போனாள். ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. ஒரு நாள் மக்கடை சங்குண்ணி அவளுக்குத் தொழில் சொல்லிக் கொடுத்தான். தன் உடம்புக்கு இத்தனை மவுசா என்று உணர்ந்து ஆச்சரியப்பட்டாள் முனியம்மா. யார் யாரோ வீட்டுக்கு வருகிறார்கள். காசும் வருகிறது. பிழைத்துக் கொண்டிருக்கிறாள் முனியம்மா.


இரும்புக் கம்பிகளுக்குள்ளே உறுமிக் கொண்டிருந்தான் தங்கப்பன்.

'டாய்... எங்க தலைவரையாடா கேவலமாப் பேசினே? குறி தப்பிருச்சுடா... வெளியே வந்ததும் ஒன் தலையைச் சீவி ரத்தத்தைக் குடிக்கல்லேன்னு நான் எங்கப்பனுக்குப் பொறந்தவன் இல்லேடா...'

சிறைச்சாலைகளுக்குள் செய்திப் பத்திரிகைகள் வருவதில்லை. மருதநாயகமும் சிவப்பிரகாசமும் இணைந்து விடுகிற அறிக்கைகளை அவன் படிப்பதில்லை.

காலையில் நாளொன்று பிறக்கிறது. மாலையில் நாளொன்று செல்கிறது. இவர்களுக்குக் காலம் இப்படித்தான் செல்கிறது.

ஆமாம், இந்த மூட ஜனங்களுக்கு வேகம் எப்போது குறையும்? விவேகம் எப்போது வரும்?



வம்ச விருட்சம்

கன்னடத்தில் பரிசு வாங்கிய படம் தெலுங்கில் வந்துள்ளது. ஸ்ரீநிவாசாச்சாரியார் பரம்பரை பழையது. சிறப்பானது. ஆசாரமானது. அவர் மகன் மனைவியையும் ஒரு வயதுக் குழந்தையையும் விட்டு விபத்தில் இறக்கிறான்.


பெரியவர் பரந்த மனத்துடன் மருமகளைத் தொடர்ந்து படிக்க அனுமதிக்கிறார். காலேஜில் லெக்சரர் ஒருவரைக் காதலித்து மணக்கிறாள் மாட்டுப் பெண். தம் வம்ச வாரிசான குழந்தையைத் தாயிடம் தர முடியாது என பெரியவர் சொல்கிறார். அவளும் இனி குழந்தை பிறக்காதென்ற நிலையில் நோய் வாய்ப்படுகிறாள். இச்சமயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் தானே தன் தாயின் மகனல்ல என்றறிந்து உடனே மகனையும் தாயையும் சேர்க்க — தாய் இறக்கிறாள்.

சோமயாஜுலு வேதம் சொல்லும் பாங்கும், குழந்தை வளர்க்கும் அழகும், மருமகளிடம் காட்டும் பரிவும், கணீரென்ற குரலும் — மனுஷன் நடிப்பதைப் பார்த்தாலே நம் மனத்தை அலம்பிச் சுத்தப்படுத்திய மாதிரி இருக்கிறது.


மருமகள் சரஸ்வதியாய் வரும் ஜோதி கணவன் நினைவால் ஏங்கி நிற்கும் இடங்கள் சோகக் கவிதை. கேமராவும் உதவி. கண்ணாடியில் பொட்டிட்டு ரசிப்பதும், மகனை வீட்டுக்கு அழைத்து உணவளிப்பதும், எல்லாம் மறக்க முடியாத முத்திரைகள்.

லெக்சரராய் வரும் அனில் கபூர் மகா சுறுசுறுப்பு, அநாயாச நடிப்பில் கபூர் வம்சம் பேசுகிறது. ரொம்ப நாளைக்கப்புறம் வந்த அம்மா, மகனிடம் முத்தம் கேட்க அவனோ தான் மடி என்று கூறி ஓடிவிடுவது போன்ற இடங்கள் பலவற்றை உருவாக்கிய டைரக்டர்: பாபு. இரும்பவும் இனிமையான கே. வி. மகாதேவன்.

— நளினி சாஸ்திரி




கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



பணம் 10-ம் செய்யும்!

"சின்ன முதலாளி, வணக்கம்..."

ரயிலில் முதல் வகுப்பில் உட்கார்ந்து இருக்கின்ற முதல் வகுப்புப் பயணி ஒருவர் "சின்ன முதலாளி வணக்கம்" என்று என்னைச்சொன்னால்?....

சொல்லும் இந்த ஆசாமி யார்? சொன்னவர் முகம், அகன்று பரந்த முகம். நிறம் கறுப்பு. ஒளிபடைத்த கண்கள். பேசத் துடிக்கும் உதடு. கைவிரல்கள் நிறைய டால் அடிக்கும் மோதிரம் திறுககள் — விதவிதமான விலை உயர்ந்த கற்கள்... உடம்பிலே மஞ்சள் வர்ண பட்டு ஜிப்பா... ரயில்வே கம்பார்ட்மெண்ட் முழுமையும் பெருக்கும் விதத்தில் சாண் அகலம் தெசவு போட்ட பட்டுக்கரை வேஷ்டி உடுத்தியுள்ளார்.

இத்தகைய அலங்கார புருஷன் —பணக்காரன் — என்னை "முதலாளி" என்று சொன்னால்? சொல்ல நியாயம் இருக்கிறது. மதுரையில் எங்களுக்கு வர்ண — இரும்பு மொத்த வியாபாரம். என் தகப்பனார் பெரிய முதலாளி; நான் சின்ன முதலாளி. கடைக்குள் இது சரி... மதுரை தடைவீதி வரை 'சின்ன முதலாளி' சரியாகும்.

ரயில்வே முதல் வகுப்புக்குள் "சின்ன முதலாளி" என்றால் இந்த ஆசாமி யார்?....

"உங்களைத் தெரியவில்லையே!"

நான் தலையை அசைத்தேன். கையை விரித்தேன்.

"நான் முத்துவேல்!"

ஹாங்! நினைவு வருகிறது. பத்தாண்டுக்கு முன்னால் முத்துவேல் எங்கள் கடையில் நாற்பது ரூபாய்க்கு வேலை செய்தான். அப்போது ஆள் ஒல்லி. ஏழைமை முகம். வங்கு வற்றிய தோல். பாங்கியில் பணம் கட்டச் சொல்லிக் கொடுத்து அனுப்பிய தொகை முந்நூறு ரூபாயுடன் காணாமற் போய்விட்டவன். ஒரு வருடத்துக்குப் பிறகு முந்நூறு ரூபாய்க்கு வட்டி உட்பட டிராப்டும், மன்னிப்புக் கடிதமும் வந்தது.

அடே! இந்த ஆசாமி முதல் வகுப்பில் வருகிறார். எப்படிப்பட்ட யோகம் அடித்திருக்கும்!

"உட்காரப்பா. எங்கே எவ்வளவு தூரம்?"

"விருதுநகர்ப்பக்கம் என் தங்கச்சிக்குக் கல்யாணம். என்னை இனம் கண்டு கொண்டீங்களா?...."

"உம்... நினைப்பு வந்தது. டிராப்டும் மன்னிப்புக் கடிதமும் நினைவுக்கு வந்தன. என்ன செய்யுறீங்க இப்போ?"

"அன்னை பிள்ளை தெருவிலே, அரண்மனைக்காரத் தெருவிலே, கே. கே. நகர்லே எல்லாம் பழைய பேப்பர் கடை. "மும்முடி வேந்தர் பழைய பேப்பர் மார்ட்". சைடு பிசினஸ் மாட்டு தீவனம். பொட்டு—வியாபாரம் நடக்குது....

"ஒரு லட்சம் தேறுமா?"

"பொட்டுக் கடையிலே மட்டும் அது தேறும்."

"பழைய பேப்பர் வியாபாரம்?"

"எல்லாம் நிறைய லகாரம் லகாரமாய்ச் சேர்ந்திருக்குது. அடையாறு பக்கம் பங்களா. பெசண்ட் நகர் பக்கம் பெரிய பங்களா இருக்குதுங்க...."

முத்துவேல் வாய் பிளந்தார். பளபளக்கும் திருமண அழைப்பிதழ் எடுத்துக் கொடுத்தார். அந்த அழைப்பிதழ் ஒன்றின் விலை இரண்டு ரூபாய் தானும். எல்லாம் பழைய பேப்பர் தந்த யோகம்!

"பெண்ணுக்கு எவ்வளவு நகை போடறதாம்?"

"நூறுபவுன். பாத்திரம், பண்டம், வெள்ளி விளக்கு. தட்டம் டம்ளர் ஸெட்டு. ஸெட்டா.... அப்படி இப்படி ஒரு ருவா..."

"அதாவது ஒரு லட்சம்!"

"எங்கம்மா எல்லாம் பேசி முடிச்சவிட்டாங்க."

"நீ மாப்பிள்ளையைப் பார்க்கலே . இல்லையா?"

"எனக்குப் பழைய பேப்பர் கடைகள். விட்டா பொட்டுக் கடை பன்னிரண்டு பிராஞ்சலே கணக்கு நானே வரவு செலவு பார்க்கணும். மாப்பிள்ளைக்கு சேலத்திலே பெரிய பலசரக்கு மண்டி; மூன்று விறகுத் தொட்டி. எவர்சில்வர் மொத்த ஏஜன்சி. கோவை — சேலம் இரண்டு மாவட்டத்துக்கும் சேர்த்து சொத்து ஆக அரைக் கோடி தேறும். இதை அம்மா சொன்னாங்க. திடீர்னு இடம் முடிவாச்சுது...."

"உன் தங்கை யோகசாலி!"

"மதுரையிலே இறங்கிப் பெரிய முதலாளிக்கும் உங்களுக்கும் தனித் தனி கலியாணக் காகிதம் கொடுக்க நினைச்சேன். ஆண்டவன் இங்கே சந்திக்க வைத்துவிட்டார்!"

"அப்பாவாலே வர முடியாது. பிளட்-பிரஷர். ரெஸ்டிலே இருக்காங்க. நான் அவசியம் வருவேன். விருதுநகருக்கு வர வேண்டிய வேலைஇருக்குது. எத்தனும் தேதி... 15ந் தேதி வெள்ளிக் கிழமை..."


"நானைய மறுநாள்..."

"அவசியம் வருவேன் கல்யாணத்துக்கு."

என் மனம் சலனமடைந்தது. எங்க கடையில் இருடிய காசுக்குள்ளிருந்து லட்சம் லட்சமாக விருத்தி செய்துவிட்டதில் பெருமை கொண்டது. யோகம் வரும் போது பணம் வெள்ளமாகப் பாயும் போலும்...

"முதலாளி, உங்க பணத்திலே இருந்து எனக்கு அதிர்ஷ்டம் ஆரம்பம் ஆகலே..."

என் மனத்தின் ஓட்டத்தைச் சிறகெனப் பிடித்தவன் போன்று பேசிவிட்டானே?



''மூந்நூறு ரூபாய் பணத்தோடு ரயில் ஏறும்போது எனக்கு டிக்கெட் எடுக்க நேரம் இல்லை. ஓடும் ரயிலில் என்னை டி.டி.ஆர். ரயில்வே போலீஸ் இரண்டு பேரும் மடக்கிக் கொண்டார்கள். பேரம் பேசி என்னை எழும்பூரில் இறக்கிவிட்டார்கள். என் கைப் பணத்தை. முழுவதும் பறித்துக் கொண்டார்கள்! நான் பட்டினியாகத் திரிந்தேன். பசியோடு நடந்தேன். குடும்ப நல அறுவைச் சிகிச்சை நிலையம் தெரிந்தது. அறுவை செய்பவர்கள், இவர்களைக் கூட்டி வருகிறவர்கள் இவர்களுக்கு இனம் தொகை அறிவித்தது. அன்று நான் இரண்டு கேஸ் தேடிவிட்டேன். இருபது ரூபாய் சம்பாதித்தேன். அந்தப் பணம்-சர்க்கார் தந்த பணம்-வழியாக படிப் படியாக பொட்டுக் கடை, வேஸ்டு பேப்பர் என்று வளர்ந்தேன்...''

தன் கதையைச் சொல்லி முடித்தார் முத்து வேல். அவன் மீது கொண்ட பொறாமைத் தீ அணைந்து விட்டது என்று சொல்ல முடியாது. சிறிது கனன்றது.

''வால்டாக்ஸ் தியேட்டர் பக்கம் பழைய கோணி வாங்கி விற்றேன். தினம் ஐந்து ரூபா பத்து ரூபா வந்தது. ஒரு வருஷத்தில் ஆயிரம் இரண்டாயிரமாகத் தினம் தினம் புரள 'ஆரம்பித்தது...''

முத்து வேல் பேசப் பேச என்னுள் பொறாமை மீண்டும் கனன்றது ஜ்வாலை விட்டது.

''கையில் முதல் சேர்ந்து விட்டால நமக்கு உழைப்புக் குறைந்து நமக்காக உழைக்கும் ஏழைகள் எளியவர்கள் வந்து கைகட்டி நிற்பார்கள். பணம் சம்பாதிக்கத் தொடங்கினால்தான் பணக்காரன் ஆகி முதலாளியாக வர முடியும். உழைப்பாளி சம்பாதிக்கத் தொடங்கினால் தொழிலாளியாக இருக்க வேண்டும்; நீங்க முதலாளி... தூங்குங்கள்...''

இவ்வாறு பேசி ரயில் பெட்டி விளக்கை நீல நிறத்துக்கு மாற்றினேன். அமைதி. அமைதிக்கு மேலாக ரயில் சத்தம் ஒடியது.

மதுரையில் இருவரும் இறங்கினோம்.

ஓடிப்போய் எனக்குக் காப்பி வாங்கிக் கொடுத்தார் முத்து வேல். என் தந்தை பெயருக்குத் திருமண அழைப்பு ஒன்று தந்தார்.

இருவரும் பிரிந்தோம்.

மறுநாள் விருதுநகர் பக்கம் நிலுவை பாக்கி கேட்க வேண்டியதாய் இருந்தது. நம்மிடம் நாற்பது ரூபாய்க்கு வேலை பார்த்தவன் அரைக் கோடிக்கு அதிபதி நடத்தும் அந்தத் திருமண வைபவத்தைக் காணக் காரில் போனேன்.

அங்கு நின்ற கார்களில் என் கார்தான் மட்டம். அவ்வளவு புதிய – வெளி நாட்டுக் கார்கள் நின்று கொண்டிருந்தன.

பெரியவர்கள் கூட மாப்பிள்ளைச் சடங்கு செய்து கொண்டிருந்தார்கள். பெண் சடங்கு நடக்க வேண்டும்.

முத்துவேல் தாயிடம் சென்று ஏதோ பேசினான். தாய் மறுத்தாள். பயமுறுத்தினான்.

கராத்தே பயிற்சி 19

பயிற்சியாளர்: டோனி பொன்னையா
சித்திரம்: அர்ஜி.. படம்: உத்ரா
அமைப்பு: குண்டுமணி






BACK STANCE BLOCK

ஒருவரை எதிரி பக்கவாட்டிலிருந்து நெருங்கி தாக்கும் போது நின்ற இடத்திலேயே இந்த Back Stance முறையில் தடுப்பது எளிதாகும்.

படம் ஒன்றில் தடுக்கும் முறை உள்ளது. படம் இரண்டில் எதிரியிடமிருந்து தாக்குதலைத் தவிர்க்கும் முறையைக் காண்கிறீர்கள்.



"இந்த மாப்பிள்ளை வேண்டாம். பத்து லட்சம் பணம் செலவு ஆனால் ஆகிவிட்டுப் போகட்டும்..."

தாய்க்கும் மகனுக்கும் வடாய். பெரியவர்கள் புகுந்து பிடிவாதமாக முத்துவேலைப் பந்தலை விட்டுத் தள்ளிக்கொண்டு வெளியே வருகிறார்கள்.

நான் பந்தலுக்குள் நுழைகிறேன்.

முத்துவேல் என்னைப் பார்த்து "சின்ன முதலாளி, நான் பிச்சைக்காரன்" என்று அழுதான் புலம்பினான்.

என் காதில் "அவனுக்கும் பைத்தியம் முழா பிசகி விட்டது" என்றார்கள்.

யாரைக் கண்டு என் மனம் ரயில் பயணத்தில் பொறாமைப் பட்டதோ இப்போது இரக்கம் காட்டுகிறது. எதற்காகப் பைத்தியம்?... முத்துவேலை எதிர் பங்களாவுக்குள் தள்ளிக் கொண்டு போய் வைத்துப் பூட்டி விட்டார்கள்.

பந்தலுக்குள் போனேன். திருமணச் சடங்கு களைகட்டி இருந்தது. மங்கள வாத்தியங்கள் முழங்கின. மூன்று முடிச்சுப் போடும் காட்சியைச் சகோதரன் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. நான் பார்த்தேன்.

நான் எழுந்து எதிர் பங்களாவுக்குள் போனேன். முத்துவேல் முகத்தில் இருந்த களை, பெருமிதம் யாவும் எங்கோ ஓடி விட்டன. அவன் என்னைப் பார்த்துக் கதறினான்.

"சின்ன முதலாளி... நான் என்னுடைய குடும்ப நலக் கமிஷன் — பணம் பத்து ரூபாய் பணம் பண்ணினேன். அதன் வழியில் கோடீஸ்வரன் ஆனேன் என்று சொன்னேன் அல்லவா? மணப் பந்தலிலே இருக்கிற ஆளுதான் அறுவைச் சிகிச்சைக்கு நான் பிடித்த முதல் ஆள். அந்த முதல் தான் இந்தத் திருமணத்துக்கு ஆஸ்தி."

என் காதில் இடிகள் பல விழுந்தது போல இருந்தது. முத்துவேல் . விம்மல் அழுகை இவற்றுக்கு மேலாக மணப் பந்தலிலிருந்து வாழ்த்துக்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

"நீங்கள் இருவர். உங்களுக்கு இருவர் போதும்..."

பந்தலில் சிரிப்பு. நானும் முத்துவேலும் நெருப்பில் நிற்பதை யார் அறிவார்கள்?


ஒரு மங்கையின்
வாழ்வில் மிக
இனிமையான
நேரங்களில்
இணைந்திருப்பது
கட்டாவ்.
கட்டாவின் டெர்கோஸா ஸாரிகள்.

"எட்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு அதுவும் ஸ்தாபகர் மறைந்த பிறகு ஏ. வி. எம். முத்திரையுடன் வெளிவருகிற முதல் படம் என்கிற அக்கறையுடன் ஸ்தாபனத்துக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என்கிற பயத்தோடு பணியாற்றினோம்" என்றார் இயக்குனர் எஸ். பி. முத்துராமன்.

பதினைந்து ரீல் 'முரட்டுக் காளை' வண்ணப் படத்தில் ஏறக் குறைய ஆயிரம் அடிகளே இடம் பெறுகின்றன மஞ்சிவிரட்டு காட்சிகள். ஆனால் அவற்றைப் படம் பிடிக்க எடுத்துக் கொண்ட சிரமம்தான் அதிகம். அந்தக் காட்சிகள்தாம் படத்தின் தனிச் சிறப்புக்

அட்டைப்படக் கட்டுரை

காமிராவுக்குள் அடங்கிய காளைகள்!



குத் துணை நிற்கின்றன. அதைப் படமாக்கியது பற்றிய சுவையான தகவல்களைச் சொல்லும்படி கேட்டபோது டைரக்டர் திரு எஸ். பி. முத்துராமன் தொடர்ந்து கூறினார்:

"படத்தில் முக்கியமான காட்சி எதுவோ அது தரமாக அமையும்வரை என்ன செலவானாலும் ஆகட்டும் செய்யுங்கள்" என்று மறைந்த பெரியவர் ஏ. வி. எம். சொல்வாராம். இந்தப் படத்தின் தயாரிப்பில் தந்தையின் கொள்கையை அப்படியே பின்பற்றியிருக்கிறார்கள் அவருடைய பிள்ளைகளான திருவாளர்கள் குமரன், சரவணன், பாலசுப்பிரமணியன் மூவரும்!"

இந்த மஞ்சிவிரட்டுக் காட்சிகளைப் படமாக்க அவர்கள் திட்டமிட்டபோது, தமிழகத்தில் பிரபலமான இடங்களிலெல்லாம் ஏறக் குறைய விசாரிக்கு முடிவடைந்து உயிரைத் துச்சமாக மதிக்கிற வீர விளையாட்டு இது.

முயற்சிகள் பயனற்றுப் போய் மனம் தளர்ந்து அவர்கள் காரில் ஊர் திரும்பினார்கள். 'அப்போது மதுரை அருகில் ஒரு ஆள் மஞ்சிவிரட்டுக் காளையுடன் எதிரில் வந்தார். அந்த ஆளை மடக்கி விசாரித்தார்கள். அவர் ஒரு பெரிய அம்பலக்காரர் பெயரைச் சொல்லி அவரிடம் அனுப்பி வைத்தார்.

"இந்த வருசத்திலேயே இன்னும் இரண்டு மஞ்சிவிரட்டுத்தான் பாக்கி. பாகனேரியிலும் பனையப்பட்டியிலும். அங்கபோயி.." என்று அம்பலக்காரர் அடி யெடுத்துக் கொடுக்க இவர்களுக்கு மறுபடி நம்பிக்கை துளிர் விட்டது.

பாகனேரி. அங்கே காங்கிரஸ்காரரான உடையப்பா குடும்பம் கை கொடுத்தது. அவருடைய மகன் திரு உ. சுப்பிரமணியன் (சட்ட சபை உறுப்பினர்) திருஞானம், திரு ஆர். வி. சுவாமிநாதனுடைய குமாரர் ராஜுமார்த்தாண்டம் இவர்களெல்லாம் நாங்களாயிற்று என்று அபயம் தந்தார்கள் யும் குறிப்பிடுகிறார் திரு முத்துராமன். "கண்டபடி காமிரா முன்னால் குறுக்கும் நெடுக்கும் ஓடாமல், படப் பிடிப்பு நடக்கிறது என்கிற பரபரப்பையே காட்டாமல் அமைதியாக நடந்து கொண்டு ஒத்துழைத்தார்கள்" என்கிறார்.

படப் பிடிப்புத் தொடங்குவதற்கு முந்தைய நாள், சட்ட மன்ற உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு உ. சுப்பிரமணியனுக்குப் பாராட்டு விழா நடைபெற்றதாம். அந்த மேடையையே தாமும் பயன்படுத்திக் கொண்டதாகச் சொல்கிறார் இயக்குனர். கிராம மக்கள் எப்படியெல்லாம் நடந்து கொண்டு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று அந்த மேடையில் ஏறி விளக்கிச் சொல்லி ஆதரவு வேண்டினார்.

பனையப்பட்டியிலும் மக்கள் சிறப்பான ஒத்துழைப்பு நல்கினர்.

படத்தின் ஒளிப் பதிவாளராகப் பணியாற்றிய திரு பாபு சொல்கிறார்:

"சாதாரணமாக ஒரு முழுப் படத்தை எடுத்து முடிக்க 40 ரோல்கள் பிலிம் போதும்-

படத்துக்காக என்று தனியாக மஞ்சி விரட்டுக் காட்சிகளை ஏற்பாடு செய்து தர யாரும் தயாராயில்லை. பொங்கலைத் தொடர்ந்து தமிழ் நாட்டின் பல இடங்களில் நடைபெறும் இந்த வீர விளையாட்டு, கோவில் திருவிழாக்களின் ஒரு பகுதியாகவே நடைபெறும். மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் டைரக்டர் முத்துராமனும், ஒளிப் பதிவாளர் பாபுவும் எங்கெங்கோ சுற்றி அலைந்தும், வெற்றி கிட்டவில்லை.

மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்றுத்தான் மஞ்சிவிரட்டு நடத்த முடியும். பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை இப்படி அனுமதி பெற்று நடைபெறும் மஞ்சி விரட்டுக்களில் யாரேனும் உயிரிழக்க நேர்ந்தாலும் வழக்குகள் கிடையாது. அப்படி



எஸ். பி. முத்துராமன் தொடர்ந்து சொல்கிறார்.

"பாகனேரி பில்வநாயகி அம்மன் கோயில் திருவிழாவும், அதற்கான மஞ்சி விரட்டும் எங்களுக்காகவே காத்திருந்தன. நகரத்தார், நாட்டார் இரு சாராரும் மிகவும் மகிழ்ச்சியுடன் அந்த மஞ்சிவிரட்டைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி தந்தார்கள். உடனே சென்னை வந்து நடிகர்கள் ரஜனி, ஜெய்சங்கர், சுருளிராஜன், மகேந்திரன், கமலதா இவர்களுடன் பாகனேரி திரும்பினோம்.

"பில்வநாயகி அம்மனுக்குப் பிரார்த்தனை செய்துவிட்டுப் படப் பிடிப்பைத் தொடங்கினோம்.

"ரொம்பவும் பிஸியான நேரத்திலும் இல்லையென்று சொல்லாமல் கேட்கிற போதெல்லாம் ரஜனி கால்ஷீட் தந்து ஒத்துழைத்தார்.

"பல மாடுகள் ஒரே ஓட்டமாய் ஓடிப் போய்விடும். ஆனால் நின்று விளையாடுகிற மாடுகள் என்று ஒரு ரகம். பட்டியிலிருந்து பத்துப் பத்தாக வெளியே விடுவார்கள். இந்த ஜாதி மாடுகள் மட்டும் அப்படியே ஓடாமல் ஜனங்கள் மத்தியில் வந்து நின்று கொள்ளும். ஆட்களைக் கிட்டவே நெருங்க விடாமல் கொம்புகளை அசைத்துச் சீறும். 'உன்னால் முடியுமா பார்' என்று மனிதனுக்குச் சவால் விடும். இந்த மாதிரி மாடுகளை அடக்குவதுதான் பெரிய விஷயம். ஜனங்களிடையே இந்த ரக மாடுகளுக்கு ஸ்டார் வால்யூவே உண்டு." என்கிறார் காரைக்குடிக்காரரான டைரக்டர் எஸ். பி. முத்துராமன்.

மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் பல பகுதிகளிலிருந்தும் சுமார் நானூறு மாடுகள் இந்த மஞ்சிவிரட்டில் பங்கு கொண்டன. இன்றைய தலைமுறையினருக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு நம்முடைய வீரமும், கிராமியக் கலாசாரமும் தெரிய இக்காட்சிகள் பெரிதும் உதவும்.

இந்தப் படப்பிடிப்பில் கிராம ஜனங்கள் காட்டிய அக்கறையையும் ஒத்துழைப்பை

ஆயிரம் அடிகளை இடம் பெறுகிற இந்தக் காளைகளை மடக்குகிற காட்சிகளைப் படமாக்க மட்டும் இருபத்தைந்து ரோல்கள் செலவாயிற்று.

"மனிதனுக்குத்தான் 'மூட்' வர வேண்டும் என்பதில்லை. படத்தில் வருகிற ராமு என்கிற காளை — அதுவும் ஒரு நாள் மூட் வராமல் சிரமப்படுத்தியது. ஒரேயொரு ஷாட் எடுத்துவிட்டு முழு நாளும் வீணாயிற்று.

"காமிரா மேன் என்கிற முறையில் ரஜனியின் ஒத்துழைப்பைச் சொல்லியாக வேண்டும். ரொம்பவும் ரிஸ்க் எடுத்துக் கொண்டு மஞ்சிவிரட்டுக் காட்சிகளில் அவர் நடித்தார்."

ஸ்பெயின் நாட்டு புல்பைட்டெல்லாம் நமது மஞ்சிவிரட்டின் கிட்டத்தில் நிற்க முடியாது என்று நிரூபிக்கிறார் பாபு இந்தக் காட்சிகளில்.

காமிரா ஆங்கிள் சரிபார்ப்பது, காட்சி அமைப்பைச் சிந்திப்பது என்று கொஞ்சம் அயர்ந்தாலும் போதும். மாடுகள் மிதித்து விடுகிற ஆபத்து உண்டு. கலை நோக்கு பிரதானமடைந்தபோது அதிலுள்ள ஆபத்து மறந்துபோய்விட்டது பாபுவுக்கு. மாடுகளைப் பயிற்சி அளித்து ஒத்திகை பார்த்துப் படம் பிடிக்க முடியாது. 'ட்ரிக் ஷாட்' முறையில் ஸ்லோ மோஷனில் படமாக்கி ஸ்பீட் அப் பண்ணுகிற பாச்சாவும் பலிக்காது. மாடு ஓடுகிற வழியிலேயே காமிராவும் ஓடியாக வேண்டும். வேறு வழியே இல்லை. இவர் எடுத்துக் கொள்கிற ரிஸ்கைப் பார்த்து கமலதா பயந்து நடுங்குவார்.

தினசரி மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடைபெற்ற படப் பிடிப்புக்களில் மூன்று காமிராக்களைச் சுழல விட்டார் பாபு. லைட் அட்ஜஸ்ட்மெண்ட் செய்ய முடியாத இயற்கையான படப்பிடிப்பு. முயற்சி திருவினையாக்கும் என்பது ஏ. வி. எம். நிறுவனத்தின் கொள்கை வாசகம். "அது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை இந்தப் படப் பிடிப்பு முடிந்ததும் உணர்ந்தேன்" என்கிறார் பாபு.

— மில்க்

10

அவளுக்கு அந்த நினைவுகளே கசந்தன. இதை இதோ இந்த வினாடியிலேயே கூட தவிர்த்துக் கொண்டு விடலாமே!

அவளுடைய உள் மனம் மட்டுமல்ல... அதில் ஜ்வாலை விட்டுக் கொண்டிருந்த மூர்க்கமான ஆவேசங்களும் கூட இத் திருமணம் நடந்தே தீர வேண்டும் என்று துவளும் கட்டிக் கொண்டிருந்தது.

அது சம்பிரதாயமோ அல்லது மேல் பூச்சோ... பதிவேடோ அல்லது பவித்திரமான பிணைப்போ... என்னவோ.. ஒன்று! எதாக இருந்தாலும் இந்தச் சம்பிரதாயம் வேறு ஒரு சம்பிரதாயத்துக்குத் தேவை. வேறு செயலுக்காக வேண்டும். செய்தாக வேண்டும். அவன் ஏமாற்றப் போகிறான் என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தாலும் இதை இப்படியே விட்டு விடக் கூடாது.

இறகுகளைப் பொசுக்கிக் கொண்டு ஜுவாலையிலே போய்ச் சுவரில் மோதுண்டு விழும் விட்டில் போல ஆகக் கூடாது.

இறகுகள் இருக்கவே அந்த விளக்கை அணைக்க வேண்டும். இறகுகளைப் பொசுக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அவள் வீட்டின் நிலை வாயிற் படியில் நின்று கொண்டிருந்தாள். நீளமான கூந்தலை முன் பக்கம் விட்டுக் கொண்டு அதன் நுனியை விரலால் விளையாடியபடி நின்றாள்.

அவளை அங்கே யாரும் துரிதப்படுத்தவில்லை. பதிவுத் திருமண அலுவலகம் போக வேண்டும் என்று யாரும் கூறவில்லை. எல்லாம் அங்கே நடக்கும் பேச்சிலிருந்தே அவளாகவே யூகிக்க வேண்டியதுதான்—யூகித்துக் கொண்டாள்.

இப்பொழுதும் அவளாகத்தான் தனியே போக வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டாள். பார்வதமும் அருணாசலமும் என்ன செய்யப் போகிறார்கள்? அவர்கள் எப்படி வரப் போகிறார்கள் என்பதைப் பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது. அவர்களும் இன்றைய நிகழ்ச்சி பற்றி ஒன்றும் பேசவில்லை.

அருணாசலம் வெளியே சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு டாக்ஸியுடன் வந்தார்.

பார்வதம் ஏற்கனவே தயாராகி விட்டாள். சுமங்களா தன்னைப் பிரமாதமான முறையில் தயார்ப்படுத்திக் கொள்ளவில்லை. இருப்பதிலேயே நல்ல புடவையாக ஒன்றை உடுத்திக் கொண்டாள். நகைகள் என்று ஒன்றும் அவளுக்குக் கிடையாது. இருப்பதெல்லாம் கவரிங்கில் இரண்டு ஜதை வளையல், ஒரு மாலை உண்டு. அவள் சிறுமியாக இருந்தபோதே காதில் ஒரு தோடு உண்டு. பிற்பட்டு அதை அழித்து இரண்டு வளையம் செய்து போட்டிருந்தாள் பார்வதம். இன்றுவரை அதுதான் காதில் தொங்கிக் கொண்டிருக்கிறது. வெளியில் வளையல் கடைகளுக்குப் போகும்போது முத்துப் பதித்த வெவ்வேறு டிசைன்களில் உள்ள காதணிகளை அவள் வாங்கி அணிந்து கொள்வாள். அவள் ஆபரணங்கள் என்பவை அது மட்டுமே.

ஸ்வாமி பிறையில் வாழை இலையில் பூ சுருட்டி வைக்கப்பட்டுப் பிரிக்கப்படாமல் இருந்தது. அது தனக்காகத்தான் இருக்கும் என்று எண்ணி எடுத்துத் தலையில் சூடிக் கொண்டாள்.


முகத்தை நன்றாகக் கழுவி, பவுடர் பூசி, நெற்றியில் திலகம் இட்டுக் கொண்டிருந்தாள். பல நாட்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் புருவங்களுக்கு மை இட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் கல்யாணப் பேச்சை ஆரம்பித்த நாளாக உண்டான மௌனம் வீட்டில் இன்னும் கலைந்த பாடில்லை. அது இனி கலையாத மௌனமாகவே நீடிக்கப் போகிறது என்பது அவளுக்குத் தெரியும்.

இந்த மௌனத்தைக் கலைத்து யாருக்கு என்ன ஆக வேண்டும்? இது கலைவதால் என்ன மாறுதல் உண்டாகப் போகிறது?

வீட்டில் அணைந்த விளக்கு

மகரிஷி



கடைசி நேர அற்புதங்கள் எதையும் அவள் எதிர்பார்க்கவில்லை. ஒரு விதத்தில் அதுவே சௌகரியமாகவும் பல விஷயங்களைப் பற்றித் தனக்குள் சிந்திக்க வசதியாகவும் இருந்தது. யாருடைய குறுக்கீடும் இன்றி வெளிப்புறத்தில் உடலால் இயங்கிக் கொண்டே உள்ளுக்குள் பல தீர்மானங்களைப்போட்டுக்கொண்டிருந்தாள்.

கண்ணாடி முன் நின்று பூ வைத்துக் கொள்ளும்போது பின்னால் அருகில் பார்வதம் பிரிக்கப்படாத காகிதப் பொட்டலம் ஒன்றைச் சுமங்களாவின் கவனத்தைக் கவரும் வகையில், பிரித்து. ஸ்டூலில் வைத்து விட்டு அப்பால் போய் விட்டாள்.

அதைத் திரும்பிப் பார்த்தாள். அந்தப் புடவை தனக்குத்தான் என்பதைச் சுமங்களா யூகித்துக் கொண்டாள். அதைப் பிரித்து வைத்து விட்டுப் போவதிலிருந்து அந்தப் புடவையை அவள் கட்டிக் கொள்ள வேண்டும் என்று விளங்கியது.

பிரித்துப் பார்த்தாள். மலிவான புடவை. ஆனாலும் நன்றாகவே இருந்தது. அந்தக் கலரில் அவளிடம் ஜாக்கெட்டும் உண்டு. இதைத் தெரிந்துதான் பார்வதம் அந்தக் கலரில் புடவை வாங்கிக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

இதைக் கட்டிக் கொள்ள வேண்டுமா?

புதிய நிகழ்ச்சி ஒன்றில் அவள் ஒரு பிரதான நபர். இதைக் கட்டிக் கொண்டு போவதில் தவறென்ன? ஒரு வேளை இதுவும் அவர் வாங்கித் தந்ததாகக் கூட இருக்கலாம்.

வெளியே புறப்படுவதற்காக ஏற்கனவே உடுத்திக் கொண்ட புடவையை அவிழ்த்துக் கொடியில் போட்டாள். புதிய மலிவான புடவையை மகிழ்ச்சியுடன் கட்டிக்கொண்டாள்.

வாசலில் டாக்ஸி நின்றிருந்தது. அதில் ஏற்கனவே அருணாசலம் போய் உட்கார்ந்திருந்தார். பார்வதம் பூட்டுச் சாவியுடன் முன் தாழ்வாரத்தில் நின்று சுமங்களாவைத் துரிதப் படுத்திக் கொண்டிருந்தாள்.


டாக்ஸி தனக்காகத்தான் காத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டவள் தன் அலங்காரத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

டாக்ஸியின் கதவைத் திறந்தபடி அருணாசலம் உள்ளே அமர்ந்திருந்தார்.

அவள் அதில் ஏறிக் கொண்டாள்.

எதிரும் புதிருமான நான்கைந்து வீடுகள் கொண்ட சிறிய காலனிப் பகுதி அது. நடுவே அகலமான சிமெண்ட் நடை பாதை.

எதிர் வீட்டிலும் அடுத்த வீட்டிலும் ஒரு சிலர் வெளியே வந்து நின்று கொண்டிருந்தனர்.



கதவைப் பூட்டிக் கொண்டு பர்வதம் காரில் வந்து ஏறிக் கொண்டாள்.

கார் புறப்பட்டது.

கையெழுத்துப் போடுதல், மாலை மாற்றிக் கொள்ளல் போன்ற சடங்குகள் பதிவுத் திருமண அலுவலகத்தில், முடிந்து அவர்கள் வெளியே வந்தபோது, கோமதியும் அகிலாவும் சிரித்த முகத்துடன் நின்று கொண்டிருந்தார்கள்.

அகிலாவின் தோளில் காமிரா தொங்கிக் கொண்டிருந்தது.

மாலையும் கழுத்துமாகப் பரமேஸ்வரனும் சமங்களாவும் வெளியே வந்தவுடன், அவர்கள் இருவரும் மாலையைக் கழற்றப் போனார்கள்.

அகிலாவும் கோமதியும் அதற்கு விடவில்லை. ''கொஞ்சம் இருங்கள்'' என்று கோமதி சொல்வதற்கு முன்பாக அகிலா தன் கைக் காமிராவினுல் அவர்களைக் காமிரா ரேஞ்சில் கொண்டு வந்து விட்டாள்.

''போட்டோ எல்லாம் வேண்டாம். அதில் எனக்கு இஷ்டமில்லே!'' என்று சினத்துடன் பரமேசுவரன் சொன்னுன்.

''இது உங்களுக்காக இல்லே. எங்களுடைய தோழிக்காக'' என்ருள், அகிலா.

''நோ. என் அனுமதி யில்லாமல் இதை நீங்கள் எடுக்கக் கூடாது.''

அதற்குள் அகிலா அங்கே இரண்டு மூன்று கிளிக்குகளைத் தட்டி முடித்து விட்டாள்.

''இது உன் ஏற்பாடா?''

பரமேசுவரன் சினத்துடன் சமங்களாவைப் பார்த்தான். அவள் அதற்குப் பதில் ஒன்றும் கூறவில்லே.

அவன் காமிராவைப் பிடுங்க அகிலாவை நோக்கி ஓடினன். அகிலாவும் கோமதியும் வேகமாக ஓடி, தாங்கள் வந்த டாக்ஸியினுள் உட்கார்ந்து கொண்டனர்.. சமங்களாவுக்கு கை அசைத்து விடை பெற்றனர். டாக்ஸி புறப்பட்டு விட்டது.

டாக்ஸி வரை ஓடிவந்த பரமேசுவரன் காமிராவைப் பிடுங்க முடியாமல் போன சினத்துடன் சமங்களாவை முறைத்துப் பார்த்தான். அவன் மாலையைக் கழற்றிக் கையில் போட்டுக் கொண்டு நின்றிருந்தான்.

அவள் ஒன்றும் பேசவில்லே. எதுவும் அவர்களிடமிருந்தே பதில் வரட்டும் என்று இருந்து விட்டாள்.

அவன் ஏறி வந்த டாக்ஸியும் நின்று கொண்டிருந்தது.

அவள் எதிர்பார்த்து யூகித்த சம்பவ ஓட்டங்களின் முதல்அசம்பாவிதம் தொடங்கி விட்டது.

பரமேஸ்வரன் தன்னுடன் அவள் மாலையும் கழுத்துமாகப் போட்டோ எடுத்துக் கொள்வதைக் கூட விரும்ப வில்லே.

கழுத்திலிருந்து எடுத்த மாலையை டாக்ஸியின் பின் சீட்டில் எறிந்தான். டாக்ஸியின் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து கொண்டான்.

யாரிடமும் எதுவும் சொல்லாமல் புறப்பட்டுப் போய்விட்டான்.

அவன் எடுத்த எடுப்பில் — மாலே மாற்றிக் கொண்ட ஒரு அரை மணி நேரத்துக்குள் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட தினுசைப் பார்த்துப் புன்னகையுடன் தான் ஏறி வந்த டாக்ஸியை நோக்கி வந்தாள்.

இப்பொழுதும்....

மூர்க்கன்



● சோகமான முன்னுரையுடன் படம் ஆரம்பிக்கிறது. குறுகிய காலத்தில் நடிப்பால் உயர்ந்த ஜெயனின் இறுதிக் காட்சிகளைத் தொகுத்துக் காட்டி மனத்தை இளக்கி விடுகிருர்கள். ஈடு செய்ய இயலாத இழப்பு தான்.

தன் ஒரே தங்கையின் அகால மரணத்துக்குக் காரணமான ராஜனை அடித்து,உதைத்து, புரட்டி எடுத்துக் கொலை செய்யும் மூர்க்கன் விநோத் (ஜெயன்) ராஜனின் (சத்தார்) குடும்பத்தையே ஒழித்துக்கட்ட முயன்று போலீஸில் மாட்டி, பின் குண்டுக் காயத்துடன் தப்பி, தங்கையின் மரணத்துக்குக் காரணமான உண்மைக் கொலையாளி ராஜனின் தந்தையைக் கடைசியில் ஒழித்துப் போடுகிருன். ராஜனின் தங்கை விலாசினி (சீமா) ஜெயனைக் காதலித்து அப்பா கையாலேயே உயிரை இழக்கிருள்.

சென்ஸாரிக்கப்படாத காட்சிகள் தாராளமாய் உண்டு. ஜெயனின் முகம் கோபத்தைத் துப்புகிறது. கொலை செய்கையில் உடம்பு இரும்பாகிறது. மூர்க்கத்தனம் முழுசாய் வெளிப்படுகிறது.

வாட்ட சாட்டமான உடம்பைக் கொண்டவரும், இயல்பான நடிப்பைப் பெற்றவரும் இனிய உள்ளம் கொண்டவருமான ஜெயன் வாழ்க்கையில் காலன் மூர்க்கனுக விளையாடி விட்டான்.

ஜெயன் என்ற நட்சத்திரம் அஸ்தமித்துப் போயிற்று. ஆனல் அவர் உருவம் என்றென்றும் நம் மனத்தில் தங்கிப் போயிற்று.

— நளினி சாஸ்திரி

பார்வதமும் அருணாசலமும் தங்கள் மௌன விரதத்தைக் கலைக்காமல் டாக்சியில் வந்து ஏறிக் கொண்டனர். நடந்த கூத்தை அவர்களும் கண்டனர்.

டாக்சி புறப்பட்டது.

கோமதியின் உதவியுடன் இரண்டு மூன்று இடங்களுக்கு வேலைக்கு எழுதிப்போட்டாள் கமலா. இதற்குள் பார்வதத்தின் வட்டத்துக்குள்ளிருந்து வெளியேறிவிடத் துடித்தாள்.

பதிவுத் திருமணம் நடந்த தினத்தன்று அங்கு வந்து விட்டுப் போனவன்தான் பரமேசுவன். அதற்குப் பிறகு அவன் தலை காட்டவே யில்லை.

அவன் வராததைப் பற்றி அன்று அவள் பார்வதத்திடம் கேட்டாள்.

''அவர் இங்கே வரும் உத்தேசம் உண்டா? என்னை அழைத்துக் கொண்டு போவாரா? அவரை எதிர்பார்க்கலாமா?''

பார்வதம் ஏதோ வேலையாக இருந்தாள். சினத்துடன் கமலாவைத் திரும்பிப் பார்த்தாள். முகம் சிவந்து கொண்டிருந்தது.

''யாரைக் கேட்கிறே?''

''இதென்ன கேள்வி? உன்னைத்தான் கேட்கிறேன். வேறு யாரு கிட்டே கேக்க முடியும்?''

''என்கிட்டே ஏன் கேக்கறே? யாரு கிட்ட கேக்கணுமோ அவங்க கிட்டப் போய் நீயே கேட்டுக்க. உனக்குத்தான் சொல்லிக்கொடுக்கப் பெரிய பெரிய மனுஷங்க இருக்காங்களே. போலீஸ் டிபார்ட்மெண்ட்லே பெரிய போலீஸ் அதிகாரியைத் தெரியும்.''

''அந்த வீண் பேச்செல்லாம் எதுக்கு பார்வதம்? இப்போ நான் கேட்ட கேள்விக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? ஒண்ணு. அவர் என்னை அழைச்சிக்கிட்டுப் போகணும்.. போய்க் கிணற்றிலோ கடலிலோ பிடிச்சுத் தள்ளட்டும். அதுவும் அவர் கையாலேயே செய்து விட்டுப் போறதா இருந்தாலும் அதுக்கும் நான் ரெடி....இல்லே, 'அவ்வளவு தான், என் வேலை முடிந்துவிட்டது. இனி உன் வேலையை நீ பார்த்துக்கிட்டுப் போ'ன்னு பளிச்சுன்னு சொல்லிடட்டும். இப்படிக் கழுத்தறுக்கிற வேலை தேவையில்லே.''

''மூடு வாயை! யார் கழுத்தை யார் அறுக்கறாங்க? தெருவிலே நின்னவளே...''

''மீதி எனக்கே தெரியும். நீ பட்ட கடனுக்காக இதை இப்படித்தான் ஆரம்பிப்பே. நான் அதோட முடிவைக் கொஞ்சம் மாத்திட்டேன்'' என்று அவளுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே , உள்ளே போனாள், கமலா. தன் பெட்டியில் துணிகள் சிலவற்றை எடுத்து வைத்துக் கொண்டாள். புத்தகங்கள் முக்கியமானதைக் கட்டி எடுத்து வந்தாள், கூடத்துக்கு. முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

''அவருடன் வாழப் போறேன் என்பதற்காக இந்தக் கல்யாணத்தை நான் பிடிவாதமாகப் பண்ணிக்கல்லே. அவரு கூடப் படுத்துக்கிட்டேனே அதுக்காகத் தான். அவர் என்னை வாழ வைக்கப் போறதில்லேன்னு தெரிஞ்சும் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். நான் ஏமாந்து போயிட்டதாக நினைக்கல்லே. போயிட்டுவரேன். என்னை நிலைநிறுத்திக்கொள்ள எனக்குத் தெரியும். இந்த வாழ்க்கைப் போராட்டத்தில் உங்களையும் தேவையான பொழுது சந்திப்பேன். ஆனா, எங்கே போனாலும் எங்கே இருந்தாலும் எனக்கு நீ செய்த உதவிக் கடனைத் தீர்த்து விடுவேன்.'' நடந்தாள் கமலா.

(தொடரும்)



ஆசிரியர்: ''முதன் முதலாக எவரெஸ்ட் உச்சியில் ஏறியவர் யார்...?''

மாணவன்: ''பத்து சிக்கியர்கள் ஸார்...!''

ஆசிரியர்: ''என்னது...! பத்து சிக்கியர்?''

மாணவன்: ''ஆமாம்.... டென் சிங்!''

-உ. ராஜாஜி



படுக மொழியின் முதல் நூல் அண்மையில் வெளிவந்துள்ளது. மார்க்கு எழுதியுள்ள சுவிசேஷம், 'மார்க்கு எம்பம பரத ஒள்ளெ கத்தெ' என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. படுக மொழிக்கு எழுத்து வடிவம் இல்லாததால், தமிழ் எழுத்துக்களைக் கொண்டே இதனை எழுதியுள்ளார் திரு கி. பி. கிருஷ்ணய்யா.


-சித்ரா தேவி

“ஐ” ராஜா

ராமநாதபுர மாவட்டம் அருப்புக் கோட்டையில் "பேமஸ் இளைய ராஜா மன்றம், இன்னிசை இளைய ராஜா மன்றம், உங்கள் இளைய ராஜா மன்றம்" என்று மூன்று மன்றங்கள் உள்ளன.

-கமுதி திராவிடமணி





லக்மே வதன ரேகா

மினுக்காத மென்வண்ண இயற்கைப் பொலிவுக்கு லக்மே முகப் பவுடர்—இழைக்கிறாள் ரேகா, பட்டுச் சல்லாத் துணிவழியே சலித்தெடுத்தபனி மகரந்தம்: லக்மே முகப்பவுடர்... உறைக்கும் ஸ்டுடியோ விளக்கொளியிலும் மலர்ச்சியோடு நிலைக்குது. வெளிப்புற ஷூட்டிங்கா—விரலசைவில் விருக்கென ரேகாவுக்குக் களைகட்டுவது லக்மே காம்பேக்ட். சிங்காரச் சிற்றடக்கச் சிமிழ், நங்கையர் கைப் பைக்குள் நைஸாகப் பொருந்தும். ரேகா முக ராசி வாகாய் உமக்கும் வாய்த்திட, வரவேற்பீர் லக்மே.



லக்மே அல்ட்ரா-சில்க் முகப் பவுடர் மற்றும் லக்மே காம்பேக்ட்


எழிலைப் படைப்போர்—லக்மே

Lakmé

daCunha L-53R TM



கடுகு பதில்கள்!



✠ டி. எல். ரெட்டி, வேலிடுபட்டி
கே: காபிடலிஸம், சோஷலிஸம்-இவைகளின் வித்தியாசம் என்ன?
ப: காபிடலிஸத்தில் மனிதனை மனிதன் சுரண்டுகிறான்; சோஷலிஸத்தில் இதற்கு நேர் எதிர்! இது என் கருத்து அல்ல; போலந்து நாட்டுப் பழமொழி!

✠ மிஸ் மாலினிராஜா, சென்னை-17
கே: கடுகு பதில்களை விட கடுகு கேள்விகள் (வாசகர் சிறப்பிதழ்) நன்றாக இருந்தனவே?
ப: நன்றாகஇருந்துஎன்ன லாபம்?ஒரு வாசகர் கூட பரிசு பெறுபவர் என்று என் பெயரைக் குறிப்பிடவில்லையே!

✠ 'மதனபாரதி' மதுரை-11
கே: துணுக்கு எழுத்தாளர் சங்கம் என்ன செய்கிறது?
ப: எழுத்தாளர் சங்கம் செய்து வரும் பணியைத்தான் இதுவும் செய்கிறது. அதாவது சும்மா இருக்கிறது!

✠ சக்தி. குணசேகரன், வேலூர்-4
கே: எம். ஜி. ஆருக்கும் ரேகனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
ப: ரேகன் — 'கன்' பிடித்தவர். மற்றவர் —கத்தி பிடித்தவர்.

✠ மதுரைக் கண்ணன், அம்பாலா
கே: பெண் போனால் அவள் பின்னாலே என் கண் போகிறதே?
ப: நீங்களே 'கண்'ணாக இருப்பதுதான் காரணம்!

✠ எல். ஆர். விஜயகுமார், பட்டினபாக்கம்
கே: கற்பில் சிறந்தவள் சீதையா, கண்ணகியோ?
ப: இந்த மாதிரிக் கேள்விகளே கேட்கக் கூடாது. உதாரணமாக ஒருவரைப் பார்த்துக் கற்பில் சிறந்தவர் உங்கள் தாயாரா, சகோதரியா என்று கேட்டால் அவர் என்ன பதில் கூறுவார்? இந்த மாதிரி எல்லாம் கேட்டால் பல்லை உடைத்து விடுவேன்' என்று முஷ்டியை மடக்குவார். நமது பட்டி மன்றங்களில் இப்படிப்பட்ட தலைப்புக்கள் கொடுத்து விவாதிக்கிறார்கள். 'சீதை'க் கட்சிக்காரர்கள் சீதையை உயர்த்திப் பேசுவதைவிடக் கண்ணகியைக் குறைத்துப் பேசுவதில் தீவிரமாக இருப்பார்கள். இது மாதிரியே கண்ணகிக் காரர்களும், ''சீதை ஒரு கற்புக்கரசியா, ஹூம்'' என்று ஓடிப்பார்கள். பல பட்டி மன்ற விவாதங்களில் எதிர்க் கட்சியைக் குறைத்துப் பேசுவதில்தான் தீவிரம் காணப்படுகிறது. இதற்கு நான் ஒரு யோசனை சொல்ல ஆசைப்படுகிறேன். பட்டி மன்றத்தில் மூன்று கட்சிகள் இருக்க வேண்டும். தங்கள் கட்சியே உயர்ந்தது என்று மட்டுமே பேச வேண்டும் என்று நிபந்தனையும் விதிக்கலாம். எந்தக் குழு சிறப்பாக உரையாற்றியது (வெற்றி பெற்றது என்கிற மாதிரி கூறாமல்) என்று முடிவெடுக்கலாம்.

✠ எஸ். கணேசன், சீர்பாததமங்கை
கே. உங்கள் முகவரிக்கு அடையாளச் சின்னமாக உம் மூக்கை வைத்தால் என்ன?
ப: என்ன கணேசரே, உம்முடைய ''மூக்'' கின்முன் எவரும் நிற்க முடியாது என்பதால் இப்படிக் கேட்கிறீரா?

✠ சுமாலி, மேலப்பாலையூர்
கே. உலகத் தமிழ்விழா நடைபெற இருக்கும் மதுரையில் தமிழ் இலக்கியத்தில் உரைநடைக்கும் வரலாறு நாவல்களுக்கும் வழிவகுத்த கல்கி அவர்களுக்குச் சிலை வைத்தால் என்ன?
ப: மொழிப் பற்றும் நன்றி உணர்வும் உள்ள தமிழர்கள் செய்ய வேண்டிய காரியம் இது. ''கல்கி'' அவர்களைக் கௌரவிக்க எண்ணுபவர்கள், சில சமயம் கல்கி பத்திரிகையில் வரும் தலையங்கம், கார்ட்டூன் தங்களுக்கு ஏற்புடையதாக இல்லாததால் உற்சாகம் காட்டுவதில்லை. கால் நூற்றாண்டுக்கு முன்பு அமரரான கல்கியையும் இன்றைய கல்கிப் பத்திரிகையையும் இந்த விஷயத்தில் சம்பந்தப்படுத்திப் பார்க்கக் கூடாது.

✠ சின்னக்கண்ணன், சென்னை-40
கே. சாமர்த்தியசாலி யார்?
ப: திருச்சி தில்லை நகரில் உள்ள என். பாலு தன்னை அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார். லக்னோவிலிருந்து கன்னியாகுமரி வரை அவருக்கு எத்தனை உறவினர்கள் இருக்கிறார்களோ, அவ்வளவு பேரிலும் கேள்விகளை அனுப்புகிறார். இதைக் கண்டு பிடித்துவிட்ட 'கடுகு' அவரை விடச் சாமர்த்தியசாலி!

✠ குமாரி. வி. சகுந்தலா, சென்னை-15
கே: குற்றவாளியிடம் சிறைத் தண்டனை அல்லது அபராதம் என்று நீதிபதி தீர்ப்பு கூறுகிறாரே, பணம் செலுத்தி விட்டால் குற்றங்கள் மறைந்து விடுமா?
ப: சிறைத் தண்டனை கொடுத்து விட்டால் குற்றங்கள் மறைந்து விடுமா?

✠ ஆர். கிருஷ்ணன், கொடுமுடி
கே. தவறுகளை மன்னிக்கும் குணம் உண்டா?
ப: உண்டு. அவை என்னுடைய தவறுகளாக இருப்பின்!

பரிசு பெறுபவர் :


சுமாலி,
மேலப்பாலையூர், குடவாசல் (வழி) 612601

அத்தியாயம் 24

ஜி.எச்.சில் மாப்பிள்ளை ராஜாமணியின் அறையில் அவர் சாய்ந்து உட்கார்ந்திருக்கிறார். ஜெயா மாமி தன் முகத்தில் மாப்பிள்ளை அடித்த தண்ணீரையும் லட்சியம் செய்யாமல் தன் போக்கிலேயே பேசுகிறாள். மல்லிகா மாப்பிள்ளையின் கால்மாட்டில் நிற்கிறாள். அவள் அங்கே இருப்பது அர்ஜுனனுக்குத் தெரியும். ஆனால் அவன் அவள் பக்கமே திரும்பவில்லை.

ஏன்?

மல்லிகாவின் மனம் தளர்ந்தது. அர்ஜுனன் பழிக்குப் பழி வாங்குகிறான். அவனுடைய மென்மையான நெஞ்சத்தைத் தான் அவள் இதுவரை அறிந்திருந்தாள். அவனுடைய வைராக்கியத்தையும் இப்போது அவள் உணர்ந்து தான் செய்தது சரியா என்று ஒரு கணம்—ஒரே கணம்—அவள் நினைத்துப் பார்த்தாள். ஆரம்பத்திலிருந்து அவனுக்கு உதவியாக இருந்து, முதன் முதலாக அவனுடைய நெஞ்சில் பகைமையான எண்ணங்களை ஊட்டிய அர்ஜுனனை அவட்சியப்படுத்திவிட்டுப் புறப்பட்டு வந்ததில் என்ன நியாயம் இருக்கிறது? அவனுடைய நன்மையைக் கருதி அவள் ஒரு காரியம் செய்தது அசட்டுத்தனமாகப் பட்டது.



என்ன ஆத்திரமும் கோபமும் அர்ஜுனனிடம் இருந்தால், அட்வகேட் குஞ்சிதபாதத்தின் பெண்ணைப் பார்க்கப் போவதாக அவள் இருக்கும்போதே அறை கூவுவான்?

இப்போது அர்ஜுனன் எங்கே? யோசித்தாள். ஒன்றும் புலப்படவில்லை.

அறையில் நிலவிய நிசப்தத்தைக் கிழிக்க அவளுக்குத் தைரியம் வரவில்லை. மாப்பிள்ளை ராஜாமணி ருத்ரமூர்த்தியாகக் காணப்படுகிறார். ஜெயா மாமி அடிபட்ட புலிபோல் நிற்கிறாள். அர்ஜுனன் வெளியேறிவிட்டான். இப்போது என்ன செய்ய?

நல்ல வேளையாக ஒரு நர்ஸ் உள்ளே பிரவேசித்தாள். உடம்பில் ஜுரம் இருக்கிறதோ இல்லையோ நாளுக்கு நான்கு தடவை தர்மா மீட்டரைத் தூக்கி வர வேண்டியது அவளுடைய கடமை.

இரண்டு நிமிடங்கள் மௌனம் தொடர்ந்தது. நர்ஸ் தன் பணியை முடித்துக் கொண்டு புறப்பட யத்தனித்தபோது, மாப்பிள்ளையின் குரல் கேட்டது.

''ஸிஸ்டர், டாக்டரைத் தயவு செய்து வரச் சொல்லுங்கள். இன்னிக்கு நான் டிஸ்சார்ஜ் வாங்கிக் கொள்ளப் போகிறேன்.''

''யெஸ் ஸார்'' என்று சொல்லிவிட்டு அவள் வெளியேறினாள். அவள் சென்றதும், அவர் ''மல்லிகா!'' என்று அழைத்தார் அவருடைய இயல்பான, கம்பீரக் குரலில்.



பி.வி.ஆர்.

மல்லிகா இரண்டு அடி நடந்து முன்னேறினாள்.

''என் துணி மணிகளையெல்லாம் எடுத்துப் பெட்டியில் வை..:''

''சரி...''

''இப்போதே என் கூட என் வீட்டுக்கு வருகிறாய்.''

''சரி சார்''

''வேம்புவுக்குப் போன் பண்ணித் தகவலைக் கொடு.''

''சரி சார்.''

ஜெயா, நர்ஸ் உள்ளே பிரவேசித்தபோது வெளியேறி வராந்தாவில் நின்று கொண்டிருந்தாள். இப்போது திரும்பி வந்தாள். அவளைப் பார்த்ததும், ''அவன் எங்கே?'' என்றார்.

''சாமாவுடன் பேசிக் கொண்டு வராந்தாக் கோடியில் நிற்கிறான்'' என்றாள் ஜெயா.

''பெண் பார்க்க நீ மட்டும் போ...''

''இது என்ன உளறல்?'' என்றாள் ஜெயா.

''மாப்பிள்ளையின் உளறல்.''

''அர்ஜுனன்தான் பிள்ளை. அவன் இல்லாமல்...''

''நிறுத்து... உனக்கு இன்னும் உலகம் புரியவில்லை. இனிமேல் புரியும் என்கிற

நம்பிக்கையும் எனக்கு இல்லே. அர்ஜுன் அட்வகேட்டின் பெண்ணைப் பிடிச்சிருக்குன்னு சொல்லுவான்னு நீ எதிர் பார்க்கிறியா?''

''குஞ்சிதபாதத்தின் பெண்ணுக்கு என்ன குறைச்சல்?''

''அது அவனுக்குத்தான் தெரியும்.. இரண்டு நாள் முன்னேயே நான் அவனிடம் மல்லிகாவைப் பற்றிக் கேட்டாச்சு..அவனும் சரின்னுட்டான்.. அவனுடைய அப்பன் இப்படித் திமிர்னு போயிடுவான்னு நானும் அவனும் அப்ப எதிர்பார்க்கவில்லே. அதனாலே....''



''அப்பா, இந்தப் பேனாவுலே எழுத எனக்கு பயமா இருக்கு.''
''ஏன்டா?''
''இது பட்டை அடிக்குது!''
-தென்னூர் ராதா

''அதனாலே?''

''இன்னும் பதினைஞ்சு நாள் பொறுத்து நம்ம வீட்டிலேயே நிச்சயதார்த்தத்தை வைச்சுப்போம். இந்த அசட்டுப்பொண்ணு ஏதோ தியாகம் செய்யறதா நினைச்சுண்டு அவன் கிட்டச் சொல்லிக்காம ஓடி வந்திருக்கா. இது அவனைப் பாதிச்சிருக்கு. கூப்பிடு அவனை....''

மாப்பிள்ளையின் பேச்சைக் கேட்டு மல்லிகா நெகிழ்ந்து போனாள். அப்பாவும் பிள்ளையும் ஏற்கனவே தங்களுக்குள் பேசிக்கொண்டாகி விட்டதா? இதை ஏன் அர்ஜுனன் அவளிடம் சொல்லவில்லை?

''எனக்கு இஷ்டமில்லே!'' என்றாள் ஜெயா.

''ஏன்?''

''நம்ப அந்தஸ்து என்ன? குடும்ப கௌரவம் என்ன?...''

''நீ பெரிய குடும்பத்திலிருந்து தங்கமும் வெள்ளியுமாகக் கூடையில் போட்டுக் கொண்டுதான் என்னோடு மணையில் உட்கார்ந்தே... ஆனா என்ன புண்ணியம்? இன்னி வரையில் ஒரு வாய்க் காப்பி.. ஏன் ஒரு வாய் தண்ணீரை நீ அன்பா ஆதரவா எனக்குத் தந்திருக்கியோ? எனக்கு லபிக்காதது என் பிள்ளை அர்ஜுனனுக்காவது லபிக்கட்டுமே... ஓர் ஏழைப் பெண்கொண்டு வருகிற சீர் என்ன தெரியுமா? அன்பு. மனிதாபிமானம். இதெல்லாம் வெள்ளிக்கும் தங்கத்துக்கும் இணையாகாது. எனக்கு வேண்டியது இதோ இந்த மல்லிகாவைப் போன்ற ஒரு பெண்...''

''நான் சம்மதிக்க மாட்டேன்.''

''சந்தோஷம். நீ இல்லாமலே இந்தக் கல்யாணத்தை நடத்தறேன்.''

''உங்க பிடிவாதத்துக்கு என் பிள்ளையைப் பலி வாங்காதீங்க.''

''இப்ப அர்ஜுனனைக் கூப்பிடு.''

''நான் இங்கேயேதான் நின்னுண்டிருக்கேன் அப்பா!''

''என்னடா வராந்தாவிலே நின்னு ஒட்டுக் கேட்கிறியா?'' என்றார் மாப்பிள்ளை. ''நீ என்ன சொல்றே?''

''நான் என்னிக்கு உங்களுக்கு எதிரா அம்மா பக்கம் நின்னேன்?''

''அப்ப எதுக்குப் பெண் பார்க்கப் போறப்போ, பாண்ட் போட்டுக்கறதா, வேட்டி கட்டிக்கிறதான்னு கேட்டே?''

முதன் முறையாக அர்ஜுனன் மல்லிகா இருக்கும் திசைக்குத் திரும்பினான். மல்லிகா அவனுடைய முகத்தைப் பார்த்தாள். அவனுடைய கண்களின் சிரிப்பில் தன்னை இழந்தாள்.

''இதோ இந்த மல்லிகாவுக்குச் சுரணை வரட்டும் என்பதற்காக...''

''அவ அப்பாவின் சுபசுவீகாரம் முடிந்ததும் ஒரு நாள் பார்ப்போம்...''

''சரி.''

''சாமாவிடம் எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்படை..''

''சரி அப்பா... ஆனா.. ஆனா...''

''என்னடா ஆனா....''

''நானும் நீங்களும் பெண்ணைத் தேர்ந்தெடுத்து விட்டோம். ஆனால் அந்தப் பெண் பிள்ளையைத் தேர்ந்தெடுக்க வில்லையே?''

''அந்தப் பெண்ணை நானும் இன்னும் அங்கீகரிக்கவில்லே!'' என்றாள் ஜெயா.

மாப்பிள்ளை கட்டிலை விட்டு இறங்கி நின்றார்.

''இத்தனை நாள் நீயும் நானும் மனைவி—புருஷனா வேஷம் போட்டுண்டு வந்தோம். அதனாலே உனக்கு ஒரு மதிப்பு இருக்கிறது. இந்தக் கல்யாணத்துக்கு நீ இசையவில்லைன்னா உனக்கு அந்த மதிப்பு இல்லாமலே போயிடும்... ஊரும் உலகமும் அறிய நான்....''

''அப்பா!'' என்று இடைமறித்தான் அர்ஜுன்.

ஜெயா ஒரு நிமிடம் யோசித்தாள். அவள் மாப்பிள்ளையின் மனைவி என்ற ஒரு காரணத்தில்தான் மதிப்புடன் இருக்கிறாள். மாப்பிள்ளையின் வைராக்கியத்தை அவள் அறிவாள். அவர் தம் மூத்த பிள்ளையை நான்கு ஆண்டுகளாக முகாலோபனம் கூடச் செய்ததில்லை. இதே வைராக்கியத்தை அவளிடமும் காட்டினால்! அப்புறம் அவள் அவருடைய மாஜி மனைவிதான்! அந்த நிலை ஏற்பட்டால் ஊரில் அவள் எப்படித் தலை நீட்டுவாள்? லேடீஸ் கிளப்பில் எப்படிப் பிரவேசிப்பாள்? என்னதான் பிறந்த வீட்டுத் தனம் இருந்தாலும் மதிப்பைக் கொடுக்கும் மனைவி பதவி இல்லாமல் போய்விடுமே!

திடீரென்று இறங்கி வந்து 'சம்மதம்' என்று சொல்ல அவளுடைய கௌரவம் இடம் கொடுக்கவில்லை.

''இனிமேல் நான் இங்கே நிற்பதில் அர்த்தமில்லே.... நான் வரேன்...''

''ஜாக்கிரதையா கார் ஓட்டிண்டு போ! அம்மா!''

''நீ என்னை வீட்லே விடு. டிரைவர் இருப்பிடத்துக்குப் போயிட்டான்.''

''நீ காசிக்குப் போ!'' என்றார் மாப்பிள்ளை.

''அப்பா, நான் அம்மாவை வீட்டில் டிராப் பண்ணிட்டு வரேன்... மல்லிகா நீயும் வா. உன் அப்பாவின் அஸ்தியை நீ சமுத்திரத்தில் கரைக்க வேண்டாம்?''

மல்லிகா தயங்கினுள். நடேசன் அவள் கண் முன் நின்ருர். நேற்று கலகலப்பாக இருந்தவர், மிஸஸ் பாரேதி ராமனுத னுடன் ஜோஸியத் தொழிலைப் பற்றி நேரம் தெரியாது பேசியவர், இன்று ஒரு கையில் அடங்கும் அஸ்தியாக மாறிவிட்டார்.

இது என்ன வாழ்க்கை?

''நீ வரலே?''

அர்ஜுனன் குரல் கணீரென்று எழுந்தது.

இருக்கிறவரைக் கொண்டாடுவோம். இல்லாததைப் பற்றி ஏங்குவதை விட, உள்ளதை வைத்து மகிழ்வதுதான் விவேகம்! கடவுளாகப் பார்த்து ஒரு நல்ல வாழ்க்கையை அவளுக்கு அமைத்துக் கொடுக்கும் போது அதை உதறி எறிய அவள் யார்!

''போ, மல்லிகா!'' என்ருர் மாப்பிள்ளை.

அவள் தன் பெட்டியை எடுத்துக்கொண்டாள்.

''இது இங்கேயே இருக்கட்டும். நான் வரும் போது எடுத்துக் கொண்டு வருகிறேன்.''

''டிஸ்சார்ஜ் சர்டிபிகேட் ரெடியாயின் டிருக்கு!'' என்ருன் அர்ஜுனன்.

மாப்பிள்ளை ராஜாமணிக்குக் கோபம் வந்தது. ''நீ ஒரு உளறுவாயன். நான் இன்னிக்கு டிஸ்சார்ஜ் வாங்கிக் கொள்ளப் போகிறேன்னு ஏற்கனவே உங்கிட்டச் சொன்னது இந்த ரெண்டு பேருக்கும் தெரியணுமா?.. நர்ஸ் கிட்டே சொன்னது உன் அம்மாவை ஒரு கலக்குக் கலக்க...'' என்ருர் ராஜாமணி.

டெலிபோனில் தொந்தயுத்தம் நடந்தது.

'நீங்க' என்ற மரியாதையை சுந்தரி கைவிட்டு விட்டாள். இனி நிச்சயமாக அவளுடைய பெண் பாமாவுக்கும் ஜெயாவின் பிள்ளை அர்ஜுனனுக்கும் கல்யாணம் ஆகப் போவதில்லை. இனிமேல் என்ன மரியாதை வேண்டியிருக்கிறது!

''நீ இவ்வளவு மட்டமா நடந்துக்கு வேன்னு நான் நினைக்கலே ஜெயா!'' என்ருள் சுந்தரி.

''இப்ப என்ன செய்யச் சொல்றே? உன் பெண்ணை வாங்கிக்கணும்னுதான் நான் கோபிச்செட்டிபாளையத்திலிருந்துகாரில் ஓடோடி வந்தேன். பிராப்தம் இல்லே...''

''பெரிய பிராப்தம்! வாய் கிழியப் பேசுனியே... என் பெண் அன்னிக்கே சொன்னுள், உன் பிள்ளைக்குத் திமிர் தான் உடம்பு பூராக் கொட்டறதுன்னு. அவ என்னிக்குமே தப்பாக் கணக்குப் போட மாட்டா....''

''எஸ். எஸ். எல். ஸி.யில் நாத்துக்கு நூறே?''

''உன் இடக்கையும் குசும்பையும் கோபிச் செட்டி பாளையத்திலேயே வைச்சுக்கோ...''

ஜெயா டெலிபோனை விட்டு நகர்ந்த போதுதான் இத்தனை நேரமும் அவள் அருகே வேம்பு நின்றிருந்தாள் என்பதை உணர்ந்தாள்.

''என்ன வேணும்?''

''சாப்பிட வா, ஜெயா.''

''சமைச்சு வச்சிருக்கியா?''

''பின்னே, வெறும் மேஜைக்கா கூப்பிடறேன்... உனக்குப் பிடிச்ச வெண்டைக்காய் மோர்க் குழம்பு பண்ணியிருக்கேன்.''



நர்ஸ்: ''எட்டாம் நம்பர் பேஷண்டை எப்படியாவது பிழைக்க வச்சிடுங்க டாக்டர்!''

டாக்டர்: ''அவர் மீது மட்டும் ஏன் இந்த விசேஷப் பரிவு...?''

நர்ஸ்: ''ஒரு புரோநோட்டுக்கூட எழுதி வாங்காம என் அப்பா அவருக்கு ஐயாயிரம் கடன் கொடுத்திருக்கார்!''

- உ. ராஜாஜி

''இந்தப் பொண்ணைப் பத்தி நீ என்ன நினைக்கிறே வேம்பு?''

''இருபத்திரண்டு காரட்டில் கொஞ்சம் செப்பு இருக்கும். இருபத்தி நாலுன்னு சுத்தத் தங்கம்.''

''ஏன் இப்படி எல்லாரும் அவ பக்கம் சாயறேள்? மாப்பிள்ளை நன்னு உருகுருர். அர்ஜுனன் சொப்பனமாக் கண்டு உருகுருன்... எல்லாரையும் தூக்கி எறியற நீ கூட....''

''நானும் மொதல்லே மல்லிகாவைப் பத்தித் தப்பாத்தான் எடை போட்டேன். ஆனு தப்பு உணர்ந்தப்புறம் எனக்கு அவள் மேலே ஒரு பக்தியே உண்டாயிட்டது.''

''என் மனசு என்னமோ இன்னும்...''

''முதல்லே சாப்பிடு. எனக்குப் பசிக்கிறது...''

''அர்ஜுன்?''

''அவனும் அவளும் உனக்காகக் காத்திருக்கிருர்கள்!''

''எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும்போல இருக்கு....''

''அதுக்கும் மருந்து இருக்கு ஜெயா... இப்ப சாப்பிட வா!''

ஜெயா டைனிங் ஹாலுக்கு வந்தாள்.

அவளைக் கண்டதும், உட்கார்ந்திருந்த மல்லிகா எழுந்து நின்ருள்.

இது நடிப்பா? இல்லை. நடிப்பு இல்லை.

''நீ ஏன் எழுந்திருக்கிறே. உட்கார்...''

''ஏண்டா அர்ஜுன் அஸ்தியை நன்னு கரைச்சீங்களா?''

''நீ ரோட்லே நின்னுண்டு ஓடுகிற கார்களைப் பார்த்துண்டிருந்தே. நாங்க கரைக்கிறதைப் பார்க்கலே!'' என்ருன் அர்ஜுன்.

''நான் நாளைக்கு சமுத்திர ஸ்நானம் செய்யப் போறேண்டா!'' என்ருள் ஜெயா.

''இன்னிக்கே அலைகள் கிட்டே சொல்லி வைக்கிறேன். கொஞ்சம் அடங்கி அடிக்கட்டும்'' என்ருன் அர்ஜுன்.

''உங்களுக்கெல்லாம் என்னைக் கண்டால் இளப்பமாப் போயிட்டுதுடா!''

''அதுக்குக் காரணம் அவர்கள் இல்லே... நீதான் ஜெயா!'' என்ருள் வேம்பு, கறியைப் பரிமாறிக் கொண்டே. பிறகு, ''நீ சமுத்திரத்திலே மூழ்கி எழறப்போ சில குணங்களைக் கரைத்துவிடு...'' என்ருள்.

ஜெயா பதில் பேசவில்லை.

என்னென்ன குணங்கள்?

அவள் யோசிக்கலாளுள்.

கறி ருசிக்கவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)



ஸ்ரீ வர மங்கா சமேத
ஸ்ரீ தெய்வநாயகப் பெருமாள்



28வது பட்டம்
ஸ்ரீ சடகோப ராமானுஜ ஜீயர் ஸ்வாமி

ஒரு கோட்டை எண்ணெய்க் காப்பு உற்சவம்

நம்மாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட ஸ்வயம்பு க்ஷேத்திரங்களில் ஒன்றான **ஸ்ரீ வானமாமலை** (நான்குனேரி)யில் பூலோக அதிபதியாய் எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீ வானமாமலைப் பெருமாளுக்கு ஸ்ரீ வானமாமலை ராமானுஜ ஜீயர்ஸ்வாமி** அனுக்ரஹத்துடன் (சுமார் 15,000 செலவில்) நாளது **தை மாதம் 22ம் தேதி (4-2-81)** தை அமாவாசை திருவோண நக்ஷத்திரத்தில் ஒரு கோட்டை எண்ணெய்க் காப்பு உற்சவமும் இரவில் சந்தனக்காப்பும், உற்சவமூர்த்தி ஸ்ரீ தெய்வநாயகன் ஸ்ரீ வரமங்கைத் தாயார், ஆண்டாளுக்கு திருவீதி உலாவும் செய்விக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது ஆஸ்திக மஹா ஜனங்கள் அனைவரும் மேற்படி உற்சவத்தில் தங்களை ஈடுபடுத்தும் வண்ணம் எழுந்தருளியிருந்து உற்சவத்தில் கலந்து கொண்டு எம்பெருமானின் அனுக்ரஹத்திற்கு பாத்திரராகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

ஸ்ரீ வரமங்கை நாச்சியார் பக்தசபை (பதிவு பெற்றது)

C/o ஸ்ரீ வானமாமலை மடம்,
3, கிழக்கு குளக்கரை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005

மானுடத்தில் தெய்வீகம் மகிழ்ந்து வாழும்!



செஞ்சடையும் திருமாலும் ஒன்றே என்ற
　　சீரியதோர் கொள்கையினை உணர்த்தி,
　　　　　　　　　　　　　　மாந்தர்
நெஞ்சகத்தில் திருவடியைப் பதித்து, வாழ்வின்
　　நிலையுயர நல்வழியை அவர்க்குக் காட்டித்
தஞ்சமதை வழங்குகிற சுதனை, அந்தச்
　　சபரிமலை வாழ்கின்ற தெய்வம் தன்னை
செஞ்சொல்லால் மாலையிட்டு வணங்கு வோர்க்குச்
　　செல்வங்கள் கோடியெனச் செழிக்கும்;
　　　　　　　　　　　　　　திண்ணம்!

மயக்கமிலா உணர்வோடு மலையும் காடும்
　　மாநதியும் பெருங்கடலும் பசுமை மிஞ்சும்
வயல்வெளியும் கடவுள்வாழ் இடமே என்று
　　மதித்துயர்ந்த தடத்தினிலே வழி நடந்து
இயற்கையிலே இறையவனைக் கண்டு போற்றி
　　இதயத்தில் விளக்கேற்றி, இருகை கூப்பி
செயற்கரிய சாதனைகள் செய்து வாழ்ந்த
　　சிறப்பதனைப் பெற்றவர்கள் நமது முன்னோர்!

எழில்கூடி விளையாடி இயற்கை கொஞ்சி
　　எப்பொருளும் இறைமுதலை உணர்த்தும்
　　　　　　　　　　　　　　இன்பப்
பொழில்சூழும் சபரிமலை தனிலே அன்பு
　　பொங்கிவர ஐயப்ப சாமி வந்து
கழல்காட்டி அடியவருக் கருள்பா லிக்கும்
　　கருணையினை உணர்ந்தறிந்த மனிதர் எல்லாம்
உழல்கின்ற அயர்விதனில் உயர்வு காண
　　ஒருதுணையாய் அவனிருதாள் பற்றுவார்கள்!

சரணமெனப் பாட்டிசைத்து மக்கள் வெள்ளம்
　　சபரிமலை செல்லுகிற காலம் தன்னில்
கரணங்கள் மூன்றிலுமே புனிதம் ஓங்கும்;
　　காரியங்கள் அனைத்திலுமே மேன்மை ஓங்கும்;
தருணமெலாம் இறைநினைவே நெஞ்சில் தங்கும்;
　　சந்ததமும் ஒளிமயமாம் பாதை தோன்றும்;
மரணமிலாப் பெருவாழ்வு மனத்துள் பூக்கும்;
　　மானுடத்தில் தெய்வீகம் மகிழ்ந்து வாழும்!

ஓம் குருவே நமஹவென நினைந்தே கூறி
　　ஓம்பராய கோப்த்ரேநம என்றே ஓதிப்
பூம்பொழில்சேர் சபரியிலே விளங்கும் ஐயன்
　　பூவடியை மனம்நிறையத் தொழுது நின்றால்
மேம்படுநன் னிலையெனிதில் கிடைக்கப் பெற்று
　　மேன்மை யெலாம் நம்வசமே ஆகிடாலும்
தேம்பியழும் நிலைமாறி இன்பம் கூடித்
　　திருவளரும் உயர்வாழ்வு சேரும்தானே!

சௌந்தரா கைலாசம்

வெந்து தணிந்தது காடுகள்



இந்திரா பார்த்தசாரதி

10

"நான் என்ன செய்து விட்டேன்? இது தான் எனக்குப் புரியலே..." என்றாள் விம்மி.

"எனக்கிருக்கிற பணத்துக்கும், செல்வாக்குக்கும்.... யு நோ.... தேர் வேர் மெனி ஆப்பர் சூனிட்டீஸ்... ஆனா நான் உனக்குத் துரோகம் செஞ்சது இல்லே.... செய்யலேன்னு உனக்கும் தெரியும். பட்.."

"உங்க கிட்டே இருக்கிற பணத்துக்காகவும் செல்வாக்குக்காகவும் உலகத்திலே இருக்கிற பொம்மனாட்டியெல்லாம் போட்டி போட்டுண்டு உங்ககிட்ட வருவாங்கன்னு நீங்க நினைச்சிங்களா? வாட் டு யு திங்க் ஆஃப் யுவர் செல்ஃப்?" விம்மி எழுந்து உட்கார்ந்தாள்.

"பொம்மனாட்டிகளுக்கு வேறே என்ன வேணும்? பணம், செல்வாக்கு, இல்லாட்டா ஆள் பர்ஸனாலிட்டியா இருக்கணும்... இது மூணும் எங்கிட்டே இருக்குன்னு நிச்சயமா எனக்குத் தெரியும்..."

"இதுதான் பெண்களுக்கு நீங்க தரும் மதிப்பா?"

"வாட் எல்ஸ்? படிச்ச, அழகா இருக்கிற பெண்கள் எத்தனை பேர் நாங்க கொடுக்கிற சம்பளத்துக்காக எங்க கிட்ட வேலையா இருக்காங்க தெரியுமா? டு யு நோ தேர் ஜாப்? எங்க கம்பெனிக்கு யார் யார் முக்கிய மானவங்கன்னு நாங்க நினைக்கிறோமோ, அவங்களை 'என்டர்டெய்ன்' செய்யறதுதான் அவங்க வேலை.... பெண்கள் இப்படிச் சுலபமா கிடைக்கிற போது, பெண்கள் கிட்டே எனக்கு மதிப்பு இருக்கும்னு எதிர்பார்க்கறியா?"

விம்மி கட்டிலிலிருந்து இறங்கி அவனெதிரே வந்து நின்று கேட்டாள்: "உங்க கம்பெனி லாபம் அடையறத்துக்காகப் பெண்களை 'எக்ஸ்ப்ளாய்ட்' பண்ணலாம், ஆனா அவங்ககிட்டே உங்களுக்கு மதிப்பு இல்லே... இது என்ன நியாயம்? கம்பெனி லாபத்துக்காக என்ன வேணும்னாலும் செய்யத் தயாரா இருக்கிறீங்களே, உங்க கிட்டேயே உங்களுக்கு மதிப்பு இருக்கா?"

"நீ இருக்கிற இவ்வளவு பெரிய வீடு, அனுபவிக்கிற சுகம், வாங்கற கான்வாஸ், ஆயில்ஸ், ராத்திரி வேளையிலே கண்டவன் வீட்டுக்குப் போற தெம்பு... எல்லாம் இந்தக் கம்பெனி லாபத்திலேதான்... டு யு அன்டெர்ஸ்டாண்ட்?"

விம்மி அவனைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டுப் பிறகு கட்டிலில் போய் உட்கார்ந்தாள்.

"நான் எந்த விதத்திலே உனக்குக் குறை வச்சிருக்கேன்? நான் தொழில் முறையிலே சந்திக்கிற பெண்கள்மாதிரி என் பெண்டாட்டியும் இருக்கக் கூடாதுங்கறதுக்காகத்தான் எவ்வளவோ பெரிய குடும்பத்திலிருந்து வந்த 'ஆஃபர்'லாம் வேண்டாம்னுட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிண்டேன்... இத்தனை வருஷமா ஏற்படாத பிரச்னை திடீரென்று ஏன் ஏற்படணும்? எவ்வளவு பெருமையா உன்னைப் பத்தி நான் எல்லார் கிட்டேயும் பேசியிருப்பேன்... என்ன ஆயிடுத்து உனக்கு? எத்தனை நாளா இந்த 'குட்-ஃபார்-நதிங் ஃபெல்லோவை உனக்குத் தெரியும்? நீ இப்போ இப்படிப் பேசறதுக்கெல்லாம் அவனு காரணம்?"

அவன் திடீரென்று ஆவேசம் வந்தவன் போல் கத்திக் கொண்டிருந்தான். இப்பொழுது அவனுடன் பேசிப் பயனில்லை என்று விம்மி மௌனமாக, ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.



அவன் நாற்காலியில் உட்கார்ந்தான். கோபத்தில் அவன் உடம்பு ஆடிக்கொண்டிருந்தது.

''டெல் மீ, விம்மி, அவளு காரணம்?''

விம்மி பதில் கூறவில்லை.

''ஹூக்... பெண்கள் சுதந்திரங்கிறதெல்லாம் 'ஹம்பக்'. சிகரெட் பிடிக்கிறதும், 'விஸ்கி' குடிக்கிறதும், 'ஃப்ரீ செக்ஸ்'னு கண்டவங்களோட சுத்தறதும், இதுவா சுதந்திரம்? சுதந்திரமா இருக்கோம்னு சொல்லிக்கிற பெண்கள் எல்லாரும் இதைத் தவிர வேறொண்ணும் பண்றதில்லே, தெரியுமா உனக்கு?... இப்போ ராதிகாவுக்கு என்ன ஆச்சு? ராதிகா மாதிரிதான் இருக்கணும்னு நீ நினைக்கறியா? கம் ஆன்.... டெல் மீ....''

விம்மி அவன் பக்கம் திரும்பினாள்.

''ராதிகாவோட 'யூ ஹாட் டெரிஃபிக் டைம்'னு சொன்னீங்களே.... அவளைப் பத்தி இப்படி ஒரு மோசமான அபிப்ராயம் வச்சிண்டு, ஆறு அவளோட....''

''எஸ்... நீ செஞ்ச துரோகம்தான், நேத்துராத்திரி எனக்கேற்பட்ட பலஹீனத்துக்குக் காரணம். 'ஸ்ட்ராங் காரெக்டர்'னு எனக்கு என்னைப் பத்தியே இருந்த பெருமை யெல்லாம் ஒரு நிமிஷத்திலே இருந்த இடம் தெரியாமப் போயிடுத்து.... அதுக்கு நீதான் காரணம்... பர்ஹாப்ஸ்... ராதிகா இந்தச் சந்தர்ப்பத்துக்குத்தான் எதிர்பார்த்திருந்தா போலிருக்கு... தென இட்ஸ் ஹர் விக்டரி... மை காட்.... வாட் ஹாவ் ஐ டன்....''

''நான் உங்களுக்கு என்ன துரோகம் செஞ்சேன்?''



''நேத்து ராத்திரி அவன் வீட்டுக்கு எதுக்காகப் போனே?''

''அவருடைய 'பெயின்டிங்ஸை' பார்க்கப் போனேன். அங்கே அவரோட சிநேகிதரெல்லாரும் வந்திருந்தாங்க. பேசிண்டிருந்தோம்.... 'டைம்' ஆயிடுத்து... நேத்திக்கு முதல் தடவையா 'விஸ்கி' குடிச்சேன்... ஆனா அந்த இடத்திலே இது எனக்குத் தப்பா படலே...''

''வாட்...?'' என்று கோபத்துடன் எழுந்தான் அருண்.

''இது உங்களுக்கு இவ்வளவு அதிர்ச்சியா இருந்தா, நீங்களும் எத்தனையோ விருந்துகள்லே கலந்துக்கிறீங்களே, அது எனக்கு எவ்வளவு அதிர்ச்சியா இருக்கணும்? ஆனா எனக்கு அப்படியில்லே... ஏன்னா நீங்க பெரிய தப்புக் காரியம் பண்ணிட்டதா நான் நினைச்சதே இல்லே....''

''உலகத்திலே எதுதான் தப்புக் காரியம்? அந்த 'பாஸ்டர்ட்' வீட்டுக்குப் போனது தப்புக் காரியம் இல்லே... அங்கே 'விஸ்கி' குடிச்சது தப்புக் காரியமில்லே... அப்புறம் அங்கே என்ன நடந்ததோ, யாருக்குத் தெரியும்?''

''கெட்-அவுட்'' என்று தன்னை யறியாமல் உரக்கக் கூச்சலிட்டாள் விம்மி.

''நான் சொல்ல வேண்டியதை நீ சொல்லிட்டே... இனிமே நாம ரெண்டு பேரும் புருஷன் பொண்டாட்டியா நடிச்சிண்டிருக்கிறதிலே அர்த்தமில்லே...'' என்று சொல்லிக் கொண்டே அவன் அறையை விட்டு வெளியேறினான்.

அருண் அலுவலகம் சென்றதும் இயந்திரமானான். பம்பாயில் அவன் முடித்துவிட்டு வந்திருந்த 'டீல்' சம்பந்தமான தொடர் நடவடிக்கைகள்.

ராதிகா அவனுக்கு முன்பே வந்து விட்டாள். அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

அவளும் விம்மியைப் பற்றி விசாரிக்கவேயில்லை. அவள் கேட்கக் கூடுமென்று அவன் எதிர்பார்த்தான். அதற்குத் தயாராகப் பதில் சொல்லவும் அவன் யோசித்து வைத்திருந்தான். ''முதலில் ஆபீஸ் வேலை... அப்புறந்தான் வீட்டு விவகாரங்கள்...''

சுமார் ஐந்து மணிக்கு டெலிஃபோன் ஒலித்தது. மிகவும் முக்கியப்பட்டவர்களைத் தவிர யார் ஃபோன் செய்தாலும் தன்னைக் கூப்பிட வேண்டாம் என்று அவன் அந்தரங்கச் செயலாளரிடம் அவன் கூறியிருந்தான்.

ஒரு முக்கிய பைலில் கையெழுத்திட்டுக் கொண்டிருந்த அவன் ராதிகாவிடம் சொன்னான்: ''யாரென்று பார்.''

ராதிகா போனை எடுத்தாள்.

ராதிகாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. விம்மி. அவள் சாதாரணமாக ஆபீசுக்கு போன் செய்வதில்லை என்பது தெரிந்த விஷயம்.

''நான்தான் ராதிகா பேசறேன். அருண் கிட்டப் பேசணுமா?''

அவள் சொன்ன தகவல் ராதிகாவைத் திடுக்கிட வைத்தது. 'அவசியமில்லே... அவர் கிட்டச் சொல்லுங்கோ, அவர் என்னை வீட்டை விட்டுப் போகச் சொன்னார், நான் புறப்பட்டாச்சுன்னு... தாங்க் யூ!'

விம்மி போனைக் கீழே வைத்து விட்டாள். ஆனால் ராதிகா கையில் போனை வைத்துக் கொண்டு, அருணையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் ஃபைலில் ஆழ்ந்திருந்தான்.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

ராதிகா ஃபோனைக் கீழே வைத்தாள்.

''யாரு?''

''விம்மி.''

அவன் சில விநாடிகள் பேசாமலிருந்து விட்டுப் பிறகு கேட்டான்: ''என்னவாம்?''

''ஷி ஹாஸ் லெஃப்ட்...''

அவன் தாடை இறுகியது. சிறிது நேரம் மௌனமாக பைல்களையே பார்த்துக்கொண்டிருந்தான்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு டெஸ்பாட்சுக்காக வைக்கப்பட்டிருந்த கடிதங்களில் கையெழுத்துப் போடத் தொடங்கினான்.

''என்ன நடந்தது?'' என்று கேட்டாள் ராதிகா.

''ஆபீஸ்லே இதைப் பத்திப் பேசணுமா?''

''ஐ ஆம் ஸாரி.''

''இன்னி சாயங்காலம் நீ 'ஃப்ரீயா' இருந்தா, உன்னோட உன் வீட்டுக்கு வரேன்.'

''இன்னி சாயந்திரமா...?'' என்று கொஞ்சம் தயங்கினாள் ராதிகா.

''யு ஆர் நாட் ஃப்ரீ?''

''பரவாயில்லே... வாங்க... ராகுல் இன்னி சாயந்திரம் வந்தாலும் வருவான். நிச்சயமில்லே.''

''எங்கே போயிருக்கான் ராகுல்?''

''இப்போ அவன் டெல்லியிலே படிக்கலே. டேராடூன்லே படிக்கிறான். ஹாஸ்டல்லே இருக்கான்.''

''ஐ ஸீ...''

அரை மணி நேரத்துக்குப் பிறகு அலுவலக வேலைகள் முடிந்த பிறகு இருவரும் புறப்பட்டார்கள்.

''உங்கள் காரை வீட்டுக்கு அனுப்பிவிடுங்களேன்... என் காரிலேயே போய்விடலாம்'' என்றாள் ராதிகா.

அருண் யோசித்தான். விம்மி வீட்டிலில்லை என்றால் கார்ச் சாவியை டிரைவர் பூர்ணிமாவிடம் கொடுக்கப் போவான். இருவரும் இதைப் பற்றி விவாதிக்கக் கூடும்.

''வேணும்... என் காரிலேயே வருகிறேன்.'' என்றான் அருண்.

''எதுக்கு என்னையே கொட்டக் கொட்டப் பார்க்கிறீங்க?''

''நிஜமான தேன்குட்டி ஒன்று உன் புடவையில் நுழைந்ததை இப்பதான் பார்த்தேன்...''



ராதிகா வீட்டை அடைந்ததும் அவள் சொன்னாள்: ''என் ரூமுக்கு வாங்க பேச லாம்.''

அருண் அவள் அறையில் போய் உட் கார்ந்தான்.

சிறிது நேரம் கழித்து ராதிகா இருவருக்கும் காப்பி எடுத்துக் கொண்டு வந்தாள்.

''வேலைக்காரன் என்ன ஆனான்?'' என்று கேட்டான் அருண்.

''இல்லே. இப்போ... 'பார்ட் டைம்' வேலைக்காரிதான். நான் ஒருத்திதானே இருக் கேன். வேலைக்காரன் எதுக்கு?''

ராதிகா கட்டிலில் உட்கார்ந்தாள்.

சிறிது நேரம் அமைதிக்குப் பிறகு அருண் சொன்னான்: ''விம்மி ராத்திரி ஒரு மணிக் குத்தான் வீட்டுக்கு வந்திருக்கா... எஸ்... யு வேர் ரைட்... எனக்குத் தெரிஞ்சதா நினைச்சிண்டிருந்த விம்மி வேறே, இந்த விம்மி வேறே. மத்தியானம் பெரிய சண்டை. என்னை 'கெட் அவுட்'னு சொல்லக் கூடிய அளவு அவ்வளவு திமிரு அவளுக்கு வந் திருக்கு. அப்பொத்தான் 'கெட் அவுட்'னு சொல்ல வேண்டியவன் நான்னு அவளுக்கு ஞாபகப்படுத்தினேன். 'நௌ யு நோ... ஷி ஹாஸ் லெஃப்ட்.' நான் இதைப் பத்தி வருத்தப்படலேயில்லே....''

ராதிகா கொஞ்ச நேரம் பேசாமலிருந் தாள். அருண் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

''விம்மிக்குள்ளே இன்னொரு விம்மி இருக் காங்கறது என்னோட யூகம்தான். ஆனா அந்த விம்மி இப்படி இருப்பான்னு நான் எதிர்பார்க்கலேயில்லே... உங்களை 'கெட்-அவுட்'னு சொல்லும்படியா அவளுக்கு என்ன அத்தனை கோபம்?''

''அங்கே அந்த ஆர்ட்டிஸ்டோட ஃபிரண்ட்ஸ் வந்திருந்தாங்களாம். பேசிண் டிருந்தாளாம்.... விஸ்கி குடிச்சாளாம்.... 'அதுக்கப்புறம் என்ன நடந்தது'ன்னு கேட் டேன். ஷி பிகேம் வொய்ல்ட்'...'' என்று சொல்லிவிட்டு நிறுத்தியவன், சில விநாடி களுக்குப் பிறகு தோள்களைக் குலுக்கிக் கொண்டே கூறினான்: ''ஐ டோண்ட் நோ... திடீர்னு அவ இப்படி மாறிப் போனதுக்குக் காரணம் என்ன?''

ராதிகா தானும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டே கேட்டாள்: ''அவளும் 'பெய்ண்ட்' பண்றதுண்டா?''

''எனக்கு இதுவரை தெரியாது. ரெண்டு நா முன்னாலேதான் பம்பாய்க்குப் புறப்படும் போது பார்த்தேன். நிறையப் பெயிண்ட்டிங் இருந்தது. 'யார் போட்டது'ன்னு கேட் டேன். அவ போட்டதாச் சொன்னா. எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமா இருந்தது. தே வேர் நாட் பாட்...''

''மை காட்! இத்தனை வருஷமா கல் யாணமாகி ஒண்ணாக் குடித்தனம் பண்றீங்க. அவ 'பெயிண்ட்' பண்றான்னு கூட உங் களுக்குத் தெரியாதா?''

''அவ என்கிட்ட காட்டினதே இல்லியே?''

''இப்போ பார்த்தபோது என்ன சொன் னீங்க?''

''எனக்கு ஞாபகம் இல்லே... பம்பாய் 'டிரிப்'பைப் பத்திதான் என் நினைவெல்லாம்.



துணுக்கு வேட்டை

இந்த வாரம் இடம் பெற்றுள்ள துணுக்குகளை வேட்டையாடித் தொகுத்திருப்பவர், திருச்சி மாவட்டம் நெய்தலூர்க்காரரான திரு எம். நல்லு சாமி... (உதவி திருமதி பூங்கோதை நல்லுசாமி) திருச்சியிலுள்ள வேளாண்மைப் பொறியியல் பிராந்தியப் பண்டகசாலையில் உதவி செயற் பொறியாளராகப் பணியாற்றும் இவர் கிண்டி பொறியியல் கல்லூரியில் படித்தவர். அப்போது கல்லூரி பாஸ்கட் பால் குழுவுக்குத் தலைவரா யிருந்தார். அதே கால கட்டத்தில் கல்லூரி யின் கிரிக்கெட் குழுவுக்குத் தலைவர் வேங்கட ராகவன். புத்தகங்கள் படிப்பதிலும், சங்கீதத்திலும் ஈடுபாடுள்ள இந்த இளைஞருக்கு கிரைம் நாவல்கள் மிகவும் பிடித்தமானவை.

-'யெஸ்பால்' போட்டோ: உத்ரா

பர்ஹாப்ஸ் 'நன்னா யிருக்கு'ன்னு சொன் னேன் போலிருக்கு.... 'ஐ டோண்ட் ரிமெம் பர் வாட் ஐ ஸெட்! ஒருவேளை நான் ஒண் ணும் சொல்லலேங்கிறதுதான் அவ கோபத் துக்குக் காரணமா இருக்கலாங்கிறியா?''

''ஐ டோண்ட் நோ. அப்படி உங்க அபிப் பிராயத்தைத் தெரிஞ்சுக்கணும்கிறது அவ ஆசையா இருந்தா முன்னாலேயே உங்க கிட்டே காட்டியிருக்கலாமில்லையா? உங் களுக்கும் கலைக்கும் சம்பந்தமில்லேன்னு அவ நினைச்சாளோ என்னமோ!''

''அப்படி நினைச்சிண்டிருந்தாலும் எனக்கு ஆச்சரியமில்லே. இதெல்லாம் 'வேஸ்ட் ஆஃப் டைம்'ங்கிறதுதான் என் அபிப்பி ராயம். அவ நிறையப் புத்தகங்கள் படிப்பா. அது எனக்குத் தெரியும். எல்லாம் லிட்ரரி புக்ஸ். என்னுடைய இன்ட்ரெஸ்டே வேறே. இது அவளுக்குத் தெரிஞ்ச விஷயம்தான்.''

''அவ தன்னை அப்படியே பரிபூரணமா உங்களோட ஐக்கியப்படுத்திண்டுட்டான்னு அன்னிக்குச் சொன்னீங்களே அது எப்படி?''

''அப்படி நினைச்சேன்.''

ராதிகா சிரித்துக் கொண்டே சொன்னாள்: '' 'ஐக்கியப்படுத்திக்கிறது'ன்னா உங்கபாஷை யிலே என்ன அர்த்தம்? கல்யாணம் ஆனப் புறம் புருஷனோட இன்ட்ரஸ்ட்தான் பெண் டாட்டிக்கு இருக்கணும்கிறதா? அப்படி அவளுக்குன்னு இன்ட்ரஸ்ட் இருந்தாலும் அதைப் புருஷனுக்குக் காட்டிக்கக் கூடா துங்கிறதா? உங்களோட இன்ட்ரெஸ்ட் விம்மிக்குத் தெரிஞ்ச விஷயம்தான்னீங்களே, அவளோட இன்ட்ரெஸ்ட்டைப் பத்தி எப் போதாவது அவளோட 'டிஸ்கஸ்' பண்ணி யிருக்கீங்களா?''

அருண் மௌனமானான்.

(தொடரும்)

College Campus அரசினர் மகளிர் கல்லூரி புதுக்கோட்டை

தொகுப்பு : நாயகன்



குடும்பம் ஒரு கதம்பம் *

எங்கள் கல்லூரியின் இளங்கலை வரலாறு மூன்றாம் ஆண்டு மாணவியரான ஜி. புவனேஸ்வரி, ஜே. லலிதா ஆர். வி. புவனேஸ்வரி, எஸ். உஷா, ஆர். புவனேஸ்வரி மற்றும் சி. சசிலா நடிக்க செல்வி ஆர். வி. புவனேஸ்வரியும், ஜே. லலிதாவும் கதை வசனம் எழுதி, 'குடும்பம் ஒரு கதம்பம்' என்ற தலைப்பில் ஒரு நகைச் சுவை நாடகம் போடப்பட்டது. ஆண் பாத்திரங்களையும் மாணவிகளே ஏற்று அற்புதமாக நடித்தார்கள்.

அந்நாடகத்தில் வரும் ஒரு நகைச்சுவை உரையாடல்:

இட்டு (கல்லூரி மாணவன்): என்ன மாமா ஜாதகம் பாக்கறேளா, என் ஜாதகத்தைக் கொஞ்சம் பார்க்கக் கூடாதா?

நாணு: உன் ஜாதகம்தான் பார்க்கறேன். அஷ்டமத்திலே சனி கொஞ்சம் படுத்தும். லக்னத்திலே குரு நல்ல பலனைத் தரும்.

இட்டு: நல்ல பலன்னு சீக்கிரம் கல்யாணம் ஆகுமா மாமா?

நாணு: நன்னாயிருக்கு. கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்? படிச்சு முடிய வேண்டாமா?

ஜானகி: அதானே கேக்கறேன்டி எம்புள்ள நன்னாப் படிச்சுப் பெரிய உத்தியோகத்துக்கு வரணும். நெக்குக் காசு மாலையும், வைர அட்டிகையும் வாங்கிப் போடணுமாக்கும்!

நாணு: பார்த்தாயா உங்கம்மா ஆசையை? நன்னாப் படிக்கிற வழியைப் பாப்பியா, கல்யாணம், கல்யாணம்னு கிடந்து அலையறான்.

இட்டு: ஐயோ மாமா (பாடுகிறான் சோதனை மேல் சோதனை ராகம்) சப்ஜக்ட் மேலே சப்ஜக்ட் போதுமடா சாமி. எக்ஸாம் தான் வாழ்க்கை யென்றால் தாங்காது பூமி. (சப்ஜக்ட்)

ராதா: பிஸிக்ஸ் ஒரு கைவிலங்கு நீ போட்டது.

இட்டு: அதில் கெமிஸ்ட்ரி ஒரு கைவிலங்கு நான் போட்டது. (சப்ஜ.)

பாபு: ஆதாரம் இல்லையம்மா காப்பியடிக்க,

இட்டு: நாங்கள் அவதாரம் இல்லையம்மா, சொந்தமாய் எழுத.
பரிகாரம் தேடி யுனிவர்ஸிடி செல்ல ஒரு எம்.பி.யோ எம்.எல்.ஏ.வோ தெரியவுமில்லே.

மாமா... இந்த செம்ஸ்டர் போச்சன்னு, அடுத்த செமஸ்டர் எழுதலாம்... அதிலேயும் போச்சன்னு...
தியரில போச்சன்னு பிராக்டிகல்ல பார்த்துக்கலாம், பிராக்டிகலும் போச்சன்னு எப்படி பாஸ் பண்றது...

இட்டு: நானுடலில்லையம்மா உடம்பாடுது...

ஜானகி: உன் தந்தை கையில் மார்க்கோடு பிரம்பாடுது.

இட்டு, பாபு: உடை தாங்கும் உடம்பு இது அடிதாங்குமா? டெய்லி ஒரு டெஸ்ட் வச்சா தலை தாங்குமா? (சப்ஜெக்ட்)



● புகைவண்டி நகர்ந்து நிலையத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது. அப்போது ஓர் இளைஞன் வேகமாக ஓடிவந்து, ஏறிக்கொண்டவாறே, ''அப்பாடா, பிடித்து விட்டேன்!'' என்றான். வண்டியில் இருந்த ஒரு கிழவர் அவனிடம், ''அதற்குள் இவ்வளவு களைத்து விட்டாயே! உன் வயதில் நான் எத்தனையோ நிலையத்திலிருந்து நகர்ந்துவிட்ட வண்டியைப் பிடித்திருக்கிறேன்'' என்றார்.

அவ்விளைஞன், ''இருக்கலாம் ஐயா. ஆனால் எனக்கு வண்டி தப்பியது இதற்கு முந்திய நிலையத்தில்'' என்றான்.

கனவு எல்லாம்



பூங்குயிலின் பாடலினைக் கேட்க நானும்
    பூந்தோப்புப் பக்கத்தில் சென்று நின்றேன்
பூங்குயிலினைக் காணவில்லை; பூவை நின்றாள்
    பூநடுவில் தேனுண்ணும் தும்பியானேன்!
மாங்கனியின் நீர்ச்சுவையைச் சுவைக்க நானும்
    மாமரத்து அருகினிலே சென்று பார்த்தேன்
மாங்கனியும் அங்கில்லை மங்கை நின்றாள்!
    மாம்பழத்து உள்ளிருக்கும் வண்டாய் ஆனேன்
உண்ணுதற்கு மீன்பிடிக்கத் தூண்டில் போட்டு
    ஓசையின்றி ஊருணியைப் பார்த்து நின்றேன்!
உண்ணாத மீனிரண்டு நீரில் ஓட
    அண்ணாந்து பார்த்தேன் மாது நின்றாள்!
வெண்ணிலவு பகலினில் இல்லையென்ற
    வேதனையில் நானிருந்த நேரந்தன்னில்
பெண்ணிலவு பாரென்று பாவை வந்தாள்
    பேசாத சிலையாகி நானும் நின்றேன்!
கார்மேகம் இரண்டதெனக் கலங்கி நானும்
    காற்றெனவே வீடுநோக்கிப் பறந்தபோது
பார் என்று அழைத்திடவே திரும்பிப் பார்த்தேன்
    பருவமகள் தன் கூந்தல் கோதி நின்றாள்!
தேரசைந்து வருமென்று தெருவின் ஓரம்
    திரண்டிருந்த கூட்டத்தில் கலந்து நின்றேன்
தேர்வென்ற பேச்சங்கே எழுதல் கேட்டு
    திடுக்கிட்டேன்! கண்விழித்தேன்! கனவெல்லாம்.

— ச. மைக்கேல்
இளங்கலை இலக்கியம், இரண்டாம் ஆண்டு

ஒரு சுவையான உண்மைச் சம்பவம்!

● லிங்லுக், யமதேவன் என்ற இருஹங்கேரி சகோதரர்கள் பூட்டின பெட்டிக்குள்ளிருந்து தப்புவது, கத்தியை விழுங்குவது போன்ற பல வித்தைகள் செய்து மக்களிடையே பிரபலமானார்கள். ஒரு நாள் இருவரும் ஷாங்காயில் கசரத் பழகும் இடத்துக்குப் போன பொழுது, யமதேவன் ஒரு இரும்புக் குண்டை வீசி எறிந்ததில் இரத்தக் குழாய் வெடித்து இறந்து விட்டான்.

இதுவரை அண்ணனைப் பிரிந்தறியாத லிங்லுக் கதறி அழுதான். அவனது சவப் பெட்டியையும் கப்பலில் எடுத்து வந்தனர். ஒரு நாள் நடு இரவில் லிங்லுக் ஓடிவந்து, ''அண்ணனும் நானும் இரகசியமாக சீட்டி அடித்துக் கொள்வது வழக்கம். அண்ணன் சாகவே யில்லை. அந்தச் சீட்டி ஒலியைக் கேட்டேன்'' என்றான். எல்லோரும் எடுத்துச் சொல்லியும அவன் ஒத்துக் கொள்ளவே யில்லை.

சற்றுப் பொறுத்து, ''எல்லோரும் கவனியுங்கள்'' என்றான். அந்த அமைதியான சூழ்நிலையில் மாலுமிகள் மற்றும் பிரயாணிகளும் அவ்வொலியைக் கேட்டனர். உடனே லிங்லுக் சவப் பெட்டியைத் திறந்து பார்க்கத் துடித்தான். பெட்டியின் மூடியைத் திறந்தபோது பிணம் விறைத்துக் கிடந்தது. லிங்லுக் அண்ணனின் முகத்தை உற்றுக் கவனித்த பிறகு, ''அண்ணன் என்னைத் தன்னுடன் வரும்படி கட்டளை யிட்டிருக்கிறான். நான் ஹாங்காங்கிலிருந்து உயிருடன் திரும்ப மாட்டேன்'' என்றான்.

எல்லோரும் ஹாங்காங்கை அடைந்தனர். அன்று முழுதும் அமைதியா யிருந்த லிங்லுக் இரண்டு நாட்கள் சென்ற பின் கடும் காய்ச்சலால் அவதிப்பட்டான். மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற சில மணி நேரத்துக்குள் அவன் இறந்து போனான்.


இன்றும் ஹாங்காங்கிலுள்ள ஒரு கல்லறையில் அந்த இணை பிரியாச் சகோதரர்களின் சமாதியை அருகருகே காணலாம்.

ஆர். கஸ்தூரி, இளமறிவியல், கணிதம் இரண்டாம் ஆண்டு.



செல்வி செ. சரிலா
இளங்கலை மூன்றாவது ஆண்டு வரலாறு


ரஷ்யச் சிரிப்பு!
அமெரிக்கச் சிரிப்பு!
சிரி புனரிப் போர்!
" நாம உண்மையான ஆசாமிங்க தானான்னு சில சமயம் எனக்கு சந்தேகம் வந்துடறது; யாரோ வரைந்த கார்ட்டூன் பேர்வழிகளோன்னு தோணறது. "



8. அவன் விடைபெற்றான்

இந்தச் சுயசரிதத்தைத்தொடர்ந்து படிக்கும் நண்பர்கள், வெறும் அவலம், ஓலம், அழுகையைக் காண்கிறார்கள். ஒரு சுயசரிதம் இப்படியா இருக்கும்? இருக்காதுதான். ஆனால் உண்மை இப்படித்தான் இருக்கும்.

சந்தோஷம் என்பது அவன் வாழ்க்கையில் ஒரே மாதிரி இருந்தது. அதை வெளியிடுவதானால் ஒரே விஷயத்தைத்தான் திரும்பத் திரும்பச் சொல்ல முடியும். எத்தகைய மதுவைச் சாப்பிட்டான்; எப்படிப்பட்ட பெண்ணோடு பேசினான் என்பதைத் தவிர குடும்ப வாழ்க்கைக் குதூகலத்தையா அவன் கூற முடியும்? முற்றிலும் ஒரு முட்டாளின் சுயசரிதமே இந்த இரண்டாம் பாகம். இதில் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது?

காந்திஜியின் ''சத்தியசோதனை''யில் முதல் பாகத்தில் சில தனி வாழ்க்கைக் கீறல்கள் இருந்தன. இரண்டாம் பாகம் தெளிவான அரசியலை நோக்கிச் சென்று விட்டது. அவனென்ன காந்தியா, நேருவா?

அவனது தாயார் சொல்வார்கள், ''வெந்ததைத் தின்று விதி முடிந்தால் சாகிறவர்கள்'' என்று.

''அவன் பலரால் உதைக்கப்பட்ட பந்து''

''பல மாடுகள் ஏறி மிதித்த நெற்கதிர்.''

அவனை அடையாளம் காட்ட மிச்சமிருப்பவை அவன் எழுதிய எழுத்துக்களே.

தனக்குச் சம்பந்த மில்லாத விஷயங்களில் தாளமுடியாத மகிழ்ச்சி கொண்டு துள்ளிக் குதித்திருக்கிறான். சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கோட்டை விட்டிருக்கிறான். அவனது சிரிப்புக்கும் அழுகைக்கும் பொருளில்லை. அதை யாரும் மதித்ததும் இல்லை.

மணிவண்ணன் துணை மேயர் ஆனதும் அவன் ஏன் மகிழ வேண்டும்? டிரஸ்டுபுரத்தில் வீடு ஏன் பிடிக்க வேண்டும்? ஏதோ அலையில் விழுந்த காகிதம் அதையும் செய்து முடித்தது.

மணிவண்ணன் கொஞ்சம்அடக்கமானவர். அவன் பிடித்த வீடு நன்றாக இருந்தாலும், தம்முடைய ஏழைமைக்கு ஒத்து வராது என்னும், பழைய வீட்டிலேயே இருப்பதுதான் மரியாதை என்றும் கூறிவிட்டார்.

அப்படிப்பட்ட சிலரும் உலகத்தில் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் அவர்கள் ''களத்திலேசிந்தியஅரிசிகள்.''

அன்றைய இரவு அவனது வாழ்க்கையில் ஆனந்தமான இரவு. இன்று நினைத்தால் அது ஒரு கொடிய இரவு. முன்பு சந்தித்த அதே கம்பெனியில் அந்தப்பெண்ணை அன்று அவன் மீண்டும் சந்தித்தான். வழக்கத்துக்கு விரோதமாக அவள் அலங்காரம் செய்திருந்தாள். இயற்கையிலேயே அவள் நல்ல அழகி. பூப்போன்ற உடல், நெடிய, கரிய கூந்தல், அதிகப் படிப்பில்லை என்றாலும் அளவு கடந்த பணிவு. அவள் அவனோடு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு அவனது காலைத் தொட்டு வணங்கினாள்.

இப்படிச் சிலர் காலைத் தொட்டு வணங்குவது அன்று அவன் வாழ்க்கையில் மிகவும் புதிது. இன்று அது அவனுக்கு அதில் பழக்கம் வந்து விட்டது. அன்று அந்தப் புனிதச் சடங்கு வெறும் சடங்கு என்றுதான் கருதினான். ஆனால் அவளது செய்கையில் ஒரு அர்த்தமிருந்தது.

தான் ஒருவருக்கு மனைவியாகப் போவதாகவும், தன்னை ஆசீர்வதித்து அனுப்ப வேண்டும் எனவும் அவள் கேட்டுக்கொண்டாள்.

நாகரீக உலகத்தில் எப்படியோ வாழ்க்கை நடத்தியவர்கள் ஓரிடத்தில் அடைக்கலம் புகுந்து விடுவது இயற்கைதான். அடைக்கலம் புகுந்த பிறகு, சத்தியம் தவறாமல் இருப்பதே உத்தமமான குணம்.

வாழ்க்கைக் கஷ்டம் தாங்க முடியாமல் வழி தவறிய சில பெண்கள் நல்ல இடத்தில் சேர்ந்து நன்றாகவே வாழ்கிறார்கள்.

குடும்பத்தில் இருப்பதாகக் கூறிக் கொண்டு திமிர்பிடித்து, தினந்தோறும் ஆள் பிடிக்கும் பத்தினிகளை விட இவர்கள் உத்தமமானவர்களே.

அந்த வகையில், அவள் சத்யவதி, குணவதி.

ஐந்தாண்டு காலம் அவனோடு தொடர்பிருந்தும் அவளை மனைவியாக அவன் அங்கீகரித்ததில்லை.

அன்று எப்பொழுதுமேநல்லபொருள்களைத் தேர்ந்தெடுக்க அவனுக்குத்தெரிந்ததில்லையே!

ஒன்று நல்லவை அவனுக்குக் கிடைக்காமல் மற்றவர்கள் கெடுப்பார்கள்; இல்லையேல் அவனே கெடுத்துக் கொள்வான்.

தன்னை மனைவியாக்கிக் கொள்பவர் யார் என்று அவள் கூறினாள். அவர் சினிமா உலகம் சம்பந்தப்பட்டவரல்ல. ஆகவே அவள் வாழ்க்கை நிம்மதியாகவே இருக்கும். ஒரு மனம் அவளை விட மறுத்தது. இன்னொரு மனம் அவள் நல்ல இடத்துக்குப் போகும்போது நாம் ஏன் தடுக்க வேண்டும் என்று உரைத்தது.



● முதல் தரமான ஈகிள் டயரி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளான 100 கல்கி வாசகர்களைத் தேர்ந்தெடுத்த சிறுமி நாராயணி கிண்டர் கார்டன் வகுப்பில் படிக்கிறாள். 'ஒன் டு ஹன்ட்ரட்தானே? ஓ! ஜோரா எண்ணுவேனே' என்று தலையாட்டிக்கொண்டு கடிதக் குன்றுக்குள் புகுந்தாள். அவள் மடியில் சுமக்க நேர்ந்த கடிதக் குவியலால் அவளுக்கு டென் எண்ணுவதற்குள் கால் வலிக்க ஆரம்பித்து விட்டது! ஆயினும் நாராயணி சளைக்கவில்லை. எழுந்து நின்றுகொண்டு குனிந்து குனிந்து ஒவ்வொரு கடிதமாக எடுத்துத் தந்தாள். ஒவ்வொரு முறை அவள் குனிவதற்கு முன்பும் கடிதக் குவியல் நன்கு கிளறி விடப்பட்ட நேரத்தில் அவளுக்கு ஓய்வு.

கல்கி நேயர்கள் சார்பில் நன்றி தெரிவித்துப் பெரிய மிட்டாய்ப் பெட்டியை பரிசாக அளித்தபோது நாராயணி ''தாங்க்ஸ்'' என்றாள். போகிற போக்கில் அவள் சொன்னது: ''கல்கியில் நான் எழுதப் போகிறேனே!''

நாராயணியின் ஆசை நிறைவேற ஆசி கூறுங்கள். புகைப் படம்: உத்ரா

(பரிசு பெற்ற நூறு பேருக்கும் டயரிகள் அனுப்பப்படுகின்றன. —ஆசிரியர்)

வேடிக்கையான சில சடங்குகள். அவன் அவளது நெற்றியிலும், கழுத்திலும் குங்கும மிட்டு வழியனுப்பினான். வெகு நேரம்வரை தன்னிலையையே பேசிக் கொண்டிருந்த அவன் தெளிவான புத்தியோடு இருந்திருந்தால் அந்தக் கணமே மனத்தை மாற்றிக்கொண்டிருப்பான்.

நடந்தது. நடந்து விட்டது. சடலத்துக்கு இனி என்ன சஞ்சரி? ''அறுவடை செய்யப்படும் வயல் அடுத்த பயிரையும் இழந்து தான் ஆக வேண்டும்''. ''இருதயத்துக்குச் சம்பந்தமில்லாத கால்கள் இப்படித்தான் நடை போடும்.''

மறுநாள் அவள் அவனுக்கு அந்நியப் பெண்ணாகி விட்டாள். அவன் அவளை மறந்தும்விட்டான்.

என்ன செய்வது! சொர்க்கம் கனவில் வந்து போகிறது. நாகரிகம் கண்ணெதிரில் வந்து நிற்கிறது.

அவனது வாழ்க்கையில் வந்து போனவர்கள் பலர். ஆனால் கள்ளம் கபடம் இல்லாத சிலர் கால தேவன் கட்டளையைப் போல் இன்று அவனைச் சந்திக்கும்போது பழைய காலங்களை நினைவுபடுத்திக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

ஆனால் அவனிடமிருந்து பிரிந்து போன அவள் கண்ணீர் வடிப்பவளாக இல்லை. லட்சாதிபதியாக இருக்கிறாள். ஈஸ்வரன் அவளது நல்ல உள்ளத்துக்கு நல்ல வழியைக் காட்டிவிட்டான்.

அவனது வானம்பாடி படத்தில் ஒரு கோஷ்டி நடனத்தில் அவளும் ஆடுவதாக இருந்தது. மறுநாள் காலையில் தயாரிப்பு நிர்வாகியைக் கூப்பிட்டு அவளுக்குப் பதிலாக வேறொரு பெண்ணைப் போடும்படி அவன் குறிப்பிட்டான்.

மழை பெய்யும்; ஊர்த் தெருக்கள் வழியாகத் தண்ணீர் கரை புரண்டு ஓடும். ஓடிய தண்ணீர் கண்மாயில் விழும். கண்மாயில் இருக்கும் மீன்கள் கரையேறி ஊருக்குள் வரும்.

ஆண்டவன் மீனுக்குக்கூட எதிர் நீச்சல் போடும் சக்தியைக் கொடுத்திருக்கிறான். எல்லாவற்றையும் சரி சரி என்று எவன் சகித்துக் கொள்கிறானோ, அவன் இப்படித்தான் தன்னைப் பற்றியே ஓலமிட வேண்டியிருக்கும்.

அன்றைய வாழ்க்கையைப் பற்றி ஒழுங்காக அவன் நாட்குறிப்பு எழுதியிருந்தால் பல முட்டாள்களுக்கு அது பாடமாக இருந்திருக்கும்.

மறுநாள் டைரக்டர் பீம்சிங் அவனைச் சந்தித்தார். இரண்டு படங்களுக்கு பெங்களூர் சென்று மொத்தமாகப் பாடல்கள் எழுதி வரலாமே என்றார். எப்போதுமே வெளியூர்களில் இருப்பதை நேசிக்கும் அவன் ஒப்புக் கொண்டு விட்டான்.

சிலதை மறக்கவும், சில விஷயங்களை மறைக்கவும் இப்படிச் சில போர்வைகள்.

பெங்களூர் உட்லண்ட்ஸில் ஒரு பழைய கட்டிடத்தில் இரண்டு அறைகள் உண்டு. இந்த அறைகளில் சுமார் ஐநூறு பாடல்களும், பத்துக் கதைகளும் அவன் எழுதியிருக்கிறான். அந்த அறைகளில்தான் அவன் அழுதிருக்கிறான், சிரித்திருக்கிறான், அவமானப் பட்டிருக்கிறான், பரபரப்பாக உலாவியிருக்கிறான், கற்பனையில் மிதந்திருக்கிறான். கவிதையிலேயே சிந்தித்திருக்கிறான்.

இரண்டு படங்களுக்கான பாடல்கள் இரண்டே நாட்களில் முடிந்து விட்டது.

அவனும், தம்பி விசுவநாதனும் அன்று 'விக்டோரியா' ஓட்டலுக்குச் சாப்பிடப் போனபோது அவர்களுக்கு ஒரு புதிய நண்பர் கிடைத்தார். (வளரும்)

என் பெயர் அருண்குமார்



விநுதா

ஆர். ஏ. மலாகா சாலை நேஷனல் தியேட்டருடன் வடக்கில் கை குலுக்கும் இடத்தில் நின்று எதிரே பார்த்தால் உங்கள் கழுத்து வலிக்கும். காரணம்: உயரமாக நிற்கும் ஒன்பது தள 'கோவா பில்டிங்'!

மாண்டோவி ஓட்டலில் மூன்று ரூபாய் சொச்சத்தில் காலை டிபனை முடித்துக்கொண்டு பிரியா சுமக்க நான் கோவா பில்டிங்கின் தலையிலிருக்கும் என் ஆபீசுக்கு வந்தபோது மணி பத்து முப்பதுக்கு அரை மணி பாக்கியிருந்தது.

ஆபீஸ் பையனின் கறுகறுப்பு என் பெயர்ப் பலகையில் எதிரொலித்தது. 'குட்!' கோவாவின் பனித் துளிகள் விரவிய காலை நேரத்திலும் 'ஜி. கே. அருண்குமார், பி.ஏ., பி.எல்—பிரைவேட் டிடெக்டிவ்' என்ற எழுத்துக்கள் பளிச்சிட்டன.

கோவாவுக்குக் குடி வந்து இன்றோடு மூன்று மாதங்களாகி விட்டன. இன்னும் ஒரு கேஸ்கூட என்னிடம் மாட்டவில்லை. 'இது என் துரதிர்ஷ்டமா? இல்லே, இந்த நவக்கிரக மாடிக்குக் குடிவந்த நேரமா?' என் சிந்தனை ஓட்டம் நின்றது.

''மே ஐ கம் இன்?''

திரும்பிப் பார்த்தேன். அவள் பெண். இளம் பெண். பச்சை தேவதையாக ப்ரேமில் நின்று கொண்டிருந்தாள். ''யெஸ் ப்ளீஸ். யூ ஆர் வெல்கம்'' என்றேன்.

வண்ணத்துப் பூச்சியாக வந்து எதிரே உட்கார்ந்தாள். என் அறை மேலும் பிரகாசமானது.

அவளை செ.மீ., செ.மீ. ஆக ஆராய்ந்தேன். டியாரா தொட்ட கூந்தல். ஹேமா ஞாபகத்துக்கு வரும் நெற்றி. தீனக் மூக்கு. கண்கள் கவிதை பாட வைத்தன. காதில் ஏதோ தொங்கல் சமாசாரங்கள். தொட வைக்கும் கன்னங்கள். லெவண்டர் ட்யூ அவளை முற்றுகையிட்டு இருந்தது. இளம் பச்சை ரவிக்கை. கழுத்திலிருந்து ஒரு ஒற்றைச் செயின் கீழே இறங்கி எங்கோ மறைந்தது. அதற்கு மேல் பார்க்க விடாமல் பாழாய்ப்போன மேசை குறுக்கிட்டது.

''நீங்க....?'' — பச்சைத் தேவதை.

''நான்? நான்: ஜி. கே. அருண்குமார். பிரைவேட் டிடெக்டிவ்.''

---

[1]
டேய் குப்தா?''

புரொபஸர் பானர்ஜி குரல் கேட்டு வேலைக்காரன் ஓடிவந்தான்.

''என்ன சார்?'' பவ்யமாகக் கேட்டான்.

புரொபஸர் சீறி விழுந்தார். ''மடையா, எங்கேடா போய்த் தொலைஞ்சே? நெஞ்சு வலி தாள முடியலே. சீக்கிரம் அந்தச் சீசாவிலே இருக்கிற மாத்திரையை எடுடா.''

புரொபஸர் வலியால் துடித்தார்.

''இந்தாங்க சார்.''

அவள் மெலிதாகச் சிரித்தாள். பின் கேட்டாள்: ''ஒரு விஷயம். அதை நீங்கதான் முடித்துத் தரணும்.''

''ஓ.கே'' என்றேன் உற்சாகமாக. ''அது தானே என் தொழில்.''

அவள் கத்தி குத்துவது போல் விஷயத்துக்கு வந்தாள். ''புரொபஸர் பானர்ஜியை உங்களுக்குத் தெரியுமா?''

'தெரியாது' என்று தலையாட்டினேன்.

''ஏ. பி. ஹெச் சாலை. நான்காவது குறுக்குத் தெரு. 'பனுஜி ஹட்'. நம்பர் பதினேழு.''

''அவர் கிட்டே போய் நான் என்ன செய்யணும்?''

அவள் பார்வையில் கடுமை தெரிந்தது.

''கொலை செய்யணும்.''

நான் அதிர்ந்து போனேன். ''வாட்! கொலை செய்யணுமா?''

அவள் தொடர்ந்தாள்: ''ஆமாம். கொலைதான். இதை நீங்கதான் செய்யப் போறீங்க.''

''நானு?''

''ஆமாம்.'' பதில் அலட்சியமாக வந்தது.

''செய்ய மறுத்தால்....?''

''உங்களால் மறுக்க முடியாது திலீப்.''

நான் அவசரமாகக் குறுக்கிட்டேன். ''நோ. ஐ ஆம் நாட் திலீப். நான் அருண்குமார்!''

அவள் சந்தேகம் கேட்டாள். ''போலீஸ் ரிப்போர்ட்ஸ்லே கூட 'திலீப்'னுதானே இருக்கு?''

''போலீஸ் ரிகார்ட்ஸ்? எனக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்?''

''நிறையவே இருக்கு. உங்க பேர் திலீப். அப்பா, அம்மா கிடையாது. ஒண்டி ஆள். தொழில் திருடுவது. இடது கையிலே ஆறு விரல். தாடியை எடுத்துட்டா ஒரு வெட்டு தெரியும். இதெல்லாம் கூட போலீஸ் ரிகார்டிலே இருக்கு. அந்தச் சம்பந்தத்தை உண்டாக்கியவரைக் கூப்பிடட்டுமா?.... பாபு-லால்!''

தன்னுடைய தாடியைத் தடவியபடி பாபுலால் உள்ளே வந்தான். என் வயிற்றில் ஒரு ஸ்விங் கிக்! நான் காற்றுப் போன பலூன் மாதிரி கீழே இறங்கி வந்தேன்.

''என்ன திலீப் சௌக்கியமா?'' — பாபுலால்.

நான் தடுமாறினேன். பாபு என் தொழிலின் பழைய கூட்டாளி. எதற்கு இங்கே வந்தான்?

அவன் லேசாகச் சிரித்தான். ''திலீப், அறிமுகம் தேவையில்லைன்னு நினைக்கிறேன். யேம் ஐ கரெக்ட்? மிஸ்டர் திலீப் மாஜி கைதியான நீங்க, இந்தக் கோவா ஜனங்களை வேணுமின்னு ஏமாற்றலாம். ஆனால் என்னை ஏமாற்ற முடியாது. புரியுதா?''

''அதுதான் புரியுதே?'' என்றேன் எட்டு கிலோ எரிச்சலுடன். மறக்காமல் அவனை மனத்துக்குள் சபித்தேன்.

---

[2]

தனிமையின் ஏகாந்தத்தில் புதைந்து கிடந்த புரொபஸர் கடிகாரத்தைப் பார்த்தார். மணி பதினொன்று.

''குப்தா?''

ஓடிவந்தான். ''சார்?''

''எங்கேடா அந்தச் சிறுக்கி?''

''இன்னும் வரலை சார். காலையிலே யாரோ ஒரு தாடிக்காரன் கூட நம்ப எஜமானியம்மா சிரிச்சுப் பேசிக்கிட்டுக் கார்லேபோய்க்கிட்டு இருந்தாங்களாம். பக்கத்து வீட்டுப் பணிக்கர்சொன்னார்!''

''போயும் போயும் இந்த வயசிலே இருபத்திரண்டு வயசுப் பொண்ணை கட்டிக்கிட்டேன் பார். என்னை....'' அவர் தம்மையே நொந்து கொண்டார்.

வெளியில் கார் ஹார்ன் சப்தம் கேட்டது.

''புரொபசர் பானர்ஜியை முதல்ல ஒழிக்கணும். அப்புறம் மாடியிலே மூன்றாவது அறையிலே இருக்கிற பீரோவைத் திறந்து அதிலே இருக்கிற உயிலை எடுத்துக்கிட்டு வந்துடணும். இதுதான் நீங்க செய்ய வேண்டியது.''

''உயிலை வேறு எடுத்துக்கிட்டுவரணுமா?''

''வேண்டாம். கஷ்டமா இருந்தா இப்படிப் பண்ணுங்க.'' தீக்குச்சி ஒன்றை எடுத்துச் 'சரக்'கென்று பற்ற வைத்தாள்.

நான் புரிந்து கொண்டேன். ''வீட்லே வேறு யார் யார் இருக்காங்க?''

''அவரோட இளம் மனைவி. ஆனால் நீங்க கொலை செய்யற அன்னைக்கு அவங்க வீட்ல இருக்க மாட்டாங்க.''

''ஏன்?''

''வெளியூர் போயிடுவாங்க.''

''அதெப்படி உங்களுக்குத் தெரியும்?''

அவள் விழித்தாள். சிறிது நேரம்தான். சுதாரித்துக் கொண்டு, ''ஜஸ்ட் ஒரு யூகம் தான். அப்புறம் குப்தான்னு ஒரு வேலைக்காரன். அவனைப் பத்திக் கவலைப்பட வேண்டியதில்லை'' என்றாள்.

''என்னைக்கு இந்த வேலையைச் செய்யணும்?''

''அடுத்த வாரம் புதன் கிழமை.''

''ஒரு சந்தேகம்?''

''என்ன?''

''இந்தப் புரொபசருக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?''

''தேவையில்லாத சம்பந்தம். திலீப் நீங்க செய்யப் போற இந்தக் காரியத்துக்கு சன்மானம் பத்தாயிரம் ரூபாய். இந்தாங்க அட்வான்ஸ்!'' அவள் வீசிய காகிதக் கற்றை



யில் பாங்க் வாசனை அடித்தது. அவள் எழுந்தாள்.

''ஹலோ, உங்க பேர் என்னன்னு சொன்னீங்க?''

''சொல்லலையே?''

''இப்பச் சொல்லுங்க.''

''நிருபா!''

மனத்தில் வைத்துக் கொண்டேன். ''உங்களைப் போல உங்க பேரும் அழகா இருக்கு.''

பாபுலால் கத்தி போல் குறுக்கிட்டான். ''மடையா, நீ சொல்லாதே! அதை நான் தான் சொல்லணும். தெரிஞ்சுக்க.'' அவர்கள் கைகோர்த்தபடி அஸ்தமனமானார்கள்.

அவர்களின் நெருக்கம் என்னைத் தடுமாற வைத்தது.

---

[3]

''நிருபா?'' புரொபசரின் சூடான அழைப்பைக் கண்டு அவள் பதற்றப் பட்டதாகத் தெரியவில்லை.

''என்ன?'' அலட்சியமாகத் தலையைச் சிலிப்பிக் கொண்டு கேட்டாள்.

''எங்கே போயிட்டு வர்றே?''

''சால்மர் ஓட்டல்ல பார்ட்டி.''

''ஒரு கல்யாணமான பொண்ணு இப்படித்தான் நடு ராத்திரிலே வீடு திரும்பறதா?''

''அடேடே! எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சில்லே? நீங்க என்னோட கணவரில்லே? நான் மறந்து போயிட்டேன்.'' அவரின் இளம் மனைவி அம்பாக அறைக்குள் மறைந்தாள்.

கேள்வியின் கூர்மை, அதில் காணப்பட்ட கேலி புரொபசரின் தூக்கத்தை விரட்டியது.

மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டேன். வழியொன்றும் புரியவில்லை. 'சே, ஒன்றும் உதிக்க மாட்டேன் என்கிறதே? சரி, புதன் கிழமைதானே காரியத்தைச் செய்ய வேண்டும்? அதற்குத்தான் இன்னும் நான்குநாட்கள் இருக்கிறதே?' இலேசாகி, சிந்தனை வட்டத்திலிருந்து வெளியே வந்து, நந்திதாவுடன் அந்த மூன்று நட்சத்திர ஓட்டலின் டிபன் செக்ஷனில் ஒதுங்கினேன்.


''என்ன இன்னிக்கு ஒரே குஷியாய் இருக்கீங்க?'' — நந்திதா கேட்டாள்.

''விஷயம் இருக்கு.''

''என்ன விஷயம்? என்னைக் கல்யாணம் செய்துக்க முடிவு பண்ணிட்டீங்களா?''

''ப்பூ! இது வேறு ஒரு விஷயம்.''

''சரி, சீக்கிரம் சாப்பிட்டுத் தொலையுங்க ஜாலியா சினிமாவுக்குப் போகலாம். புதுசா ஒரு இந்திப் படம் போட்டிருக்காங்க.''



''சினிமாவுக்கா?'' என் மூளையில் நட்சத்திரங்கள் பூப்போல உதிர்ந்தன. 'சினிமா... சினிமா.... 'குட்! அப்படிச் செய்தால் என்ன?' என்னை நானே பாராட்டிக் கொண்டேன்.

என் திட்டத்தின் முதல் கட்டமாக, புரொபசர் பானர்ஜியின் பங்களாவுக்கு அருகில் இருந்த சினிமா தியேட்டரைப் பொறுக்கிக் கொண்டேன்.

அடுத்த நாள் கேட் கீப்பர்! பகதூரைப் பார்த்துச் சிரித்தேன். என் செலவில் டீ வாங்கிக் கொடுத்தேன். என் வலையில் அவன் விழுந்தான். விஷயத்தைச் சொன்னேன். ''இதுதான் நீ செய்ய வேண்டியது. என்ன சொல்றே?''

''சார், பொதுவாக தியேட்டர் கேட்டைத் தாண்டி யாராவது வெளியிலே போயிட்டா, திரும்பி அவங்களை உள்ளே விடக்கூடாது.''

''என்னைக்கூடவா?'' அவன் பாக்கெட்டில் அகல நோட்டைச் சொருகினேன்.

''கவலைப்படாதீங்க சார். நான் கவனிக்கிறேன். ஆமாம், என்னிக்கு நீங்க வெளியே போயிட்டு உள்ளே வர்றீங்க?''

---

[4]

''ஏன் சார் இன்னுமா தூங்கலே?'' —குப்தா.

''ஆமாம், ஏதோ யோசனையிலே இருந்திட்டேன்.''

''அப்படி என்ன சார் யோசனை?''

''என் பரந்த சொத்துக்கு ஒரு வாரிசை உருவாக்கப் போறேன்.''

''திருபா அம்மா தாங்களே வாரிசு?''

''ஷட் அப்!'' அவர் சீறினார்.

குப்தா அவசரமாக மறைந்தான்.

புதன் கிழமை. இரண்டாவது ஆட்டம். ஜீனத் தன் உபரி உறுப்புக்களைக் காட்ட, அகலக் கண்களைக் கொண்டு ஜனங்கள் பார்க்க அந்த மெல்லிய இருட்டிலிருந்து விடுபட்டு வெளியே புறப்பட்டேன்.

ஒரு பதினைந்து நிமிட நடையில் ஏ.பி. ஜெ.சி. சாலைக்கு வந்து நான்காவது குறுக்குத் தெருவைத் தேடி, 'பஜாஜ் ஹவுஸ்'டுக்கு வரும்போது அது இருளில் மூழ்கிக் கிடந்தது. காம்பவுண்ட்சுவரை லாகவமாகத் தாண்டினேன். மாடியிலிருந்து அநாதையாகத்



தொங்கிக் கொண்டிருந்த குழாய்களைப் பிடித்து ஏறி, கம்பி யில்லாத அந்தக் கண்ணாடி ஜன்னலை ஒதுக்கிவிட்டு உள்ளே நுழைந்தேன். பானர்ஜி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். ஒரு கணம் அவர்மீது பரிதாபம் ஏற்பட்டது. திருபா... பணம்... திருபா... பணம்! பாக்கெட்டிலிருந்து, நைலான் கயிற்றை எடுத்து புரொபஸர் கழுத்தைச் சுற்றி வளையமிட்டு ஒரு இறுக்!

அவர் தலை சாய்ந்தது.

உயில்! ஞாபகத்துக்கு வந்தது. இடது பாக்கெட்டிலிருந்து டார்ச்சை எடுத்தேன். கூடவே எதுவோ விழுந்த மாதிரி இருந்தது. 'என்ன இழவோ?' சீக்கிரம் திரும்பி வேண்டும். டார்ச்சுக்கு உயிரூட்டி மூன்றாவது அறையை அடைந்து, பீரோவை லாகவமாகத் திறந்து மேல் தட்டில் படுத்துக் கொண்டிருந்த உயிலைப் பனியன் உள்ளே செருகிக் கொண்டு ஜன்னல், குழாய் இத்யாதிகள் உதவியுடன் கீழே வந்தேன்.

மெயின் ரோட்டுக்கு வந்தபோது சாலை வெறிச்சோடிக் கிடந்தது. உள்ளே உறுத்திக் கொண்டிருந்த உயிலை எடுத்துப் பற்றவைத்தேன். சட்டென்று அது கருகி இறந்தது.

---

[5]

''என்ன சார் அது? போட்டோவா? இதிலே இருக்கிற இந்த இரண்டுபேரும் யார் சார்?''

''இது என்னோட தாலி கட்டாத மனைவி. 'அம்பா'ன்னு பேர். இந்தப் பையன் என் மகன்.''

''உங்க மகனா?''

''ஆமாம். குப்தா. என்னோட சால்மர் எஸ்டேட்டில ஒரு தொழிலாளியா அம்பா வேலை பார்த்துக்கிட்டு இருந்தா. அப்பத்தான் அம்பாவை எனக்குத் தெரியும். எங்களுடைய பழக்கம் எல்லை மீறிடிச்சி. இந்தப் பையன் பிறந்தான். நல்ல சிவப்பு. கொழு கொழுன்னு இருப்பான். இருந்தாலும் திருஷ்டி பரிகாரமாக....''

'டிரிங்...டிரிங்...' போன் சிணுங்கியது.

''குப்தா அந்த போனை அட்டெண்ட் பண்ணு!''

சினிமா தியேட்டருக்கு நான் திரும்பிய போது, என் சீட்டில் யாரோ ஒரு ஆள் உட்கார்ந்திருந்தான்.

அந்த ஆள் என்னைப் பார்த்து அப்புறம் பேசினான். ''இந்த சீட்லே முக்கால் மணி நேரமா உட்கார்ந்திருக்கேன்.''

''இருக்கலாம். நான் இந்தச் சீட்டை ரிசர்வ் செய்திருக்கேன். கொஞ்சம் வெளியில் போயிருந்தேன்.''

''வெளியே?''

''டாய்லெட்டுக்கு!'' என்றேன் எரிச்சலுடன்.

அதற்குள் தியேட்டருக்கு வேண்டியவர்கள் சிலர் ஓடோடி வந்து 'ஸ்பெஷல் குஷன் சேர்' போட்டு அவரை உட்கார வைத்தார்கள்.

நான் ஜீனத்தைக் கவனித்தேன்.

[6]

''குட் மார்னிங் சார்'' என்றபடி உள்ளே நுழைந்த தன் குடும்ப வக்கீலை பானர்ஜி வரவேற்றார்.

''குட்மார்னிங். உயில் தயார் பண்ணிட்டீங்களா?''

''ஓ...யெஸ். முடிச்சிட்டேன். நீங்க சொன்ன மாதிரியே எழுதியிருக்கேன். இதோ பாருங்க.''

புரொபசர் வாங்கிப் பார்த்தார். ''அப்புறம் இந்த விளம்பரத்தையும் பேப்பர்லே கொடுத்திடுங்க.''

''ஓ.கே. சார்.''

மறுநாள் ஆபீசுக்கு வரும்போது என்னுள் இளிப் ரிச்சர்ட் உரக்கப் பாடிக்கொண்டிருந்தான். என்னைச் சுற்றி உற்சாக தேவதைகள்! 'பின்னே இருக்காதா? இதோ இன்னும் கொஞ்ச நேரத்தில் நிருபா வரப்போகிறாள். மீதிப் பணத்தைத் தரப் போகிறாள்.' எவ்வளவு? ஒன்பதாயிரம்!

டக்...டக்...டக்... யாரோ வருகிறார்கள். யார்? நிருபாவாகத்தான் இருக்கும்.'

உள்ளே இன்ஸ்பெக்டர் ஒருவர் வந்தார். ''ப்ளீஸ் உட்காருங்க!''

''உங்களைஅரஸ்ட் பண்ணி இழுத்துக்கிட்டுப் போக வந்திருக்கேன் 'நேத்து ராத்திரி பானர்ஜியைக் கொலை செய்த துக்காக!''

'நான் அட்டகாசமாகச் சிரித்தேன்.'''நான் அவரைக் கொலை செய்தேனா? யார் சொன்னது உங்களுக்கு?''

அவர் இரண்டு இளஞ் சிவப்பு காகிதத் துண்டுகளைக் காட்டினார். ஒன்று ரிசர்வேஷன் காகிதம்! இன்னொன்று சினிமா டிக்கட்! என் பேர் கூட எழுதியிருக்கு. இது எப்படி இவர் கையில் வந்தது?

''இந்த இரண்டு காகிதத் துண்டும் பானர்ஜியின் உடலுக்குப் பக்கத்தில் கிடந்தன.''

எனக்குச் சடக்கென்று ஞாபகம் வந்தது. 'நேற்று ராத்திரி டார்ச் எடுக்கும்போது, கீழே விழுந்தது இதுதானா?' மின்னலாகச் சுதாரித்து. ''நேற்று ராத்திரி சினிமாப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது இந்தக் காகிதங்களைவீசி எறிஞ்சேன். அதை எடுத்துக்கிட்டு வந்து மிரட்டறீங்களா?'' என்றேன்.

இன்ஸ்பெக்டர் ஏளனமாகச் சிரித்தார். ''மிஸ்டர், நேத்துக் கடைசி வரைக்கும் தியேட்டர்லதான் இருந்தீங்களா?''

''பின்னே?''

''பொய். நடுவிலே எழுந்து வெளியே போய்க் காரியத்தை முடிச்சிட்டுத் திரும்பி வந்திருக்கீங்க.''

''இன்ஸ்பெக்டர், உங்களோட கற்பனை அபாரம்.''

''யாருடைய கற்பனை அபாரம்னு இன்னும் கொஞ்ச நேரத்திலே தெரிஞ்சிடும்' என்றவர் வெளியே பார்த்து ''சார்''என்றார்.

'சார்' என்பவன் உள்ளே வந்தான். அவனைப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ராத்திரி தியேட்டரில் என் இடத்தில் உட்கார்ந்து அழும்பு செய்தவனாயிற்றே இவன்? எங்கே இங்கே வந்தான்?

அவர்: ''என் பெண்ணைப் பார்த்தீர்களோ, எப்பவும் பூனை கூடத்தான் விளையாடிக்கிண்டு இருக்கிறாள்..''

நண்பர்: ''அப்படியா? ஏண்டி குழந்தே, உன் பேரென்ன சொல்லு?''

குழந்தை: ''ரம்யாவ்!''

- ஜி. நடராஜன்



''என்ன மேன்? ராத்திரி ஷோ பார்க்கும் போது நீ வெளியில் போயிட்டு வரலே?''

''நீங்க யார்?''

''நானா?'' அவர் எம். ஜி. எம். சிங்கமாகச் சிரித்தார். கொஞ்சம் பயமாகவே இருந்தது.

இன்ஸ்பெக்டர் முன் வந்தார். ''சார் யாருன்னு தெரியலே? கோவா ஐ. ஜி.''

''ஐ. ஜி.யா?'' வியர்த்துக் கொட்டியது.

''ராத்திரி ஒரு ஆளைத் தேடிக்கிட்டு மப்டியிலே தியேட்டருக்கு வந்தேன். உன் சீட்டு காலியாக இருக்கேன்னு அதிலே உட்கார்ந்தேன். முக்கால் மணி நேரம் கழிச்சி நீ திரும்பி வந்தே. ஞாபகம் இருக்கா மேன்?''

என் சுருதி குறைந்தது. ''நான் டாய்லெட்டுக்குப் போயிருந்தேன்.''

''ஷட் அப். பொய் சொல்லாதே. பகதூர் எல்லா விஷயத்தையும் சொல்லிவிட்டான்.''

''பகதூர்? யார் சார் அது?''

''தெரியாது? கூப்பிடறேன் பகதூர்!''

பகதூர் வந்து நின்றான். 'கேட் கீப்பர்!'

''சார் இந்த ஆள் எனக்குப் பணம் கொடுத்து....'' அவன் சொல்லிக்கொண்டே போனான். நான் சரிந்து விழுந்தேன்.

---

[7]

மறுநாள் தினப் பத்திரிகைகள் கீழே இருக்கும் செய்தியுடன் பிரசுரமாயின.

உடனே வரவும்!

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்சால்மர்எஸ்டேட்டில் வேலை செய்து கொண்டிருந்த அம்பா என்ற பெண்ணுக்கு ஒரு பையன் உண்டு.

இப்போது அந்த வாலிபன் எங்கே இருக்கிறான் என்று தெரியவில்லை. சொத்து சம்பந்தமாகப் பேச வேண்டி உள்ளது. எனவே இந்த விளம்பரத்தைப் பார்த்ததும் வரவும். அல்லது அம்பா மகனைப் பற்றி விவரம் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(குறிப்பு: அந்த 'வாலிப'னின்இடது கையில் ஆறு விரல் இருக்கும். தாடையில் ஒரு வெட்டுக் காயம் காணப்படும்.)

வஸந்தத்தில் ஓர் வானவில்

நுவாரா எலியாவில் தினந்தோறும் நாங்கள் சுப்ரபாதம் ஒலிக்க எழுந்தோம். ஆனால் இது வேறு மாதிரியான சுப்ரபாதம். காலையிலேயே நடிகர் பிரதாப் 'ஓ' என்று கத்திக்கொண்டு (பாடுவதாக நினைப்பு) வருவார். காலையில் மட்டுமல்ல, அவருக்கு 'மூட்' வரும்போதெல்லாம் இப்படித்தான். என்ன செய்வது? அனுபவித்தேன்.

வந்த மறு தினத்திலிருந்தே படப்பிடிப்புத் தொடங்கி விட்டது. 'கோல்ப்' மைதானம், 'ஸெயின்ட் ஆன்ட்ரூஸ்' என்ற ஓட்டல் ஆகிய இடங்களில் எல்லாம் படப்பிடிப்பு நடைபெற்றது. பனி மூட்டம் என்றால் இயக்குனர் ஷூட்டிங்கை ரத்து



✕ ஸ்ரீதேவி, ராஜாமணி, ராதிகா, டெல்லி கணேஷ், பிரதாப்.

செய்வதில்லை. நாங்கள் எல்லோரும் தங்கி இருந்த வீடு இங்கே வந்து, உட்புறக் காட்சிகளைப் படம் எடுக்கத் தொடங்கி விடுவார்.

எல்லாம் கன கச்சிதமாக நடக்க எனக்கு என்னவோ போலாகி விட்டது. ''பரபரப்பு இல்லாமல் படப்பிடிப்பா?'' என்று நான் ஏங்க ஆரம்பித்துவிட்ட நேரம்! ராதிகாவின் சிகை அலங்கார நிபுணர் ஜானகி. நொண்டிக் கொண்டே ஒருவர் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொள்ள, நடந்து வந்தார். அப்போதுதான் என் கவலை தீர்ந்தது! 'என்ன? என்ன?' என்று பரபரப்புடன் கேட்டோம். ஜீப்பில் வந்து கொண்டிருந்தார்களாம். நடு வழியில் ஜீப் இன்ஜினில் திடீர் என்று நெருப்புப் பற்றிக் கொண்டு எரிய ஆரம்பித்து விட்டதாம். என்ன செய்வது என்று புரியாத டிரைவர் ஜீப்பை விட்டுக் கீழே குதிக்கச் சொன்னாராம். ஜானகியும் கீழே குதிக்க நல்ல வேளையாகப் புல்லும் மண்ணும் அதிகம் இருந்ததால் சிறு சிறு காயங்களுடன் தப்பினார். கொஞ்சம் களுக்கு அவ்வளவுதான். இதைக் கேள்விப்பட்ட ராதிகா, ''நானும் அந்த ஜீப்பில் வருவதாகத்தான் இருந்தேன். நல்ல வேளையாக இயக்குனர் அர்ஜுனை காரில் செல்லும்படி சொல்ல நான் காரில் ஏறினேன். இல்லை என்றால் என்ன ஆகியிருக்குமோ'' என்றார்.

ஸ்ரீதேவியும் பிரதாப்பும் மோட்டார் சைக்கிளில் போகும் காட்சியைப் படமாக்கும்போது வேறொரு வண்டியில் கட்டப் பட்டிருந்த 'காமிரா' கீழே டமால் என்று விழுந்து விட்டது. நல்ல வேளை அதற்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

மறுநாள் இரவு வழக்கறிஞர் வி. விஜய சுந்தரம் வீட்டில் விருந்து. பாட்டும், நடனமும் அமர்க்களப்பட்டன. அன்று எல்லோரது கண்களிலும் மின்னியவர் ஸ்ரீதேவிதான். காரணம், தமிழ், தெலுங்கு, இந்தி என்று பல மொழிப் படங்களின் பாடல்களை அவர் பாடினார். மேல் நாட்டு இசைக்கேற்ப நடனம் ஆடினார். ஆனால் உடை அலங்காரம் தமிழ் நாட்டுப் பாணிதான். ராதிகாவும் பிரதாபும் கடைசியாக வந்தாலும் இறுதிவரை ஆடியே களைத்தார்கள்.

''கந்தபோலேயில் நான் மீன் பிடிக்கப் போகிறேன் வருகிறீர்களா?'' என்று என்னிடம் பிரதாப் கேட்க, ''ஏன் விட வேண்டும்'' என்று அந்த இடத்துக்கு அவருடன் போனேன். பிறகுதான் அங்கும் படப் பிடிப்பு என்ற விஷயமே தெரிந்தது. அவர் மீன் பிடிப்பவராக நடிக்க ஸ்ரீகீதா அவருடன் பேசிக் கொண்டே உட்கார வேண்டும்.

குறிப்பிட்ட ஓர் இடத்தில் யார் சென்றாலும் ''நில்லுங்கள்! நில்லுங்கள்! அங்கே போகாதீர்கள்!'' என்று அலறினார் அர்ஜுனா. படப் பிடிப்பின் போதுதான் விஷயமே தெரிந்தது. ஸ்ரீகீதா உட்கார்ந்து வசனம் பேச வேண்டிய இடத்தில் இயற்கையாகவே இரண்டு மஞ்சள் பூக்கள் பூத்திருந்தன. அது படத்தில் விழவேண்டும்; யாரும் பறித்தோ மிதித்தோ விடக் கூடாது என்பதற்காகத் தான் இவ்வளவு அதட்டல் உருட்டல்!

வசந்தத்தில் ஒரு வானவில் யாருமே தவற விடாமல் கண்டிப்பாய்ப் பார்த்தாக வேண்டிய ஒரு படம். இதில் பல சிறப்புகள் உள்ளன. அவற்றில் முக்கியமானது முதன் முறையாக நான் இதில்தான் நடிக்கிறேன் என்பது! ஒரு நாள் மாலை ஒப்பனையாளர் கோதண்டபாணி என்னிடம் வந்து, ''டைரக்டர் உங்களுக்கு மேக்கப் போடச் சொன்னார்'' என்றார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. டைரக்டரிடம் கேட்டதற்கு ''ஒரு சிறு வேஷம். பிரதாப்பின் நண்பனாக வருகிறீர்கள்'' என்றார். ''சிறு வேஷம் என்று சொல்கிறீர்கள்? படத்தில் அனைவர் நினைவிலும் நிலைத்திருக்கப் போகிற காட்சி இதுவாகத்தான் இருக்கப் போகிறது பாருங்கள்'' என்றேன். காட்சிஎடுத்து முடிந்து சிறிது நேரத்திலே அதை வீடியோ செட்டில் பார்க்க முடிந்தது. அதுவும் வண்ணத்தில்! பிறகென்ன, பார்த்தவர் எல்லோரும் பிரமித்துப் போனார்கள்! பிரமிக்காமல் எப்படி இருக்க முடியும்? நடிப்பது சலன் அல்லவா? இந்தப் படத்தில் நான் மட்டும் அல்ல, ராதிகாவின் ஒப்பனையாளர் சக்ரபாணி, ஜானகி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

ஒரு வழியாகக் 'கொழும்பு வந்தடைந்தோம். அங்கு பார்ப்பதற்கு எவ்வளவோ இடங்கள் இருந்தாலும் படப் பிடிப்புக் குழுவினருடன் பார்த்த இடங்கள் மிருகக் காட்சிசாலை, அக்வேரியம், விகாரமாதேவி பூங்கா ஆகியவைதாம்.

மிருகக் காட்சிசாலையில் ஒரேகூட்டம். அது மட்டுமல்ல. ராதிகா ஒரு குரங்கைப் பார்த்து விட்டு பிரதாப்பைப் பார்க்க, பிரதாப்பும் அதையே செய்ய ஒரே ஆனந்த ஆரவாரம் தான். முன்பு விக்டோரியாராணி பூங்கா என்று இருந்ததுதான் இன்று சிங்களத்தின் புகழ் பெற்ற ராணி விகாரமா தேவியின் பெயரைத் தாங்கித் திகழ்கிறது.


கட்டநாயகா விமான நிலையத்துக்கு எல்லோருமே அழைத்து வரப் பட்டோம். இந்தியாவுக்கு விமானமேற அல்ல என்று பெட்டி படுக்கையுடன் கிளம்பி வந்தபின் தான் எல்லோருக்குமே தெரிந்தது. விமான நிலையத்திலும் படப்பிடிப்பு!

அன்று விமானமேறவிடினும் சீக்கிரமே புறப்படத்தான் வேண்டியிருந்தது. சென்னை திரும்பணுமா என்று எல்லோரும் ஏங்கும் வண்ணம் கலகலப்பாக இருந்தது, ''வசந்தத்தில் ஒரு வானவில்'' படப் பிடிப்புக்கான ஸ்ரீலங்கா பயணம்.

—சலன்

புகைப்படம் : கிங்ஸ்லி செல்லையா

✠ சலன், பிரதாப்



✠ ராதிகா



✠ ஸ்ரீகீதா



✠ சுமதி தேவி



கவிமணி தேசிகவிநாயகனாரும் 'பாரதியார் காலத்தை வென்ற கவிஞர்' என்பதற்குச் சான்று பகர்கின்றார். பாட்டுக்கொரு புலவன் பாரதிதான் என்று தீர்ப்புக் கொடுத்துவிடுகிறார். தம்மையே ஒரு பட்டிக்காட்டானாகப் பாவித்துக் கொண்டு பாடுகிறார்.

''பாட்டுக்கொரு புலவன்
  பாரதி அடா! — அவன்
பாட்டைப் பண்ணோடொருவன்
  பாடினான் அடா!
கேட்டுக் கிறுகிறுத்துப்
  போனேனே அடா! — அந்தக்
கிறுக்கில் உளறும் மொழி
  பொறுப்பாய் அடா!''

பட்டிக்காட்டானும் பாரதியாரின் கீதத்தைப் பாடக் கேட்டால் பாமர பாஷையிலே அவனும் பாடத் தொடங்கி விடுவான் — என்று சொல்லாமல் சொல்கிறார் கவிமணி தேசிகவிநாயகனார். பட்டிக்காட்டானையும் கவிஞனாக்கப் பாரதியின் பாட்டால் முடியும் என்றால், அதனாலும் அவன் காலத்தை வென்ற கவிஞன்தானே!

டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் ஒரு சமயம் சொன்னார்: ''பாரதியார்



பாரதி பாடிய பாயிரம்

தோன்றித் தேசிய கீதங்களைப் பாடவில்லையானால் நாடு விடுதலை பெறுவது இன்னும் பல ஆண்டுகளுக்குத் தள்ளிப் போயிருக்கும்'' என்று. அது முற்றிலும் உண்மை.

பாயிரம் என்பது காப்பியப் புலவன் நிகழ்த்தும் கடவுள் வழிபாட்டுடன் கலந்ததாகும். கவிஞன் பாரதி ஒரு புதிய தெய்வத்தையும் பாடினான். அந்தத் தெய்வத்தின் பெயர் ''பாரத மாதா''.

நான் அறிந்தவரையிலே பாரத மாதா மீது தமிழ் மொழியிலே பதிகம் பாடிய முதற் கவிஞர் பாரதியார்தான்.

பாரதியார் வடபுலத்துத் தேச பக்தர்களிடமிருந்து வந்தே மாதரம் என்னும் மந்திரச் சொல்லை ஏற்றுக் கொண்டார். விடுதலைப் போராட்ட காலத்திலே அந்த மகா மந்திரத்துக்குத்தான் என்ன மதிப்பு!

சைவர்களுக்கு 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரம் எப்படியோ, வைணவர்களுக்கு 'நமோ நாராயணா' என்ற மந்திரம் எப்படியோ, அப்படிப்பட்டது விடுதலைப் போராட்ட காலத்திலே தேச பக்த மதத்தாருக்கு 'வந்தே மாதரம்' என்னும் சொல்! அவன் பாடிய முதல் பாடலின் தலைப்பே ''வந்தே மாதரம்''தான். அவன் அளவுக்கு வந்தே மாதரம் என்னும் மந்திரச் சொல்லை வைத்துத் தேசிய கீதங்களைப் புனைந்த கவிஞன் வேங்கடத்துக்கு வடக்கே பிறந்திருப்பானா என்பது ஐயப்பாடு தான்!

விடுதலைப் போராட்ட காலத்திலே தேச பக்தர்கள் இருவர் சந்தித்தால் பரஸ்பரம் 'வந்தே மாதரம்' என்று சொல்லிக் கொள்வது வழக்கமாக இருந்தது. தேச பக்தனுக்குத் திருமணம் நடந்தால் தாலி அணிவிக்கும் சடங்கின்போது திருமண அரங்கிலே 'வந்தே மாதரம்' என்னும் மந்திரப் பேரொலி பலமுறை எழும்.

ஒரு தேச பக்தன் இன்னொரு தேச பக்தனுக்குக் கடிதம் எழுதினால் அந்தக் கடிதத்தின் தலைப்பில் இந்துக்களின் வழக்கப்படி பிள்ளையார் சுழி போடும் இடத்திலே அல்லது அதை அடுத்து வந்தே மாதரம் பொறிக்கப்படும். அந்நாளிலே தேசபக்தர்கள் சட்டத்தை மீறி ஊர்வலம் செய்வார்கள். ஊர்வலத்தினர் பாரதியாரின் ''அச்சமில்லை அச்சமில்லை, அச்சமென்பதில்லையே'' என்ற வழிநடைப்பாட்டை ஆவேசத்துடன் பாடிக் கொண்டு செல்வார்கள். 'பாரத சமுதாயம் வாழ்கவே! என்ற பாடலையும் பாடிச் செல்வார்கள். 'ஜெய பேரிகை கொட்டடா!' என்றும் இசைத்துச் செல்வதுண்டு.

இப்படிப் பாடிச் செல்லும் ஊர்வலத்தின் இரு மருங்கிலும் கைகளில் குண்டாந்தடிகளுடன் போலீஸ் வீரர்கள் தங்கள் கால்களில் அணிந்துள்ள பூட்ஸ்கள் பயங்கர ஒலி எழுப்ப நடை போட்டு வருவார்கள். தடை செய்யப்பட்டுள்ள பிரதேசத்தை ஊர்வலம் தொடுகிறபோது, திடீரெனப் போலீஸ் வீரர்கள் தொண்டர்கள் மீது பாய்ந்து குண்டாந் தடிகளால் அடித்து நொறுக்குவார்கள். அவர்களிடம் அடிபட்ட அனுபவம்அடியேனுக்கும் உண்டு. போலீசார் தங்கள் கைகளில் உள்ள தடிகளை உயர்த்தியதுமே தொண்டர்கள் 'வந்தே மாதரம்— வந்தே மாதரம்' — 'வந்தே மாதரம்' என்று மிகுந்த உணர்ச்சியோடு தங்களை மறந்து ஒலி எழுப்புவார்கள். அப்போது போலீசாரின் குண்டாந்தடி அந்தத் தேசபக்த வீரர்களின் உடம்பில் உருண்டு உருண்டு விளையாடும் என்றாலும், அவர்களுக்கு வலி தெரியாது. ஆம். அறுவைச் சிகிச்சைக்கு முன் கொக்கெயின் ஊசி போட்டுக்கொண்டது போல் ''வந்தே மாதரம்'' என்று கோஷித்துக் கொண்டிருக்கும் வரை வலி தெரியவே தெரியாது!

(மயிலை இலக்கிய வட்டம் — பாரதீய வித்யா பவன் சொற்பொழிவிலிருந்து)

ம.பொ.சி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

புத்தாண்டு மணக்க
நரசுஸ்
காபி அளிக்கும்
வெகுமதிகள்!





- 12 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டபரா செட்.
- 6 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டம்ளர்.
- 2 கிலோ நரசுஸ் காபிக்கு வண்ணத் துணிப்பை.
- 750 கிராம் நரசுஸ் காபிக்கு பெரிய எவர்சில்வர் ஸ்பூன்.
- 500 கிராம் நரசுஸ் காபிக்கு சிறிய எவர்சில்வர் ஸ்பூன்.

மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று வெகுமதிகளைப் பெறுங்கள்.

22-12-80 முதல் 21-2-81 வரை முடியும் விற்பனைக்கே இப்பரிசுகள் உரியவை.

ஜீவனுள்ள ஒரே காபி!

நரசுஸ்

"தெர்மலோ" காபி!

நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.

ADWAVE/NCC/1528

REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Sri Lanka